Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 79 • 12.02.2017

MA Holidays & Travels
Ticketing/Hotel/Holiday/Visa/Insurance
All Countries Air Ticketing




261, Power House Road,
Jaffna.
021 300 3888
077 00 666 56
www.maholiday.com
B.Mayuran
Managing Director






## இந்தவார நகரம்
## கொடிகாமம்

# நம்மூர் சொப்பன சுந்தரிகள்

## பன்னீர்செல்வம் கெத்து

## பிரபாகரனின் குடிநீரில் நஞ்சு கலந்தது யார்?


Nikon's Photo & Video
நிக்கோண்'s போட்டோ & வீடியோ
திருமண வைபவங்கள்
பூப்புனித நீராட்டு விழாக்கள்
பிறந்நாள் நிகழ்வுகள்
அனைத்து நிகழ்வுகளுக்கும்
துள்ளியமாகவும் அழகாகவும்
நிகழ்வுகளை பதிவு செய்துகொள்ள
முடியும்....
077 918 4538
021 224 0119
கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம், யாழ்ப்பாணம்


இப்போது கரவெட்டி சாமியன் அரசடியில் சகல வசதிகளுடன்
தேவா மணி மண்டபம்
திருமண விழா, பூப்புனித நீராட்டுவிழா பிறந்த தின விழா
மற்றும் சகல மங்களகரமான நிகழ்விற்க்கும்
சைவ அசைவ உணவுகளுடன் ஆனந்தமாக கொண்டாடிட
நீங்கள் நாட வேண்டிய ஒரே மண்டபம்
தேவா மணி மண்டபம்
சாமியன் அரசடி
கரவெட்டி
தொடர்புகளுக்கு
0775756402
0779598854


குமரன் கட்டிடப் பொருள் விற்பனையாளர்
கல், மணல், சீமெந்து, கம்பி
ஆகியவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்
RAMCO
கந்தசாமி கோவிலடி
இணுவில் மேற்கு இணுவில்


கற்பகவேலன்
பாட்டி சொப்
& சேசனறி
இணுவில்
T.P: 077 161 8316 (சுதா)


Tharuna Digital Media Works
தொலைக்காட்சிக்கான சகல
அலைவரிசைக்கான மீல் நிரப்பல்
செய்து கொடுக்கப்படும்
#3, Bus Stand,
Paranthan
077 080 1430
021 228 0013
a.dilaksan21@gmail.com




## கள்ள உறுதி காட்டிய விமல்!

தேசிய சுதந்திரன முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சமயத்தில் குண்டொன்றை தூக்கிப் போட்டிருந்தார். ஜேவிபி தலைவர் அனுரகுமார திசாநாயக்கவிற்கு சொந்தமான மாளிகையொன்று அயர்லாந்தில் இருக்கிறதென்பதே அது. ஊழல், சொத்து சேர்க்கும் அரசியல் கலாசாரத்திற்கு எதிராக குரல்கொடுத்துவரும் அனுரகுமாரவும் இப்படியானவரா என்ற கேள்வி அதையடுத்து எழுந்தது.

விமலுக்கு ஆதரவான இணையத்தளத்தில் அந்த குற்றச்சாட்டு முதலில் வெளியானது. அந்த மாளிகையின் உரிமைப்பத்திரம் அனுரகுமாரவின் பெயரில் இருப்பதையும் காண்பித்தது.


ஜேவிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் அண்மையில் பிரித்தானியாவிற்கு விஜயம் செய்திருந்தார். அப்போது அவர் அயர்லாந்திற்கும் சென்றிருக்கிறார். விமல் குறிப்பிட்ட மாளிகையை கண்டறிந்து, அந்த வீட்டின் உண்மையான உரிமையாளர் யார் என்ற விபரத்தை அங்குள்ள உள்ளூர் நிர்வாக அதிகாரிகள் மூலம் உறுதிப்படுத்தி ஆவணங்களை எடுத்து வந்துள்ளார். அது அயர்லாந்துகாரரின் மாளிகை. அண்மையில் தொலைக்காட்சி விவாதமொன்றில் ஜேவிபி சார்பில் கலந்து கொண்டவர் அந்த ஆவணங்களை மேசையில் வைத்ததும், விமல் தரப்பிலிருந்து கலந்து கொண்டவர் திக்குமுக்காடி மௌனமாகிவிட்டார்.

விமல் தரப்பு காண்பித்தது, போலி ஆவணமாக இருக்கலாம்.

## சஜித்தின் மனைவியும் அப்படியா?

அமைச்சர் சஜித் பிரேமதாசவின் மனைவியான ஜலனி பிரேமதாசாவினால் நடத்தப்படும் சொகுசு அழகு நிலையம் செலுத்த வேண்டிய கட்டிட வாடகையை கடந்த ஏழு வருடங்களாக செலுத்த வில்லையென குற்றம்சாட்டப் பட்டுள்ளது.

கொழும்பு மெட்லண்ட் க்ரசண்ட் பகுதியில் அமைந்துள்ளது அந்த சொகுசு அழகுநிலையம். சஜித் அமைச்சராக பதவி வகிக்கும் கடந்த இரண்டாண்டுகள் மட்டுமல்ல, மகிந்த ஆட்சியில் இருந்த கடைசி ஐந்தாண்டுகளிலும் கடைக்கு வாடகை செலுத்தப்பட்டிருக்க வில்லை.



ஜலனிக்கு நெருக்கமான ஒருவர், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் கடமையாற்றியதாகவும், அவரால் கட்டிட உரிமையாளர் மிட்டப்பட்டே வாடகைப்பணம் வழங்காமலிருந்த தாக கட்டிட உரிமையாளரான திஸாநாயக்க என்பவர் குற்றம்சாட்டி யுள்ளதாக சிங்கள இணையமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.


## பிரியாணி பாய்க்கு வரும் சோதனை!

டுபாய் பாய் என அழைக்கப்படும் முஷ்டாக் என்பவர் இப்போது பொலிஸ் நிதி குற்றத்தடுப்பு பிரிவின் (எவ்சிஐடி) பார்வையில் சிக்கியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில், ராஜபக்ச குடும்பம் மற்றும் அரசபிரவுக்கள் விருந்துபாசரத்தில் பிரியாணி வழங்குபவரே இந்த டுபாய் பாய். பின்னர் வெளிநாடுகளிலிருந்து வாகனங்களை இறக்குமதி செய்யும் வர்த்தகத்தையும் மேற்கொண்டார். பிரியாணி வர்த்தகத்தின் மூலம் ராஜபக்சக்களிற்கு நெருக்கமாகி, பணத்தை மோசடியாக பெற்று இந்த தொழிலை செய்ததாக எவ்சிஐடி கருதுவதால் இவர் இலக்கு வைக்கப்பட்டுள்ளார்.



பிரபுக்கள் விருந்துப்பசாரத்தில் பிரியாணி வழங்கிய இவர் யோஷித ராஜபக்சவுடன் நெருக்கமாக செயற்பட்டதாக கூறப்படுகிறது. இதன்பின் வாகனங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய தொடங்கினார். அரசதலைமையின் நெருக்கத்தால் குறைந்த வரியில் வாகனங்களை இறக்குமதி செய்துள்ளார். கடந்த ஜனவரி 8ம் திகதி ராஜபக்சக்கள் தோல்வியடைந்த அன்று, அலரி மாளிகையில் மகிந்தவுடன் கூடியிருந்த பிரதானிகளில் டுபாய் பாயும் ஒருவர் என்றும், அன்று அவர் கண்ணீர்விட்டு அழுதார் என்றும், செல்லுபடியாகும் முத்திரையின் மூலம் 150 மில்லியன் ரூபாக்களை யோசித பெற்றுக்கொடுத்தார் என்று சிங்கள இணையமொன்றும் தகவல் வெளியிட்டுள்ளது.

ராஜபக்சவுடன் நெருக்கமாக செயற்பட்ட டுபாய் பாய், ஆட்சி மாற்றத்தின் பின் வாகன இறக்குமதி வர்த்தகத்தை இரண்டு மடங்காக்கியுள்ளார். இந்த நிலையிலேயே அவர் குறிவைக்கப்பட்டுள்ளார். விரைவில் பொலிஸ் நிதி குற்றத்தடுப்பு பிரிவிற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவார் என தெரிகிறது.



## தனக்கு தானே தண்டனை வழங்கியவர்!

குருணாகல் மாவட்டத்தில் கடந்த 20 வருடங்களாக மயானத்தில் வாழ்ந்துவரும் நபர் ஒருவர் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது. 75 வயதான ரனவிர ஆராய்ச்சி தொன் டேவிட் என்பவரே இவ்வாறு கல்லறையில் வாழ்ந்து வருகிறார். கல்லேவெல, கலாவெவ பிரதானவீதியில் பெலியகந்த பகுதியில் உள்ள பொதுமயானத்தில் வசித்து வருகிறார்.

அவர் பொதுசுகாதார பரிசோதகராக நாட்டின் பல பகுதிகளிலும் பணியாற்றியுள்ளார். அநுராதபுர அலுவலகத்தில் பணியாற்றிய சமயத்தில், மாட்டிறைச்சி கடை உரிமையாளர் ஒருவரிடம் 300 ரூபா இலஞ்சம் வாங்கியிருக்கிறார். அதன்போது கைதாகி, சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார். இரண்டு வருடத்தின் பின்னர் விடுதலையான போதும், தொழிலை இழந்து விட்டார்.

விடுதலையான பின் பல்வேறு இடங்களிலும் ஆங்கிலம் கற்பித்துள்ளார். செய்த தவறு தனது மனச்சாட்சியை உறுத்திக் கொண்டிருந்தது. அதற்கான தண்டனையை நானே வழங்கினேன். மயானத்தில் வாழ்வதுதான் தண்டனை என அவர் கூறியுள்ளார்.

இந்த பிரதேசத்தில் உள்ள மக்கள் வழங்கும் உணவை உண்டு வாழ்க்கையை நடத்தி வருகிறார். உறவினர்களின் தொடர்பே வேண்டாம் என்றுதான் வசிப்பதாகவும், அவர்களை மறந்து விட்டதாகவும் கூறியுள்ளார். இவர் திருமணம் செய்யாதவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கடன் வைத்த மகிந்த

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டு பயணங் களிற்காக பயன்படுத்தப்பட்ட விமானங்களின் வாடகைப்பணம் செலுத்தப்படாமல் உள்ளது. ஜனாதிபதி செயலகத்தால் செலுத்தப்பட வேண்டிய தொகை சுமார் 11 கோடியென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக பதவி வகித்த காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பத்து விமானப் பயணங்களிற்காக 11.34 கோடி பணம் செலுத் தப்பட வேண்டியுள்ளது. ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் திருப்பதிக்கு மேற்கொண்ட இரண்டு பயணங்களும் இதில் உள்ளடக்கம். திருப்பதி பயண செலவு 39 இலட்சத்திற்கும் அதிக மானது.

மகிந்த ராஜபக்சவின் வெளிநாட்டு பயணங் களின்போது குடும்ப உறுப்பினர்களை அதிகளவில் இணைத்துக் கொள்வது குறிப்பிடத்தக்கது.

# கேட்பாரில்லா பிலவு மக்கள்



நரசிம்மன்

“எங்களது பூர்வீக நிலங்களை மட்டும் எங்களிடம் வழங்கிவிடுங்கள். எங்களிற்கு உரித்தில்லாத அணுவளவு நிலத்தையும் நாம் கேட்கவில்லை“

இதுதான் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக கேப்பாப்பிலவு பகுதியில் போராடிக் கொண்டிருக்கும் மக்களின் ஒரே கோரிக்கை. இதை எழுதிக்கொண்டிருக்கும் போது, ஒரு வாரத்தை தொட்டுவிட்டது போராட்டம். அது உடனடியாக முடிவிற்கு வருவதற்கான வாய்ப்புக்களும் தென்படவில்லை. குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என அத்தனை விதமான மனிதர்களும் போராட்ட களத்தில் நிற்கிறார்கள். எங்கள் நிலத்தை திரும்ப பெறாமல் இடத்தைவிட்டு நகர மாட்டோமென்ற உறுதியுடன் போராட்ட களத்தில் இருக்கிறார்கள்.

ஒரு வாரமாக பனி, வெயில், இரவு, பகலாக நடுவீதியில் கூடாரம் அமைத்து போராடி வரும் மக்களை அரசு திரும்பியும் பார்க்கவில்லை. பொறுப்பான தலைவர்களோ, அதிகாரிகளோ ஒரு வார்த்தை பேசவில்லை. இதுவரை செய்ததை போல போலியாகவும் ஒரு வாக்குறுதி கொடுக்கவில்லை. வவுனியாவில் செய்ததை போல அமைச்சரொருவரை அவசரமாக அனுப்பி போராட்ட அலையை நீர்த்துப்போக காரியம் பார்க்கவில்லை. காரணம், போராடுவது தமிழர்கள். ஆள்வது சிங்களவர்கள்.

பாடசாலை அதிபரை மாற்று, வீதியை புனரமை என்பது மாதிரியான கோரிக்கையுடன் நீங்கள் வீதிக்கிறங்கியிருந்தால் தேசிய கட்சிகள், அதன் பங்காளி கட்சிகளின் பிரதிநிதிகள் வரிசையாக வந்திறங்குவார்கள். “நீங்களும் ஆட்சியின் பங்காளிகள். உங்களை கைவிடுவோமா” என்பதை போன்ற கவர்ச்சியாக வார்த்தைகளால் மக்களை சரிக்கட்டி அனுப்பிவிடுவார்கள். அடுத்த தேர்தலில் எத்தனை வாக்குகள் அதிகரிக்கின்றன என்ற கணக்கை அவர்கள் மனங்கள் பார்க்கத் தொடங்கும்.

ஆனால், நாங்கள் ஆளப்பிறந்தவர்கள்ஞ் நீங்கள் தோல்வியடைந்தவர்கள் என்ற சமநிலையை குலைக்கும், அந்த மன நிலையை கேள்விகேட்கும் கோரிக்கைகள் எதையும் நீங்கள் கேட்கக்கூடாது. அப்படி கேட்டால், அரசு பொறுக்காது. முன்னைய மகிந்த ராஜபக்ச ஆட்சியில் என்றால் அந்த இடத்தில் சுடப்பட்டிருப்பார்கள். இனவாதத்தில் வேர்கொள்ளும் அதிகாரம், பின்னர் அதிகார வெறியாகிறது. அதன்பின் சொந்த இனத்தையும் அது மிருகத்தனமாகவே அணுகும். அதற்கு தமிழில் நிமலரூபன் தொடக்கம் சிங்களத்தில் வெலிவேரிய வரை நிறைய உதாரணங்கள் உள்ளன.

ஆட்சிமாற்றம் சிங்கள மனநிலையின் மாற்றமா என்றால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். இல்லையெனில், நிலங்களை விடுவிக்க கோரி எத்தனையோ போராட்டங்கள் நடந்த கடந்த இரண்டு வருடங்களின் பின், வடக்கு கிழக்கில் தனியார் காணிகள் அரசபடைகளிடம் இருக்காதல்லவா?

“உங்கள் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிமடுக்கிறதுதானே, வவுனியாவிற்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரையே அனுப்பவில்லையா” என்று சில அரச அனுதாபிகள் கேட்கலாம். எந்த கோரிக்கையை, எப்படி அரசுகள் கையாள்கிறதென்ற தெளிவு தமிழர்களிற்கு கிடையாதென அவர்கள் நினைக்கலாம். ஆனால் அகிம்சை, ஆயுதவழி போராட்டங்களில் 60 வருடங்களிற்கு மேலான அனுபவத்தை கொண்ட உலகத்தின் மிக மூத்த போராடும் சமூகமான ஈழத்தமிழர்கள் இந்த நுண்ணரசியலையும் புரிந்து கொள்ள முடியாத முட்டாள்கள் அல்லவே.

காணாமல் போனவர்கள் விவகாரத்தில் பழி முழுவதையும் கடந்த அரசில் சுமத்திவிட்டு, பொலிசார் தேடிப்பார்த்தனர், ஒரு தகவலும் கிடைக்கவில்லையென்று துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு தற்போதைய அரசு போய்விடும். காணாமல் போனவர்கள் வெளிநாடு சென்றிருக்கலாமென வாய் கூசாமல் சொன்ன பிரதமருக்கு, இதை சொல்ல என்ன தயக்கம் இருக்கப் போகிறது?

காணாமல் போனவர்கள் விவகாரத்தால் இந்த அரசு அதிகசங்கப்படப்போவதில்லை. ஆனால், உயர்பாதுகாப்பு வலயங்கள் அப்படியல்ல. இந்த அரசு தமிழர்களும் பங்காளிகள் என வரிக்குவரி சொல்லும் இந்த அரசு பதில் சொல்லியாக வேணும். புலிகளே இல்லை, இனி ஆயுத கலாசாரம் தலைதூக்கவே முடியாதென்றுதான் தெற்கு தலைமைகள் சொல்கின்றன. இல்லாத புலிகளிற்கு எதற்கு காவல்? எதற்கித்தனை படை முகாம்கள்? இத்தனை ஆயிரம் படையினர் எதற்கு?

வலிகாமம் வடக்கில், கேப்பாபிலவில், சம்பூரில் இன்னும் ஏராளமான இடங்களில் படையினரின் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்கின்றன. இந்த எல்லா இடங்களிலும் மக்கள் போராட்டங்கள் நடந்துவிட்டன. ஆனால் முடிவில்லை. முறையான பதிலுமில்லை.

தமிழர் பிரதேசத்தில் எங்கெல்லாம் படையினர் நிலைகொள்வார்கள், எவ்வளவு நிலங்களை கைப்பற்றுவார்கள் என்பதையெல்லாம் தமிழர்கள் திருப்பிக் கேள்வி கேட்ககூடாதென அரசும், இராணுவமும் நினைக்கிறது. கேப்பாபிலவு போராட்டம் அதற்கு ஆகப்பிந்திய உதாரணம். போராடும் மக்களை பற்றி அரசு ஒரு வார்த்தை பேசவில்லை. அந்த மக்களை முகாமில் உள்ள படையினர் எல்லா கெட்ட வார்த்தையிலும் திட்டுகிறார்கள்.

போராடும் மக்களுடன் முகாமில் உள்ள படையினர் நடந்து கொள்ளும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. “உங்களுக்கெல்லாம் இப்ப துணிவு வந்திட்டுது”பாணியில் முறைத்து பார்த்ததும், பேசிவிட்டு சென்றதும் அதில் பதிவாகியுள்ளது.

இந்த மேலாண்மைப் போக்கை சிங்கள ஆளும், இராணுவ தரப்பு கைவிடாதவரை இலங்கை இனநல்லிணக்க முயற்சிகள் பலிக்கப் போவதில்லை.

கேப்பாபிலவு மக்களின் கோரிக்கை தமது மேலாண்மைக்கு சவால் விடுவதாக அவர்கள் கருதலாம். போர்வெற்றியின் மூலமான படையினரை ஒரு பிரதேசத்திலிருந்து மக்களின் அழுத்தத்தின் மூலம் அகற்றுவதை கௌரவ குறைவாக அரசு கருதலாம். ஆனால் இது மக்களின் வாழ்கையுடன் தொடர்புபட்டது.



அந்த மக்களிற்கு அவர்களின் மூதாதைகள் கையளித்த பாரம்பரிய நிலமது. அதில்தான் அவர்களின் வாழ்க்கையிருக்கிறது. அதில்தான் அவர்கள் பண்பாடு, கலாசாரம், வாழ்வாதாரம், ஞாபகங்கள் எல்லாமே தங்கியுள்ளது. நிலங்களிலிருந்து பிரித்தால் அவர்கள் வெறும் ஜடங்கள். நிலத்திற்கும் மனிதர்களிற்குமுள்ள தொடர்பை புரிந்து கொண்டபின் அணுகப்பட வேண்டிய விவகாரம் இது.

அண்மைய மக்கள் போராட்டங்கள் எல்லாமே அரசியல் கலப்பில்லாமல் நடந்து கொண்டிருப்பது கவனிக்கத் தக்கது. அரசியல் தலைமைகள் மக்கள் களங்களிற்குள் நுழைய முடியாத சங்கடத்தை எதிர்கொள்ள தொடங்கியுள்ளனர். அரச தொங்குதசைகளாக இருந்த கட்சிகளின் கதையை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மகிந்த ராஜபக்ச செய்த கொலைகளிற்கே புது அர்த்தம் கற்பித்தவர்கள் அவர்கள். இப்போது புது வேடம் போட்டு அரசியல் செய்கிறார்கள். அவர்களின் கதைகளை விட்டுவிடலாம். ஆனால் இந்த களங்களில் தமிழ்தேசிய கூட்டமைப்பும் ஒரு பங்காளியாக வேண்டாமா?

புலிகளே இல்லை, இனி ஆயுத கலாசாரம் தலைதூக்கவே முடியாதென்றுதான் தெற்கு தலைமைகள் சொல்கின்றன. இல்லாத புலிகளிற்கு எதற்கு காவல்? எதற்கித்தனை படை முகாம்கள்? இத்தனை ஆயிரம் படையினர் எதற்கு?

தமிழ்தேசிய கூட்டமைப்பின் உள்ளூர் பிரமுகர்கள் சிலர் இந்த போராட்டங்களில் இருக்கிறார்கள்தான். ஆனால் “தலை” யில்லாத உடல் முழுமையடையுமா?

கூட்டமைப்பின் பெருந்தலைகள் இப்படியான போராட்டங்களில் இருக்க வேண்டும். அப்போதுதான் போராட்டங்களின் கனதி அதிகரிக்கும். இல்லாவிட்டால், இப்படியான மக்கள் எழுச்சிகளை வெறும் சிறுகுழுவின் எதிர்ப்பென நா கூசாமல் அரசு சொல்லும். அரசு சொல்வது இருக்கட்டும். எங்களை யாரும் கண்டுகொள்கிறார்கள் இல்லையென்ற கேப்பாபிலவு மக்களின் ஆதங்கத்தின் ஒருதுளியும் கூட்டமைப்பின் மீது விழாமல் பார்ப்பது கூட்டமைப்பு தலைமையின் காலக்கடமை.

## கூட்டமைப்பின் பெரும் பொறுப்பு!

கேப்பாபிலவில் நடக்கும் மக்கள் போராட்டம் அரசியலில் இன்னும் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தவில்லையென்ற துயரமான உண்மையை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். வடக்கில் நடக்கும் சிறு ஆர்ப்பாட்டங்களே பெருஞ் செய்தியும், சம்பவமும் ஆகிவரும் நிலையில் கேப்பாபிலவு போராட்டம் அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்த இன்னும் எத்தனை காலம் தேவையென்ற அதிர்ச்சியான கேள்வியுள்ளது.

கேப்பாபிலவு மக்களின் போராட்டம் ஆட்சியாளர்களின் காதுகளிற்கு இன்னும் எட்டவில்லை. பத்தாவது நாளில்தான் பாராளுமன்றத்தில் ஓரளவு பேசப்பட்டது. தெற்கு ஆட்சியாளர்களின் காதுகளை எட்ட காலமானது இருக்கட்டும். தமிழர்களின் ஏகோபித்த பிரதிநிதிகளான தமிழ்தேசிய கூட்டமைப்பு ஏன் இதில் மௌனமாக இருந்தது?

அண்மைய வடக்கு போராட்டங்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு வெளியில் நடந்து கொண்டிருக்கின்றன. ஒருகாலத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு முன்னெடுத்த, தலைமைதாங்கிய பிரச்சனைகள்தான் இவை. ஆனால் இன்று கூட்டமைப்பு பிரச்சனையிலிருந்து சற்று தள்ளி நிற்பதை போன்ற தோற்றமுள்ளது.

இந்த அரசின் உருவாக்கத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கும் பங்குண்டு. அதனால் மக்கள் எழுச்சிகளில் பதில் சொல்ல வேண்டிய நெருக்கடியை அது உருவாக்கியுள்ளது. அதேசமயத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்ற மகத்தான பணியை செய்யும் சமயத்தில் சின்னசின்ன பிரச்சனைகளால் முரண்பாடுகளை வளர்க்காமல் அதை கச்சிதமாக செய்ய வேண்டுமென கூட்டமைப்பு தலைமை நினைக்கிறது.

நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட்டால் தற்போதுள்ள அன்றாட பிரச்சனைகள் காணாமல் போய்விடும் என்ற தர்க்கம் சரியானதுதான். ஆனால் பிரச்சனை என்னவென்றால், அரசியலமைப்பு உருவாக்க பணிகளில் சிறிய தொய்வு இருப்பதை போன்ற தோற்றம் அண்மைய நாட்களில் ஏற்பட்டதே.

உத்தேச அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போதைய சூழலில் அரசியலமைப்பு திருத்த பணிக்கு தடைகள் அதிகம். அது வரவே வராதென்ற அவநம்பிக்கையை விதைப்பதல்ல நமது நோக்கம். இப்படியான மகத்தான பணிகள் இலகுவாக நடந்துவிடக்கூடியதல்ல. அதேநேரம் கரணம் தப்பினால் மரணம் பாணி அரசியல் அணுகுமுறைகளை கையாளும்போது, ஒன்றின் மீதே அனைத்து நம்பிக்கைகளையும் ஈடுவைக்கும் அரசியலும் உகந்ததா என்ற கேள்வியும் உள்ளது.

ஏனெபில், ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாறென்பது இப்படி ஏதோ ஒரு காரியத்தில் எல்லா நம்பிக்கைகளையும் குவித்து, நம்பிய காரியம் காலை வார மொத்தமாக இடிந்து விழுந்ததுதான். இந்த பட்டறிவிலிருந்து புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

அத்தியாவசிய பிரச்சனைகளை வலியுறுத்துவது, மத்தியுடன் முரண்பாட்டை தோற்றுவிக்கும், அந்த பணிகள் தென்னிலங்கை இனவாதிகளிற்கும் அவல் கொடுக்கும், அரசியலமைப்பு உருவாக்க பணிகளை தாமதப்படுத்தும், தேவையற்ற தாமதங்களை ஏற்படுத்தும் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால், அது எல்லாவற்றிலும் உண்மையானது பாதிக்கப்பட்ட மக்கள் வீதியிலிருக்கிறார்கள் என்பது. அவர்களிற்கு நிவாரணம் கிடைக்கவில்லையென்பது.

இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும், காணாமல் போனவர்களின் கதி கண்டறியப்பட வேண்டும், உடமை இழப்புக்கள் சரி செய்யப்பட வேண்டும், வாழ்வாதாரம் கட்டியெழுப்பட வேண்டும், அபிவிருத்தி பணிகள் நடக்க வேண்டும். அரசியல் தீர்வை கண்டடையும் முயற்சிகளிற்கு சமாந்தரமாக அத்தியாவசிய பிரச்சனைகளை தீர்க்கும் முயற்சிகளையும் கொண்டு நகர்த்த வேண்டும். அதுதான் சாதகமான பலனைத் தரக்கூடியது.

ஆனால் இது சவால்மிக்க பணி. இனங்களிற்கிடையில் அதிக பதற்றமுள்ள சூழலில் இந்த பணிகளிற்கு பல்வேறு அர்த்தம் கற்பிப்பது இனவாதிகளிற்கு வாய்ப்பாகியும் விடலாம். ஆனால் அரசியல் தீர்வு முயற்சிகளின் ஒரு அங்கமாக இனவாதிகளை கட்டுப்படுத்துவதும் அமைய வேண்டும். இல்லாவிட்டால் இனவாதிகளை பார்த்து பயந்து கொண்டிருப்பதிலேயே காலம் கழிந்துவிடும்.

அரசியலமைப்பு உருவாக்கம் ஒரு வேலைத்திட்டமாகவும், அத்தியாவசிய பிரச்சனைகள் தீர்வை ஒரு வேலைத்திட்டமாகவும் ஒரே சமயத்தில் முன்னகர்த்தும் இரட்டை பொறிமுறையை கூட்டமைப்பு உருவாக்க வேண்டும். அரசியலமைப்பு உருவாக்கம் என்ற மாபெரும் பணியில் நம்பிக்கையுடன் எல்லோரும் ஈடுபட்டுள்ளனர். எனினும், அது தோல்வியில் முடியலாம் என்ற எச்சரிக்கையுணர்வு தமிழர் தரப்பிற்கு அவசியம். அந்த எச்சரிக்கையுணர்விலிருந்தே காய்களை நகர்த்த வேண்டும். அப்படியானால்தான் அதிக வெற்றிகளை ஈட்டிக்கொள்ளலாம்.

தமிழ்தேசிய கூட்டமைப்பு அனைத்தையும் பார்த்து கொள்ளும் என்ற நம்பிக்கையில்தான் மக்கள் அவர்களை ஏகோபித்த பிரதிநிதிகள் ஆக்கினார்கள். அரசியல் தீர்வும் அதில் அடக்கம். அத்தியாவசிய பிரச்சனை தீர்வும் அதில் அடக்கம். அந்த நம்பிக்கையை பொய்க்க விடாமல் காப்பாற்றுவதே கூட்டமைப்பின் பெரும் பணி.

தீபம்
197, அரசடிவீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
விநியோகம் 0768255563
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk





# இணுவிலின் தைப்பூச திருமஞ்சமம்

தமிழ்த் தெய்வமாம் முருகப் பெருமானுக்கென ஆலயம் அமைந்த பண்டைய ஊர்களில் இளையிலி என அழைக்கப்படும் இணுவில் ஊரும் ஒன்றாகும். தமிழர் தம் நாகரீகங்களில் ஒன்றான குளத்தங்கரை நாகரீகத்தை அன்றைய காலத்தில் தன்னகத்தே கொண்டு காணப்பட்ட சிறப்பு இவ்வூருக்கு உண்டு. செங்கரும்பும் செந்நெல்லும் கழுகும், பலா, மா, வாழை, கனிவர்க்கங்களும் செழித்தோங்கிய நிலப்பரப்பான இணுவிலில் திருக்கோவலூர் பேராயிடையோன் முதலி ஆட்சி தலைவனாக இருந்தான் என யாழ்ப்பாண வைபவமாலை 4றுகின்றது. (இவனத காலம் கி.பி.1345) இத்தகைய ஊரில் அமைந்த கந்தன் ஆலயம் புராதன வரலாற்றாதாரங்களை தன்னகத்தே கொண்டதாகவும் காணப்படுகின்றது.

சோழர்காலத்து முருகவழிபாடு யானைமேல் வேல் வைத்து வழிபடும் மரபாகத் திகழ்ந்து. இவ்வாலயத்தின் தீர்த்தக் கிணற்றில் காணப்படும்... அவள்ளைக்கல்லால் ஆன யானை முன்பு வேல் தாங்கி மூலஸ்தானத்தில் இருந்ததாக மூத்தவர் சிலர் கூறுவது உண்டு. இம்மரபு சோழர்காலத்திற்குரிய வழிபாட்டு மரபே.

இத்தொன்மை வழிபாட்டுடன் ஒற்றமையுடைய தாய் தமிழர் தம் பெருநாளான தைப்பூசத்திருநாளும் அமைந் திருப்பது நோக்கப்பட வேண்டிய ஒன்றே. அன்றைய காலத்தில் இங்க அமையப்பெற்ற இருகுளங் களால்நீர் பாய்ச்சற்பெற்று விளைநிலங் களில் விளைந்த அவர் தம் ஆநிரைகள் சொரியும் பாலினால் வேற்பெருமானுக்க அபிஷே செய்தும் ஆனந்தக்காவடி ஆடியும் தமது நன்றிக் காணிக்கையை தைப்பூசத்திருநாளில் செலுத்தி வந்தனர்.



இவ்வாலயச் சூழலில் ஆண்டவனின் அருட்கருணைப் பேற்றிற்கு ஆளானவர்கள் பலர் அவர்களுள் பெரியசந்தியாசிரியர் என அழைக்கப்படும் அருளானரால் அமைக்கப் பெற்றதே இன்று நாம் காணும் இணுவைத் திருமஞ்சமாம் உலகப் பெருமஞ்சமம். காலத்தால் ஒரு நூற்றாண்டினைத் தாண்டியும் அளவுப் பிரமாணத் தால் 48அடி உயரத்தினையும் கொண்டு கண்கவர் சிற்பக்கூடமாகவும் திகழும் இத்திருமஞ்மம் 1912 ஆம் ஆண்டளவில் வெள்ளோட்டம் கண்டது. உலகின் முதல் மஞ்சமாகக் கருதப்படும் திருமஞ் சத்தினை சண்முகப்பெருமானே சித்தரது அருள் நித்திரையில் தோற்றுவித்தரளினார். இவ்வகத் தோற்றத்தினை புறத்தோற்றமாக அமைக்கக்கூடி சிற்பவல்லுனர்களையும் எம்பெருமானே தென்னிந்தியாவில் நின்றும் அழைத்து வந்ததாக ஓர் அருட்கதை ஊர்மக்கள் மத்தியில் உண்டு. இப்பதிய திரமஞ்சத்தின் மூலம் இவ்வாலயத்தின் தைப்பூசத் திருவிழா பாலுடன் தேன் கலந்தாற் போலாயிற்று எனலாம்.


இம்மஞ்சம் அமையப்பெற்ற பிரதேசம் "மஞ் சத்தடி" என்றும் காரப்பெயர் கொண்டு இணுவிலின் கிழக்குப் பகுதியில் இவ்வூரின் குறிச்சியாகக் காணப்படுகின்றது. இவ்விடத்தில் மஞ்சத்தை உருவாக்கிய சித்தர் சன்னியாசிரியரது சமாதிக் கோவில் அருணாகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் என்னும் பெயருடன் காணப்படுகின்றது.

இத்தகைய பழமையும் மிக்க திருமஞ் சத்தில் சண்முகப் பெருமான் எழுந்தருளி தைப்பூசத்திருவிழாவன்று வீதி உலாவருவது கண்கொள்ளாக்காட்சியாகும். இப்பெரமஞ்சத்தில் பவனிவரும் சண்முகப்பெருமான் திருவவுருவம் இவ்வாலயத்தின் சிவாச்சாரியராக இருந்த செல்லையா சின்னையர் என்பவரால் கி.பி.1884 ஆம் அண்டளவில் உருவாக்கப்பட்டது.

ஐயரின் சொற்பனத்தில் காட்சிகொடுத்த சண்முகப்பெருமான் எவ்விடத்தில் அமையப் போகிறேன். என்ன அளவுப் பிரமாணத்தை தாங்கி நிற்பேன் எனக் கூறியமைக்கமைவாக வண்ணார் பண்ணையில் ஸ்தபதியின் வீட்டில் அதி உயர் அளவப் பிரமாணத்தில் சண்முகர் விக்கிரம் உருவாக்கப்பட்டதாகக் 4றப்படுகின்றது. இத்திருவுருவம் போன்ற சண்மகப் பெருமான் திருவுருவத்தை வேறு எங்கும் காணமுடியாது என்பத மெய்யன்பர்களின் கருத்து.

தொன்றுதொட்டு நடைபெற்று வந்த இவ்விறைகைங்காரியங்கள் இன்றும் இவ்வாலயத்தில் தைப்பூசத்திருவிழாவன்போது நடைபெறுவது கண்கூடு பக்தகோடிகள் பாற்குடம் தாங்கியும் காவடி எடுத்தும் பொங்கலிட்டும் தைப்பூசத்தினத்தன்று தமது வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர்.

வேண்டவர் வேண்டுவதை ஈர்ந்தருளும் கருணைக்கடலான கந்தப்பெருமான் தேவர் குறைதிர கிரவுஞ்ச கிரியைப் பொடியாக்கி தாரகளைத்தனடியிற்சேபித்த பொன்னாளான தைப்பூசத்திரநாளில் அடியவர் குறைதீர எம்பெருமான் திருமஞ்சத்தில் பவனிவந்து வேண்டுவோர் வினை நீற்பது நாம் பெற்ற பாக்கியமெனக் கருதி எம்பெருமானைத் தைப்பூசத் திருநாளில் துதிப்போர்ப்பாமாக...







# நிரந்தரமாக மூடப்படுமா

## வவுனியா புதிய மத்திய பேருந்து நிலையம்

**வன்னிமது**

மக்களின் தேவைகள், சேவைகளை கருத்தில் கொள்ளாமல் அமைக்கப்படும் திட்டங்கள் அணைத்தும் இறுதியில் வீணாகவே செல்கின்றன. அபிவிருத்தி என்ற பெயரில் மக்களிற்கு பயன்படாத இடங்களில் கட்டப்படுவதால் அவை இறுதியில் ஆடு, மாடுகளின் கூடராமாகவே மாறுகின்றது. வவுனியா நகரம் அதிகளவு அரச நிலங்களை உள்ளடக்கிய ஓர் நகரமாகும். பழைய பேருந்து நிலையம் அதனை சூழ உள்ள பல பிரதேசங்கள் அரசிற்கு சொந்தமானது. அத்துடன் பழைய பேருந்து நிலையத்திற்கும் வவுனியா மத்திய புகையிரத நிலையத்திற்கும் இடையில் சில மீற்றர் இடைவெளியே உள்ளது. அதன் அடிப்படையில் ஆரம்ப காலத்தில் பழைய பேருந்து நிலைத்திற்கும் புகையிரத நிலையமும் எதிர் எதிரே இருக்குமாறு அமைப்பதற்கான யோசனைகள் வைக்கப் பட்டிருந்தன. ஏன்எனில் இரண்டு நிலையங்களிற்கும் இடையில் அரசிற்கு சொந்தமான நிலங்களே காணப்பட்டதால் இதற்கான சாத்தியம் இருந்த போதும் மக்கள் பிரதிநிதிகளின் அசன்டையீனங்களால் மகிந்த ஆட்சியின் போது ஏ9 வீதியில் அமைந்துள்ள வடமாகாணசபையின் கீழ் உள்ள விவசாய பண்ணைக்கு சொந்தமான காணியில் ஒரு பகுதியினை பெறப்பட்டு 195 மில்லியன் ரூபாய் செலவில் புதிய மத்திய பேருந்து நிலையம் ஏ9 வீதி அருகாமையில் அமைக்கப்பட்டது.

இவ் பேருந்து மத்திய நிலையம் அமைப்பதற்கு மக்கள் பிரதிநிதிகள் உட்பட தனியார்துறை, மக்கள் என பலரும் எதிர்ப்புத்தெரிவித்திருந்தனர். இருந்த போதும் மக்கள் பிரதிநிதிகள் அதற்கான சரியான தீர்வை எடுக்க முடியாமையால் இப் புதிய பேருந்து மத்திய நிலையம் மத்திய அரசினால் கட்டப்பட்டது.

இப்புதிய பேருந்து நிலையம் வவுனியா நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டதுடன் கடந்த 16.01.2017 அன்று போக்குவரத்து மற்றும் பயணியர் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. இவ் மத்திய பேருந்து நிலையம் தனியார் மற்றும் இ.போ.ச யினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதும் ஆரம்பம் தொட்டு தனியார் பேருந்து ஊழிர்கள் மற்றும் அரச பேருந்து ஊழியர்களுக்கிடையிலான இடம் பெற்ற முறுகலின் உச்சகட்டமாக முல்லைத்தீவு வவுனியா அரச பேருந்து சாரதி மீதான தாக்குதலினை அடுத்து உக்கிரமடைந்தது.

இதன் அடுத்த கட்டமாக வவுனியா பழைய பேருந்து தரிப்பிடத்தை தங்களுக்கு வழங்க கோரியும், ஏ9 வீதியில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்து ஊழியர்கள் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கும், இலங்கை போக்குவரத்து சபை பேருந்து தரிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தனியார் பேருந்து தரித்து நிற்பதை எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 02.02.2017ம் திகதியில் இருந்து 04.02.2017 வரை இலங்கைப் போக்குவரத்து சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பு, உணவு தவிர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதன் போது இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலைக்கு ஆதரவாக வடக்கில் உள்ள ஏனைய 06 சாலைகளை சேர்ந்த பேரூந்துகளும் பயணத்தில் ஈடுபடாமல் தமது எதிர்ப்பினை தெரிவித்தனர். அத்துடன் வவுனியா நகர வர்த்தகர்களும் இவர்களின் இப்போராட்டத்திற்கு அதரவு வழங்கும் முகமாக தமது பிரசன்னமாகியிருந்த மையை காணக்கூடியதாக இருந்தது. ஏன்எனில் புதிய மத்திய பேருந்து நிலையத் தினால் வவுனியா நகர வியாபாரிகளின் வியாபாரம் பெரும் வீழ்ச்சியடைந்தமையே இதற்கு காராணமாகும்.

இவ்வளவு நிகழ்வுகள் நடைபெற்ற போதும் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் இப் போராட்டம் நடை பெறும் இடத்திற்கு நேரடியாக செல்லா மையானதும் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் மக்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் இப்போராட்டத்தினை தூண்டும் வகையில் ஏன் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்பதை கூட அறியாமல் ஊடகங்களிற்கு அவர் வழங்கிய செவ்வி வவுனியா, மன்னார், யாழ்ப்பாணங்களில் அவரது உருவ பொம்மையை எரிக்கும் அளவிற்கு தூண்டுதலாக மாறியது. அத்துடன் வடமாகாண போக்குவரத்து அமைச்சரினால் இலகுவாக தீர்க்க கூடியதாக இப்பிரச்சனை இருந்தும் தீர்க் கப்படாமல் விட்டவீமானது போராட்டத் தில் ஈடுபட்டவர்களுக்கு மட்டுமன்றி மக்கள் மத்தியிலும் தனியார் துறையினர் மீது அமைச்சர் பக்கச்சார்பாக நடந்து கொள் வதை போன்ற தோற்றத்தை உருவாக்கிள் ளது. ஏன் எனில் 04.02.2017 வவுனியா மாவட்டச்செலகத்தில் நடைபெற்ற கலந்து ரையாடலை ஆரம்பத்திலே செய்திருந்தால் மக்கள் இந்நாட்களில் அவதிகளிற்கு உள்ளாகி இருக்க மாட்டார்கள்.

இதனால் இப்போராட்டத்தில் ஈடுபட்ட இ.போ.ச வவுனியா ஊழிர்களுடன் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாணசபை சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான மயூரன், லிங்கநாதன் என பலர் கலந்துரையாடிய போதும் இதற்கான சரியான தீர்வினை எட்ட முடியவில்லை.

இருந்த போதும் ஒரு கட்டத்தில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களினால் வெள்ளிக்கிழமை (03.02.2017) வர உள்ள வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் அவர்களை சந்திப்பதற்கு ஒழுங்கு படுத்தி தரப்படும் என்ற வாக்குறுதியை வழங்கிய போதும் அதனை செயற்படுத்த முடியவில்லை. ஏன்எனில் மறுநாள் (வெள்ளிக்கிழமை) வவுனியா வந்த முதலமைச்சர் வவுனியா பூங்காவினை திறந்து வைத்து" வவுனியாவை நாங்கள் மறந்து விட்டோம் என்ற குற்றச்சாட்டிற்கு இனி இடமில்லாமல் போய்விடலாம்" என்ற உரையையும் நிகழ்த்தி விட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் சாலையின் வீதியூடாக

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



**இ.வாமதேவன்**
(இணைந்த தொழிற்சங்க வட மாகாண செயலாளர்)

வட மாகாண போக்குவரத்து துறை அமைச்சர் 02.02.2017 அன்று தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்விக்கமைய அவர் ஏற்கனவே எமக்கு விரோதமான செயலினையே செய்துள்ளார். அத்துடன் பதவியேற்று மூன்று வருடங்கள் ஆகியும் வடமாகாணத்தில் உள்ள எந்த சாலைக்கும் இதுவரை செல்லவில்லை. இதுவரைகாலமும் எங்களால் பல வேலை நிறுத்தங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் எங்களிடம் நேரே வந்து இது தொடர்பாக கலந்துரையாடவில்லை. அவரின் அமைச்சின் கீழ் இருக்கிற எங்களிடம் வந்து ஏன் கதைக்கவில்லை. நாம் இந்த போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது 60க்கு40 பிரச்சினை இல்லை. எங்களது பேருந்து நிலையத்தை எமக்கு தர வேண்டுமே என்பதை தவிர பாதை சம்மந்தமாக இல்லை. அப்படி இருக்கும் போது நாங்கள் போராடுவது 60 க்கு 40 என்று கூறியுள்ளார். அமைச்சருக்கு எங்களை மத்திய போக்குவரத்து அமைச்சருடன் கதைத்து புதிய பேருந்து நிலையத்திற்கு செல்வதற்கு செய்ய முடியுமாயின். ஏன் எங்களது குறை நிகைளை மத்திய அமைச்சருடன் கதைத்து செய்து தர முடியாது. இதன் மூலம் இவர் ஒரு பக்க சார்பாக வேண்டும். இவ்வாறு பக்கசார்பாக நடக்கும் அமைச்சர் எமக்குதேவையில்லை.


போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சந்திக்காமலே சென்றமையானது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை மேலும் கோபப்படுத்தும் செயலாக மாறியதுடன் அவர் ஆற்றிய உரையையும் சந்தேக கண்ணுடன் பார்க்கப்பட வேண்டியதாகமாறியுள்ளது. மேலும் முதலமைச்சரின் இச்செயற்பாட்டினால் தங்களால் ஒட்டு போட்டு உருவாக்கப்பட்டவர்கள் பதவிவந்தபின்னர் தங்களை பற்றிய எந்த சிந்தனையும் இன்றி இருப்பதை என்னி போராட்டக்காரர்கள் கோபப்பட்டதுடன். எங்களது பிரதிநிதிகள் இனி வேலைக்காக மாட்டார்கள் என்ற என்னத்திற்கும் வந்தனர்.

இதன் பின்னர் 04.02.2017 வவுனியா மாவட்டச்செயலகத்தில் இ.போ.ச. சாலை ஊழியர்கள், தொழிற்சங்க ஊழியர்கள், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், அமைச்சர் ரிஷாட் பதியூதீன். வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண போக்குவரத்து துறை அமைச்சர் ப.டெனீஸ்வரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே. கே. மஸ்தான், சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், ஜெயதிலக, ஆகியோரின் பங்குபற்றலில் இதற்கான தீர்வு எட்டுவதற்கான கூட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டது.

அதன் பின்னர் டெனிஸ்வரன் தலைமையில் வட மாகாண போக்குவரத்து சபையின் சி.ஆர்.எம். நிறைவேற்றுப்பணிப்பாளர், வட மாகாண தனியார் பேருந்து சபையின் தலைவர் செயலளார் உட்பட நான்கு உத்தியோகத்தர் வீதம் இணைந்து மிக விரைவில் இணைந்த நேர அட்டவனையினை தயாரிப்பதாகவும் அதனை மிக விரைவில் அமைச்சரிடம் கையளிப்பதாகவும் கூறப்பட்டது. அதன் அடிப்படையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம் மாவட்டத்தில் இருந்து நீண்ட தூரத்திற்கான பேருந்து நிலையமாக செயற்படுமெனவும் அது வரை இரு தரப்பினரும் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு முன்னர் எவ்வாறு செயற்பட்டார்களோ அது போல் முரணபாடுகள் இன்றி செயற்படுவதற்கும் முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட உள்ளூர் சேவைகளை பழைய பேருந்து நிலையத்தில் இரு தரப்பினரும் இணைந்து செயற்படும் வகையில் இணைந்த நேர அட்டவனை தயாரிக்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கு இரண்டு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர்.





அதனை மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கவும் இரு தரப்பினரும் உடன்பட்டனர்.

இதன் படி வருகின்ற மார்ச் 31ம் திகதி வரை முன்பு போல் அரச பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்திலும் தனியார் பேருந்துகள் 01ம், 02ம் குறுக்குத்தெருக்களிலும் சேவையில் ஈடுபடும். அதுவரை புதிய பேருந்து நிலையம் மூடப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. அதன் பின்னர் போராட்டத்தினை முடித்து வைப்பதற்காக மத்திய அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வட மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன், சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்த போது அமைச்சர் ரிஷாட் பதியூதினிற்கு மட்டும் மாலை அணிவித்து இ.போ.ச ஊழியர்களினால் கூட்டிச்செல்லப்பட்டமையானது வட மாகாண சபை மீதும் வட மாகாண போக்குவரத்து அமைச்சர் மீதுமான அதிருப்தியை கொண்டிருப்பதையும், இவ் உணவுதவிர்ப்பு போராட்டத்தை சில மக்கள் பிரதிநிதிகள் அரசியலாக்க முயன்றுள்ளமையையும், காணக்கூடியதாக இருந்தது.

மொத்தத்தில் மக்கள் பிரதிநிதிகள் தங்களது சுய லாபங்களிற்காக மட்டுமே நடந்துகொள்கின்றனரே ஒழிய மக்களிற்காக இல்லை. ஏன் எனில் ஆரம்பம் தொட்டு மக்கள் பிரதிநிதிகளால் எடுக்கப்படும் முடிவுகளும் திட்டங்களும் மக்களின் நலன், சேவைகளை கருத்தில் கொள்ளாமலே எடுக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் உள்ளூர் சேவைகள் நகரில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்திலும், நீண்ட தூர சேவைகள் புதிய பேருந்து நிலைத்திலும் நடைபெறும் போது பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவது மக்களும், வியாபாரிகளுமே ஆகும். எனவே மக்களின் நலன் அவர்களின் சேவைகளை கருத்திற்கொண்டு சரியான தீர்மாணம் எடுக்காத பட்சத்தில் மீண்டும் மீண்டும் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுவதை தடுக்க முடியாது. தற்போது மார்ச் 31ம் திகதி வரை புதிய பேருந்து நிலையம் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதும் மறுநாளே தனியார் பேருந்துகள் இவ் புதிய பேருந்து நிலையத்திற்கு சென்றே செல்கின்றது.

ஏன் எனில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையம் 20 நாட்களிற்குள் மூடப்படுவதானது மக்கள் பிரதிநிதிகளினது ஆளுமையை கேள்விக்குள்ளாக்கியுள்ளதுடன், அரசின் திட்டங்களையும் திட்டமிடலையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. ●

---

# மக்கள் மன்றம்





ச.சசிக்குமார்



வி.சுபாஸ்



ச.பாலன்



**ச.சசிக்குமார்**

*வடமாகாணசபை அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டு பற்றி நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?*

வடக்கு மாகாணசபையில் ஐந்து அமைச்சர்கள் இருக்கின்றார்கள். அமைச்சர்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்து கூற முடியாது. என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றி பதில் கூறலாம்.

உண்மையில் நீண்டகால போராட்டத்திற்கு பின்னர் பாரிய இழப்புகளை சந்தித்த தமிழ் சமூகம் குறிப்பாக வடக்கு மாகாண மக்களுக்கான முதலாவது மாகாணசபை நிறுவப்பட்டு குறுகிய காலப்பகுதிக்குள் ஒட்டுமொத்த அமைச்சரவை மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பது துரதிஸ்ட வசமானதாகும்.

எனது அமைச்சைப் பொறுத்தவரையில் இந்த ஊழல் குற்றச்சாட்டை அடியோடு மறுக்கின்றேன். எந்தவித அடிப்டையும் இல்லாமல் வெறும் உள்ளக அரசியல் போட்டிகளுக்காக புனையப்பட்ட கற்பனையே சுகாதார அமைச்சு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும்.

இதில் வேடிக்கையான விடயமென்னவென்றால் ஒரு அமைச்சு மீது அல்லது அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும்போது பின்பற்றப்படும் வழமையான அரச நிதி நிர்வாக நடைமுறைகளை பின்பற்றாது எடுத்தஎடுப்பில் வெளியாரை நியமித்து விசாரணை செய்வதுதான். எது எவ்வாறாயினும் முதலமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவுக்கு எனது பூரண ஒத்துழைப்பை வழங்க நான் என்றும் தயாராக உள்ளேன்.

**வி.சுபாஸ்**

*கடந்த வருடத்தில் தங்கள் அமைச்சில் ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக செலவு செய்யப்பட்டதா?*

வடக்கு மாகாண சபை நிறுவப்பட்ட காலத்திலிருந்து ஊடகங்களில் பரபரப்பாக வருகின்ற இன்னுமொரு செய்தி ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்கப்படாது திரும்ப அனுப்படுகின்றதென்பது. போரிற்கு பின்னரான சூழ்நிலையில் வடக்கின் சுகாதாரதுறை அபிவிருத்திக்கு பெருமளவிலான நிதி தேவைப்படுகின்றது. எனினும் மத்திய அரசனால் வழங்கப்படும் நிதி போதாமலுள்ளது. இப்படியிருக்கையில் ஒதுக்கப்படும் நிதியை எவ்வீறு செலவழிக்காமல் திருப்பி அனுப்பமுடியும்.

மாகாண சுகாதார அமைச்சை நாங்கள் பொறுப்பேற்ற பின்னர் மற்றைய மாகாணங்களில் செய்யப்படாத பல செயற்திட்டங்களை இருக்கும் வளங்களை கொண்டு ஆரம்பித்திருக்கின்றோம்.

கடந்த வருடம் சுகாதார அமைச்சின் ஒதுக்கப்பட்ட நிதியில் 92 வீதத்திற்கு மேற்பட்ட நிதி செலவிடப்பட்டுள்ளது. எனினும் நிர்மாணதுறைக்கு ஒதுக்கப்படும் நிதியினை உரியகாலத்தில் செலவிடுவதில் சில பிரச்சனைகள் எமக்குள்ளது. மாகாணத்தில் காணப்படும் ஒப்பந்தகாரர்களின் இயலுமை மற்றும் ஆளணிப்பிரச்சனை என்பன பாரிய பிரச்சனையாகவுள்ளது.

**ச.பாலன்**

*வவுனியாவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் பொருத்தமான இடமா? மக்கள் நலன் கருதியா அமைக்கப்பட்டது?*

உண்மையில் ஒருமாவட்டத்தின் அபிவிருத்தியென்பது தூரநோக்குடையதாக இருத்தல் வேண்டும். வவுனியா நகர அபிவிருத்தி தொடர்பாக 2010 2030 காலப்பகுதிக்கான திட்டமொன்று துறைசார் வல்லுனர்களின் உதவியுடன் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் எதிர்காலத்தில் திணைக்களங்கள், பொது வசதிகள் எந்தெந்த இடங்களில் அமையவேண்டுமென்பது தெளிவாக இனங்காணப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்திற்கான போக்குவரத்து பகுதி (Transport terminal) தற்போது இலங்கை போக்குவரத்து பேருந்து நிலையத்திற்கு பின்பாகவுள்ள உள்வட்டவீதி அடங்கலாக கண்டி வீதியிலிருந்து புகையிரத நிலையம் வரையான பகுதியாகும். இங்கேயே இலங்கை போக்குவரத்துசபை, தனியார் பேருந்து நிலையம் மற்றும் புகையிர நிலையம் வரையான போக்குவரத்து வலயமாக (Transport terminal) அடையாளங்காணப்பட்டுள்ளது.

எனினும் வடக்கு மாகாணசபையுடன் கலந்துரையாடப்படாமல் முன்னைய அரசாங்கத்தின் போக்குவரத்து அமைச்சு தன்னிச்சையாக தற்போதைய இடத்தை தெரிவு செய்து அதில் பல மில்லியன் செலவில்பேருந்து நிலையத்தை அமைத்துள்ளது. பாரிய நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தை பாவிக்காது விடுவது உசிதமான முடிவல்ல. சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி பொதுமக்களுக்கு பாதிப்பில்லாதவகையில் முடிவுகள் எட்டப்படல்வேண்டும் ●


















நம்பிக்கையின் கதை

# சாத்தானின் குழந்தையை தத்தெடுக்கும் உலக மக்கள்!

நஸ்ரியா

குழந்தைகள் கடவுளின் பிள்ளைகள் என்பார்கள். ஆனால் பிறந்த சில மாதங்களில், வருடங்களிலேயே சாத்தானின் பிள்ளையென கூறி பெற்றோரே விரட்டியடிக்கும் கொடுமையும் நடந்து வருகிறது இந்த உலகத்தில். ஆம்... ஆபிரிக்காவின் நைஜீரியாவில் நடந்துவரும் கொடுமையிது. வருடாந்தம் ஆயிரக் கணக்கான குழந்தைகள் இப்படி பெற்றோரால் கைவிடப்படுகின்றன என்பதே பெரும் துயரம்!

இப்படி கைவிடப்பட்ட குழந்தையொன்று இன்று உலகம் முழுவதும் வெகு பிரபலம். இந்த குழந்தையின் கதை வெளிப்பட்டதும், உலகம் முழுவதும் மில்லியன் கணக்கானவர்கள் கண்ணீர் விட்டனர். இலட்சக்கணக்கானவர்கள் தமது குழந்தையாக பிரகடனப்படுத்தினர்.

நைஜீரியாவின் குக்கிராமமொன்றில் பிறந்து மூன்றாவது மாதத்தில் அந்த குழந்தையை பெற்றோர் கைவிட்டனர். அதன்பின்னர் எட்டு மாதங்கள் அந்த குக்கிராமத்தில் ஊர்ந்து, கிடைந்தவற்றை உண்டு உயிரை கையில் பிடித்துக் கொண்டிருந்தது அந்த குழந்தை.

சாத்தானின் பிள்ளைகள் என விரட்டப்படும் குழந்தைகளின் கதை ஒரே மாதிரித்தான் இருக்கும். கைக்குழந்தைகளாக அநாதரவாக விரட்டப்படும் குழந்தைகளிற்கு யாரும் உணவோ, தண்ணீரோ கொடுப்பதில்லை. அப்படி கொடுப்பது சாத்தானிற்கு உணவிடுவதாக அவர்கள் நம்புகிறார்கள். அந்த குழந்தைகளை விரட்டியடித்து விடுவார்கள். பெற்றோரால் விரட்டப்படும் குழந்தைகள் அதிக காலம் உயிர்வாழ்வதில்லை. சில மாதங்கள் உயிர் வாழ்ந்தாலே பெரிய விடயம்.

பிறந்த மூன்றாவது மாதத்திலேயே கைவிடப்பட்ட அந்த குழந்தை எட்டு மாதங்கள் பிழைத்ததே பெரிய விடயம். சிலர் இரங்கி உணவோ, தண்ணீரோ கொடுத்திருக்க வேண்டும்.

எட்டு மாதத்தின் பின் கண்டுபிடிக்கப்பட்ட அந்த குழந்தையின் பெயர் ஹோப்.

ஹோப், ஹோப்பை போன்ற ஆயிரக் கணக்கான குழந்தைகளின் அவலத்தை உலகத்திற்கு காட்டியவர் அன்ஜா ரிங்ரிரென் லோவன். டென்மார்க்கை சேர்ந்த இந்த பெண்மணி, தன்னார்வ தொண்டர். ஆபிரிக்காவில் குழந்தைகள் நல பண்யாற்ற சென்றவர், நைஜீரியாவில் தங்கியிருந்து பணியாற்றினார். ஆபிரிக்க குழந்தைகள் உதவி மற்றும் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனத்தை உருவாக்கியவர்களில் ஒருவர். ஆதரவற்ற குழந்தைகளின் உதவி, மருத்துவம், கல்வி பணிகளை மேற்கொள்ளும் நிறுவனம் இது. வறுமை, சமூக காரணங்களால் கைவிடப்படும், ஆதரவற்ற குழந்தைகளிற்கு அடைக்கலம் கொடுக்கும் நிறுவனம் இது.

நைஜீரயரான டேவிட் இம்மானுவேல் யுமெம் என்பவரை திருமணம் செய்து, அங்கேயே வாழ்ந்து வருகிறார். நைஜீரியா முழுவதும் திரிந்து ஆதரவற்ற குழந்தைகளிற்கு உதவி வருகிறார். குழந்தைகளை கண்டுபிடித்து, அவசர சிகிச்சையளித்து ஒரு தன்னார்வ அமைப்பை உருவாக்கியுள்ளார்.

அப்படியான பயணமொன்றில் கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் ஹோப்பை கண்டுபிடித்தனர். அவர்களின் பார்வையில் ஹோப் பட்டபோது, பசியோடிருந்தான். தாகமாக இருந்தான். உயிர் போகும் தறுவாயிலிருந்தான். அவனை நெருங்கவே விடாமல் கிராமத்தவர்கள் விரட்டிக்கொண்டிருக்க, அடுத்த சில நாட்களில் இறக்கும் நிலையிலிருந்தான்.

அவனை சந்தித்த தருணத்தை அன்ஜா சமூக வலைத்தளங்களில் இப்படி பதிவிட்டார் “சிறிய கிராமமொன்றில் பெற்றோரால் கைவிடப்பட்ட சிறுவனொருவனை நானும், யுமெமும், எமது குழுவும் கண்டுபிடித்தோம். தனியாக, கிட்டத்தட்ட இறந்த நிலையில்“

குழந்தை ஹோப்பிற்கு அவசர சிகிச்சை ஏற்பாடு செய்தார் அன்ஜா. ஒரு குழந்தைக்கு எதுவெல்லாம் கிடைக்க வேண்டுமோ அவையெதுவும் அந்த குழந்தைக்கு கிடைத்திருக்கவில்லை. குறிப்பாக தாய்ப்பால், ஆரோக்கிய உணவுகளின் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி வளர்ந்திருக்க வேண்டும். ஆனால் ஹோப்பிற்கு அது கிடைக்கவில்லை. அதற்கும் சிகிச்சையளிக்கப்பட்டது. எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்காக இரத்தத்தில் சிவப்பணுக்கள் ஏற்றப்பட்டன.

இரண்டு மாத தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டான் ஹோப். தினசரி இரத்தம் மாற்றுதல், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்தல், உடல்போசணை அதிகரித்தல் என அவனை புதிதாக பிறக்க வைத்தார்கள் வைத்தியர்கள். ஒன்றேகால் வயதான காலத்தில் ஹோப் புதிதாக பிறந்தான் என்பதே உண்மை.

சோமாலியாவில் கெவின் காட்டர் ஒரு புகைப்படம் எடுத்தார். இறக்கும் தறுவாயிலிருந்த குழந்தையை பிணம்தின்னி கழுகொன்று சாப்பிடுவதற்காக காத்திருந்த தருணத்தை. அந்த புகைப்படம் ஒட்டுமொத்த உலகத்தின் மனச்சாட்சி

தொடர்ச்சி அடுத்தபக்கம்...






# பொருத்தமில்லாத பேரூந்து சேவைகள்

பாதசாரி

வடக்குபோக்குவரத்துதுறைமிகப்பெரிய சீரழிவை எதிர்கொண்டுள்ள காலகட்டமிது. இதுபோன்ற சீரழிவை இதற்கு முன் எதிர்கொண்டதில்லை. இலங்கை போக்குவரத்துசபையும், தனியார் போக்குவரத்துதுறையினரும் ஏட்டிக்குபோட்டியாக நடத்தும் பணிப்புறக்கணிப்புக்களால் பேரூந்து பயணங்களை நம்பியிருக்கும் மக்கள் பெரும் சிரமத்தை சந்திக்க ஆரம்பித்துள்ளனர். பேரூந்து பயணத்தை நம்பியவர்களின் பயணத்திற்கான நிச்சயமின்மையை சந்திக்க ஆரம்பித்துள்ளனர்.

இதில் துரதிஸ்டம் என்னவென்றால், வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு, வடக்கு போக்குவரத்துறைக்கு ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டதன் பின்னர்தான் இந்த சீரழிவுகள் உச்சம்பெற்றுள்ளன.

ஏற்கனவே ஏட்டிக்கு போட்டியான ஓட்டம், மோதல் என நீடித்த சச்சரவு இப்போது ஏட்டிக்குபோட்டியான பணிப்புறக்கணிப்பு வரை சென்றுள்ளது. இந்த போக்கை அனுமதிக்க முடியாது.

இலங்கை போக்குவரத்துசபை ஒரு அரச நிறுவனம். அதன் செயற்பாடுகளில் ஒரு அரசநிறுவன கட்டுப்பாடு இருக்கிறது. அது பகிரங்கமாக வெளித் தெரிந்து கொண்டுதான் இருக்கிறது. தனியார் போக்குவரத்துதுறையினர் இதுவரை பலமுறை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவிட்டனர். குறிப்பாக அரச போக்குவரத்துதுறையை குற்றம்சாட்டிக்கூட பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு விட்டனர். ஆனால் இப்படியான சில்லறை சர்ச்சைகளை காரணம் காட்டி அரச போக்குவரத்துதுறை தனது சேவையை நிறுத்தவில்லை.

தனியார் போக்குவரத்து துறையின் வேலை நிறுத்த சமயத்தில் சேவையில் ஈடுபடும் அரச பேரூந்துகள் ஒவ்வொரு முறையும் தாக்கப்படும். சேதமாக்கப்படும். ஆனால் அரச பேரூந்துகளின் வேலை நிறுத்தத்தின்போது, தனியார் பேரூந்துகள் தாக்கவோ தடுக்கவோ படுவதில்லை. தனியார் போக்குவரத்துதுறையினரின் நலன்களிற்கு மாற்றான அரச போக்குவரத்து சேவைகளும் தாக்கப்படுகின்றன. அரச பேரூந்துகள் மீதான அண்மைக்கால தாக்குதல்கள் மிக அதிகமானவை.

வடக்கு முழுவதும் அரச தனியார் போக்குவரத்துதுறையின் மோதல் இருந்தாலும், வவுனியா மோதல் இன்னும் விசேடமானது. இறுதியாக அங்கு அரச பேரூந்து சாரதியொருவர் தனியார் சாரதியால் தாக்கப்பட்டார்.

புதிய பேரூந்து நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து சேவையை ஆரம்பித்த தனியார்துறையினர், பழைய பேரூந்து நிலையத்தில் இருந்து சேவையை நடத்திக் கொண்டிருந்த அரச பேரூந்துகளை வழிமறித்து, ஒரு மோதல் போக்கை ஆரம்பிப்பதை போல நடந்து கொண்டனர். இந்த இரண்டு சம்பவங்களும்தான் இப்போதைய உச்ச மோதல்களின் காரணம்.

வவுனியா மட்டுமல்ல, வடக்கில் உள்ள எந்த நகரும் முறையாக உள்ளக கட்டமைப்பை கொண்டவையல்ல. முறையான நகர அமைப்பையும் கொண்டவையல்ல. ஒரு குறுகிய இடத்தில் அல்லது நீளமான வீதியில் நகரம் அமைக்கப்பட்டுள்ளது. இது பொதுமக்களிற்கு மட்டுமல்ல போக்குவரத்துதுறையினருக்கும் சிரமமானது.

இந்த சிக்கல்களின் அடிப்படை முறையான நகர அமைப்பை திட்டமிடாத நமது மக்கள் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளுமே. பொருத்தமான நகரஅமைப்பை உருவாக்கிய பின்னர், இரண்டு பேரூந்து தரிப்பிடங்களை உருவாக்கி, பயண மார்க்கங்களை அறிவித்தால் பிரச்சனை முடிந்துவிடும். போக்குவரத்துதுறை மக்களிற்கானது. நிறுவனங்களிற்கானதல்ல. இந்த அடிப்படையிலேயே இந்த விவகாரத்தை அணுக வேண்டும்.

மக்களின் தேவைகளில் முக்கியமான ஒன்றாக போக்குவரத்திற்கு வழியேற்படுத்திக் கொடுப்பது அரசுகளின் கடமை. விமான, இரயில் மார்க்கங்களை போல பேரூந்து மார்க்கமும் உள்ளது. அதனை அரசதுறையினால் மட்டுமே சமாளிக்க முடியாதென்பதால் தனியார் பேரூந்துகளும் இணைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு ஒழுங்குமுறையை ஏற்படுத்திக்கொள்வது அரசின், அரச பிரதிநிதிகளின் கடமை. ஒரு வர்த்தகநிலையத்தை நடத்துவதும், தனியார் பேரூந்தை சேவையிலீடுபடுத்துவதும் ஒன்றல்ல. தனியார் பேரூந்து சேவைக்கென வந்துவிட்டால், அங்கு பேரம்பேச முடியாது. கட்டணம், சேவைத்தூரம், தடவை போன்ற விடயங்களில் அரசுடன் பேசி ஏற்படுத்திக்கொள்ளும் இணக்கம்தான் அவர்களின் வரப்பிரசாதம்.

ஒரு அரச, தனியார் பேரூந்து பயணமார்க்கத்திற்கு வந்துவிட்டதென்றால், அதில் பொதுமக்களும் பங்காளிகள். பிடிக்காவிட்டால் இறங்குங்கள். நாங்கள் சொல்வதை போல செயற்படுங்கள் என்றோ சாரதியோ, நடத்துனரோ நடந்துகொள்ள முடியாது. அப்படி செயற்பட்டால் அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டை அவர்கள் மீறுகிறார்கள் என்பதே அர்த்தம். இதுதான் போக்குவரத்து துறையின் அடிப்படை.

வடக்கில் போக்குவரத்து சேவைகள் அதிகரிக்கப்படும்போது மக்களின் அன்றாட வாழ்க்கை இலகுவாகும். அதை செய்து கொடுப்பதுதான் அரசுகளின் கடமை. அரச போக்குவரத்து சேவைகள் விஸ்தரிக்கப்படும் சமயங்களில் தனியார்துறையினர் முகம் சுளிப்பது வழக்கம். தமது வருவாயை பாதிப்பதாக அவர்கள் வெளிப்படையாக பேசுகிறார்கள். உண்மையில், தனியார்துறையினரின் வருவாய் இதில் விவகாரமே கிடையாது. போக்குவரத்தில் இலாபம் கிடைக்கவில்லையெனில் அந்த உரிமையாளர்கள் ஒதுங்கிக்கொள்ள வேண்டும். இன்னும் சிலகாலத்தில் வடக்கில் மெட்ரோ இரயில் சேவைகள் வரலாம். சுரங்கவழி பயணமார்க்கங்கள் வரலாம். தனியார் பேரூந்துகளின் வருவாயை பாதிப்பதாக கூறி அவற்றையெல்லாம் தவிர்க்க முடியுமா?

கடந்தவாரம் தனியார்துறையினர் அறிவித்திருந்த பணிப்பகிஸ்கரிப்பிற்கான காரணம், அரசதுறையின் பணிப்பகிஸ்கரிப்பினால் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பது. இது எவ்வளவு முரண்நகையானது. தனியார்துறையின் பணிப்பகிஸ்கரிப்பால் மக்கள் பாதிக்கப்படப் போவதில்லையா? தனியார்துறையின் பணிப்பகிஸ்கரிப்பால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என நாளையே அரசதுறையும் இன்னொருபகிஸ்கரிப்பு அறிவித்தல் விட்டால் நிலைமை என்னாகும்? இப்படியே மாறிமாறி பகிஸ்கரித்து விளையாடிக் கொண்டிருந்தால் இவர்களை வீட்டுக்கனுப்பிவிட்டு, புதிய போக்குவரத்து பொறிமுறையொன்றை அரசு ஏற்படுத்த வேண்டியதாகும்.

இந்த சிக்கலை தவிர்க்க உடனடியாக செய்ய வேண்டியது இணைந்த நேர அட்டவணையை அமுல்படுத்துவதே. ஆனால் இதிலும் சிக்கல் உள்ளது. இணைந்த நேர அட்டவணையை அமுல்படுத்துவதில் உள்ளூர் தனியார் போக்குவரத்து சங்கங்கள் விருப்பம் காட்டமாட்டார்கள். தூர இட சேவைகளிற்கு இணைந்தநேர அட்டவணை தனியார்துறைக்கு பயனுள்ளது. ஆனால் உள்ளூர்சேவைகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தும். இணைந்த நேர அட்டவணைதான் தீர்வென்று தனியார்துறை ஒரே குரலில் சொன்னால், தாமதமின்றி அதை அமுல்செய்ய வேண்டும்.

இதைவிட முக்கியமாக, நகர கட்டமைப்பில் எங்கு பேரூந்து நிலையங்கள் அமைய வேண்டுமென்பதை நிர்வாக அதிகாரிகளே தீர்மானிக்க வேண்டும். நகரின் அனைத்து பகுதியாலும் இரண்டு பேரூந்துசேவைகளும் சென்று, வேறுவேறு தரிப்பிடங்களில் நிறுத்தப்படுவதே பொருத்தமானது. ●

---

யையும் உலுக்கியது.

கிட்டத்தட்ட அதேவிதமான அதிர்ச்சியை அன்ஜாவின் சமூகவலைத்தள புகைப்படம் ஏற்படுத்தியது. பரிதாப நிலையில் ஹோப்பை கண்டதும் சாப்பிடுவதற்கு பிஸ்கட்டை கொடுத்து, தன்னிடமிருந்த தண்ணீர் போத்தலால் தண்ணீர் பருக்கினார். சாகும் தறுவாயிலிருந்த ஹோப் நீர் பருகும் புகைப்படம் உலகளவில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது.

அந்த குழந்தைக்கு உலகெங்குமிருந்து நிதியுதவிகள் குவிந்தன. சுமார் ஒன்றரை மில்லியன் டொலர் நிதி சேர்ந்ததாக கூறப்படுகிறது. உண்மையில் அந்த குழந்தைக்கு பெற்றோர் பெயரிட்டார்களா என்பது தெரியாது. அன்ஜாதான் அந்த பெயரையும் சூட்டினார்.

இரண்டு மாதங்களின் பின்னர்தான் ஹோப்பின் உடல்நிலை சாதாரண நிலைக்கு திரும்பியது. ஆம்... ஹோப் சாதாரண குழந்தைகளை போல வாழ தேவையான உடல் ஆரோக்கியத்தை பெற்றான். அதன்பின், குழந்தைகளின் தொண்டு நிறுவனமான ஆபிரிக்க குழந்தைகள் உதவி மற்றும் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனத்தில் இணைத்துவிட்டார்.

அங்கு வாழும் மற்ற சிறுவர்களுடன் ஹோப் அடிக்கும் லூட்டிகளை அடிக்கடி தனது சமூகவலைத்தளங்களில் பதிவேற்றிக் கொண்டிருந்தார். ரகரகமாக ஹோப் அடித்த லூட்டிகள் இணையத்தில் வைரல்களாகின. பார்ப்பவர்களின் கண்பட்டு விடும்படியான அமுல்பேபி தோற்றத்தில் இப்போது தோன்றும் ஹோப்பையும், பழைய தோற்றத்தையும் ஒப்பிடவே முடியாத மாற்றம் நிகழ்ந்துள்ளது.

கடந்த மாதம் 13ம் திகதி ஹோப் பாடசாலை செல்ல தொடங்கிவிட்டான் என்ற தகவலுடன், அவன பாடசாலை செல்லும் புகைப்படத்தையும் பதிவிட்டிருந்தார். இதுவும் உலகளாவிய ரீதியில் அதிகம் பகிரப்பட்ட செய்தியாக இருந்தது. சிறிதளவாயினும் இலட்சக்கணக்காணவர்கள் நிதியளித்திருந்தார்கள். அதைவிட பலமடங்கு அதிக தொகையானவர்கள் அவனிற்கு உதவ விரும்பியிருந்தார்கள். அத்தனை பேரினது பேரன்பை பெற்ற அந்த குழந்தை பாடசாலை செல்வது நிச்சயம் உலகத்தின் முக்கிய செய்திதானே!

ஹோப்பின் வாழ்க்கையை மாற்றியது அன்ஜா பதிவிட்ட ஒரு புகைப்படம். அது ஹோப்பை மட்டுமல்ல, சாத்தானின் குழந்தைகள் என கைவிடப்படும் நைஜீரிய குழந்தைகளின் வாழ்விலும் ஒளிவீச செய்துள்ளது. அந்த குழந்தைகளின் மீது உலகளாவிய பார்வை திரும்பியுள்ளது. அப்படியன குழந்தைகளை தத்தெடுக்க ஏராளமானவர்கள் விருப்பம் தெரிவிக்கிறார்கள். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அங்கு செல்ல ஆரம்பிக்கின்றன. இதையெல்லாம் விட, உலகின் பெரும் கோடீஸ்வரர்கள் பலர் அந்த குழந்தைகளிற்காக அதிக நிதி அளிக்கிறார்கள்.

இந்த மாற்றத்தை பார்க்க, அந்த குழந்தைகளை இனி சாத்தானின் குழந்தைகள் என அழைப்பது தவறு. அவர்கள் இனி உலகமக்களின் குழந்தைகள்! ●

# வைத்தியர்களுக்கு வாகனம் வழங்கலாமா?



முறைகேடான அல்லது ஒழுங்கற்ற முறைகளை கையாண்டு திறனுள்ள அல்லதுபயனுள்ளவிளைவுகளைபெறுவது கடினம். அவ்வாறான முறைகேடான, ஒழுங்கற்ற முறைகள் அடக்குமுறையாக அல்லது ஊழல் நிறைந்ததாக மாறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அவ்வாறான எந்த முறைகளையும் ஒழுங்கான ஒழுங்குபடுத்தப்பட்ட முறையாக மாற்றுவதன் மூலம் பயனள்ள திறனுள்ள நல்ல விளைவுகளை தரும் முறையாக மாற்றலாம்.

அதன் மூலம் அடக்குமுறையை ஊழல் நிறைந்த தன்மைகளை கூட இல்லாதொழிக்கலாம். ஆனாலும் அடக்கு முறையை ஊழலை விரும்புபவர்கள், அதிலிருந்து இலாபமடைபவர்கள் அம்முறையை மாற்றுவதனை விரும்பமாட்டார்கள். மாற்றம் கொண்டுவருவதனை கடுமையாக எதிர்ப்பவர்களாக இவர்களே இருப்பார்கள்.

புரிந்துணர்வு இன்மையாலும் சிலர் இதனை எதிர்க்க முற்படுவார்கள் அவர்களுக்கு அழகிய முறையில் விளக்கமளிப்பதன் மூலம் இவர்களை மாற்றலாம். மாற்றுவதற்கு மிகவும் கடினமானவர்கள் இம்முறையற்ற ஒழுங்குகள் மூலம் இலாபம் உழைப்பவர்களையே.

**இலவச மருத்துவ சேவை**

இலங்கையில் எல்லா அரச நிறுவன ஒழுங்குகளைப் போலவே இலவச சுகாதார சேவையும் வினைத்திறனற்ற, ஊழல் நிறைந்த மக்களை மிகுந்த சிரமத்தில் ஆழ்த்தி படாதபாடுபடுத்தும் முறையிலேயே இயங்கி வருகிறது.

இலவச சுகாதார சேவையின் முதுகெழும்பு மருத்துவர்களே. இலவச சுகாதரா சேவையை ஆழ்பவர்களும் மருத்துவர்களே. இலவச சுகாதார சேவையில் உள்ள வரையறைகள், கட்டுப்பாடுகளுக்கும் அதிகம் பொறுப்பு கூற வேண்டியவர்களும் வைத்தியர்களே.

இதன் அர்த்தம் மருத்துவர்கள் பயனளிக்கும் முக்கியத்துவமுள்ள எந்த வேலையும் செய்யாதவர்கள் என்று பொருள்படாது. அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் சமூகப் பொறுப்பு மிகப் பாரியது. அரச வைத்திய சேவையில் சுயநலம் பிடித்தவர்கள் இருப்பது போலவே மிக உத்தமமானவர்களும் இருக்கின்றனர்.

ஆனால் இலவச சுகாதார சேவையின் ஒழுங்ககுகள் சுயநலமிக்க ஊழல்கள் நிறைந்த முறையிலேயே ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த சுயநலமிக்க ஒழுங்கு உத்தமமான நல்ல வைத்தியர்களின் சேவைகளையும் பணிகளையும் கூட இல்லாதொலித்து விடும் என கருதலாம்.

இலவச மருத்துவ சேவையை நடாத்தி செல்ல அரசு செலவு செய்யும் மக்களின் பணத்தொகை மிகவும் பாரியது. செலவிடும் தொகை;க்கு ஏற்ப திருப்திகரமான சேவை மக்களுக்கு கிடைக்கிறது என கூற முடியாது.

இலங்கை இலவச சுகாதார சேவையின் பாரிய வீழ்ச்சிக்கு பங்களிக்கும் முக்கிய காரணங்களாகவன இலவச சுகாதார சேவையில் பணிபரியும் உயர் அதிகாரிகள், பணியாளர்கள் மத்தியில் மனிதாபிமானம் குறைவாக காணப்படுகின்றமை ஒழுக்கமின்மை அவர்களுக்குள்ளேயே வலுத்துள்ள உள்முரண்பாடுகள் மற்றும் பிற்போக்கான கருத்தில் இருக்கும் அரசமருத்துவர் சங்கமும் அவர்களுக்கு சுகாதார துறையில் இருக்கும் வரையறையில்லா அதிகாரமும் தாக்கம் செலுத்தியிருக்கிறது என கூறலாம்.

**புற்று நோய் வைத்தியசாலை**

சுமார் 10 வருடங்களுக்கு முன் அணு தொடர்பிலான பேராசியை ஒருவர் மூலம் நான் அறிந்து கொண்ட விடயம் இது.

இந்தவிடயத்தைநான் இதற்குமுன்னரும் எழுதியுள்ளேன். இப்பேராசிரியை மார்ப்பகப் புற்று நோய்க்கு சிகிச்சை பெற மகரகம புற்று நோய் வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். இப்பேராசிரியை யார் என்று வைத்தியசாலை அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை. இப்பேராசிரியைக்கு இப்புற்று நோய் தொடர்பிலும் இதற்கான மருந்துகள் தொடர்பிலும் நன்றாக தெரிந்து வைத்திருந்தார். அவருக்கு முதலாவது தினம் கொடுக்கப்பட்ட மருந்திலும் மற்ற மருந்துகளிலும் கட்டாயமாக இருக்க வேண்டிய மிக அத்தியாவசியமான, விலையில் மிக உயர்ந்த மாத்திரை ஒன்றை காணவில்லை. அந்த மாத்திரை பற்றி பேராசியர் மருத்தவரிடம் வினவிய போது அந்த பெறுமதி மிக்க மாத்திரை போராசியருக்கு அடுத்த நாள் முதல் கிடைத்தது.

அவருக்கு ஏற்பட்ட இந்த நிலை தொடர்பில் பேராசிரியர் என்னுடன் கருத்து பரிமாறிக் கொண்டார்.. எனக்கு கிடைக்க வேண்டிய மருந்து மாத்திரை தொடர்பில் நான் அறிந்து வைத்திருந்ததால் நடக்கவிருந்த மாபெரும் விபரீதத்தை திருத்திக் கொள்ள முடிந்தது.

ஆனால் சாதாரண அப்பாவி புற்று நோயாளர்களுக்கோ தமக்கு கிடைக்க வேண்டிய மருந்து மாத்திரைகள் தொடர்பில் எந்த அறிவும் கிடையாது. வைத்தியசாலையில் கொடுக்கும் மருந்தினை குடிப்பதனை தவிற அவர்களுக்கு வேறு வழியில்லை. எனக்கு நடந்த இந்த விபரீதம் தவறுதலாக இல்லாமல் மிக திட்டமிட்டு ஒரு குழுவாக ஒன்று சேர்ந்து நடாத்தி செல்லப்படும் ஒரு வியாபாரமாக மாபியாவாக இருந்தால் மகரகம புற்று நோய் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் புற்றுநோயாளிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய விபரீதம் எப்படி இருக்கும் என அப் பேராசிரியர் என்னிடம் வினவினார்.

நான் கூறப் போகும் அடுத்த விடயம் 10 வருடத்துக்கு முன் நான் அறிந்து கொண்ட ஒரு விடயம் எனினும் அது தற்காலத்துக்கு கூட பொருந்தும். நான் கூறும் நபர் அம்பலங்கொட அல்லது ஹிக்கடுவ பிரதேசத்தை சேர்ந்தவர். அவரது மனைவி கர்ப்பிணியாக பிரசவத்துக்கு தயாராக இருந்தார். அன்று மோதர பெரிய ஆஸ்பத்திரியில் இருந்த குழப்ப நிலை காரணமாகவும், கண்டியில் இருப்பது வசதியாக இருந்த காரணத்தினாலும் கண்டியில் வைத்தியசாலையில் பிரசவத்துக்கு செல்ல தீர்மானித்தனர்.

கண்டி போதன வைத்தியசாலையில் தனதுமனைவியைபிரசவத்துக்குஅனுமதிக்கும் நோக்கில் மற்றும் வைத்தியரின் சிபாரிசை பெறவும் இத்துறையில் முன்னணியிலுள்ள வைத்தியர் ஒருவரை சனல் செய்ய சென்றனர். ஆனாலும் அம்முன்னணி வைத்தியர் கண்டியில் தனியார் வைத்தியசாலை ஒன்றின் பெயரை குறிப்பிட்டு அவரின் மனைவியை அத் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கும் படி கண்டிப்பான சொல்லிவிட்டார்.

தனியார் வைத்தியசாலையில் அனுமதித்தால் அதிகம் பணம் செலுத்த வேண்டியேற்படும் என்பதால் அவரின் கண்டியிலுள்ள உறவினர்களுடன் கலந்துரையாடிவிட்டு குறிப்பிட்ட முன்னணி வைத்தியரின் கட்டளையை ஏற்காமல் கண்டி போதனவைத்தியசாலையில் அம்முன்னணி வைத்தியரின் வார்ட்டில் தன் மனைவியை பிரசவத்திற்காக அனுமதித்துள்ளார்.

அவரின் மனைவி மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கும் சந்தர்ப்பத்திலேயே அம்முன்னணிவைத்தியர் அங்குவந்துளார். அவ்வைத்தியர் இவர்களை இனம் கண்டுக் கொண்ட பின் இக்கணவனையும் மனைவியையும் கடுமையாக திட்டியுள்ளார். வைத்தியர் சொன்னபடி அவர் சொன்ன தனியார் வைத்தியசாலைக்கு பிரசவத்துக்கு செல்லாததால். அவ்வைத்தியர் இக்கணவன் மற்றும் கர்ப்பிணித் தாயுடன் நடந்து கொண்ட முறை, கடும் சொற்களால் திட்டிய முறை இருவரையும் மிக சங்கடத்திலும் பீதியிலும் ஆழ்த்தியது.

கணவன் உடனடியாக கர்ப்பிணி மனைவியை கண்டி அரச வைத்தியசாலையிலிருந்து தனியார் வைத்தியசாலையொன்றுக்கு கொண்டு சென்ற போதும் பாரிய விபரீதத்திலேயே இந்த விடயம் முடிந்தது. இறுதியாக என்ன நடந்தது என்று எனக்கு சரியாக ஞாபகத்தில் இல்லை. குறிப்பிட்ட கணவரின் கர்ப்பிணி மனைவி இறந்திருக்கலாம் என நினைக்கிறேன்.

அதன் பின்னர் கர்ப்பிணி பெண்ணின் கணவர் இந்நிலைக்கு காரணமான வைத்தியருக்கு எதிராக உயர்நீதியமன்றத்தில் மனிதஉரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றம் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்தது. இக்காலப்பகுதியில் பாதிக்கப்பட்டவர் பல முறை எனது காரியாலயத்துக்கு வந்து சென்றார். தனது நோக்கம் அம்மகா கெட்ட வைத்தியரை பலிவாங்குவதல்ல என்றும் இனிமேல் எனக்கு ஏற்பட்டது போன்ற துர்பாக்கிய நிலை இன்னொருவருக்கு ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வழக்கை தொடுத்ததாகவும் என்னிடம் கூறினார்.

ஆரம்பத்தில் நல்ல திசையில் சென்ற வழக்கு செல்லச் செல்ல நிலைமை மாறியதாகவும் குற்றம் இழைத்த வைத்தியர் சமாதானத்துக்கு தயார் என்று சொன்னதாகவும் ஆகையால் இதற்கு சம்மதமா என உயர்நீதிமன்றம் என்னிடம் கேட்டது என்றும் அதற்கு அவர் விருப்பமில்லை என நீதிமன்றத்துக்கு தெரிவித்ததாகவும் அவர் கூறினார். மேலும் வைத்தியர்களின் ஆதிக்கம் எல்லா இடத்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

திலும் இருப்பதாகவும் இறுதியில் என்ன நிகழும் என் தன்னால் கூற முடியாதிருப்பதாகவும் அவர் என்னிடம் சொன்னார் . இவ்வழக்கின் தீர்ப்பு எப்படியமைந்தது என எனக்கு தெரியவில்லை. சில வேளை எனது இக்கட்டுரையின் மூலமாக தீர்ப்பை பற்றி அவர் மூலமாக எனக்கு தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கலாம்.



### தனியார் வைத்திய சேவை

மேலே குறிப்பிட்ட விபரீதங்கள் நிகழ முக்கிய காரணம் அரச மருத்துவ அதிகாரிகள் அரச தொழிலை செய்வதுடன் மேலதிகமாக தனியார் வைத்திய சாலைகளிலும் தொழில் பார்ப்பதாகும். இவ்வாறான குழப்ப குழப்ப, துர்ப்பாக்கிய நிலையின் காரணமாகவே மேல் குறிப்பிட்டது போன்ற விபரீதங்கள் நிகழ முக்கிய காரணம்.

நாம் பிரித்தானியாவால் ஆழப்பட்டதாலோ என்னவோ நாம் எல்லா விடயத்திலும் பிரித்தானியாவையே முன்னுதாரணமாக எடுக்கின்றோம். எமது நாட்டின் நிறுவனங்கள் அனைத்தும் அவர்களுடைய ஒழுங்குகளிலேயே இயங்கி வருகிறது எனக் கூறலாம்.

எமது இலவச மருத்துவ சேவையும், வைத்தியசாலை ஒழுங்கு, மருத்துவ கல்வி ஒழுங்குகள் போன்றவையும் பிரித்தானியாவிலிருந்து எமக்கு கிடைத்த முறைகளாக கருத முடியும். ஆனாலும் நாட்டின் துரதிஷ்டம் இங்கிலாந்தில் அரச மருத்துவர்கள்களுக்கும் அரச சுகாதார பணியாளர்களுகளுக்குமான எமது நாட்டினருக்குமான ஒழுங்குகள் வேறானைவை இவ்விடயத்தில் மாத்திரம் இருநாட்டினருக்கும் பாரிய இடைவெளி இருக்கிறது.

இங்கிலாந்தில் அரச மருத்துவர்களுக்கு தனியார் வைத்தியசாலைகளில் பணி புரிவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது. மருந்து கம்பனிகளிலிருந்து பேனை ஒன்றை பெற்றுக் கொள்வது கூட தடைசெய்யப்பட்டுள்ளது. அங்கு அரச சேவையில் இருக்கும் வைத்திய அதிகாரிகள் கடுமையான தொழில் சங்க உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளில் வேலை நிறுத்தங்கள் செய்யும் போது கூட வேலை நிறுத்தம் நடக்கும் இடத்தை எட்டி பார்க்க கூட செல்வதில்லை. அப்பாவி நோயாளிகளை கஷ்டத்தில் வீழ்த்தும் எந்த நடவடிக்கைகளிலும் அவர்கள் இறங்குவதில்லை.

எங்கள் நாட்டில் இருப்பது இரட்டை முகம் (Double Game) கொண்ட முறை. அரசின் மருத்துவர் அரசின் இலவச சுகாதார சேவைக்காக அரசிடம் பணம் பெறுவதுடன் அதற்கு மேலதிகமாக சிகிச்சைகாக பணம்பெறும் தனியார் வைத்தியசாலைகளிலும் பணிபுரிகிறார்கள். எல்லோரும் இல்லாவிட்டாலும் ஒரு பெரிய குழு நேரடியாக அல்லது கள்ளத்தனமாக மருந்து கம்பனிகளின் ஏஜன்ட்களாக வேலை செய்வதன் மூலமும் பணம் சம்பாதிக்கிறார்கள்.

அரச மருத்துவர்களுக்கு மாத்திரமே உரிய இந்த இரட்டை முக சுபாவம் இலவச மருத்துவ சேவையில் நிகழும் அக்கிரமங்களுக்கு பிரதான காரணியாக அமைகிறது என கருத முடியும்.

அரச மருத்துவமனைகளில் பணி புரியும் அதே வேளை தனியார் வைத்திய சாலைகளிலும் பணிபுரிவதால் பயிற்சிக்காக வரும் மருத்துவர்களை பயிற்றுவிக்க அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. இந்நிலைமை புதிதாக மருத்துவ சேவையில் இணையும் மருத்துவர்களின் குணத்தில் பெரும் சரிவையும் பாதிப்பையும் ஏற்படுவதற்கு காரணமாக அமைகிறது என்பது சில விமர்சகர்களின் கருத்தாகும்.

### அரச வைத்தியசாலை

அரச வைத்தியசாலைகளில் கூட இலவசமாக சிகிச்சை பெற முடியும் என் கருத முடியாது. அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு மருத்துவ பரிசோதனைகளுக்காக தனியார் நிறுவனங்களுக்கு செல்ல வேண்டியுள்ளதால் அதற்காக அதிக பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. மேலும் வைத்தியர்களால் எழுதிக் கொடுக்கப்படும் பல மருந்துகள் வைத்தியசாலைக்கு வெளியில் வாங்க வேண்டியிருப்பதால் அதற்கும் பாரியளவு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த வகையில் அரச வைத்தியசாலைகள் நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை வழங்குகிறது என கருத முடியாது.

ஒரு மாதத்துக்கு முன்னர் எனது நண்பரிடமிருந்து எனக்கு கிடைத்த தகவல் இது. இதனை என்னிடம் சொன்ன நண்பனின் இரண்டு மகன்மாரும் வைத்தியர்கள். எனது நண்பனின் சொந்த ஊர் அம்பலங்கொட அவரின் உறவினர் ஒருவர் வயிற்று வலி காரணமாக சிகிச்சை பெற கராபிடிய வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். கராபிடிய அரச வைத்திய சாலைஒருமுன்னணிஅரசவைத்தியசாலை எனினும் நோயாளிகளுக்கான மருத்துவ பரிசோதனைககளை பணம் செலுத்தி வெளியிலேயே மேற்கொண்டுள்ளார். அதன் விளைவாக நோயாளிக்கு நோய் வயிற்றில் அல்ல சிறுநீரகத்தில் தான் என கண்டுபிடித்துள்ளனர். துனியார் நிறுவனங்களில் அவர் மேற்கொண்ட பரிசோதனைகளுக்காக இவர் சுமார் 65,000 ரூபா செலவழித்துளார்.

அரச வைத்தியசாலைகளின் இவ்வாறான துரதிஷ்டமான நிகழ்வுகள் நிகழ பல காரணங்கள்; உள்ளன.

1. அரச வைத்தியசாலைகளில் நவீன பரிசோதனை உபகரணங்கள் இல்லை.

2. இன்னொரு புறத்தில் அரச வைத்தியசாலைகளில் செய்யப்படும் பரிசோதனைகள் மற்றும் அதன் மூலம் பெறப்படும் மருத்துவ அறிக்கைகள் மீது அரச வைத்தியர்களுக்கு நம்பிக்கையீனம் நிலவுவதும் முக்கிய காரணம்.

3. விசேட துறை சார்ந்த வைத்தியர்கள் நேரடியாக சென்று நோயை பார்வையிடாமல் அறிக்கைகளை மட்டும் வைத்து முடிவுக்கு வருவதாலும் இவ்வாறான துர்பாக்கிய நிலைகள் ஏற்படுகின்றன.

மருத்துவ பரிசோதனை இல்லாமல் வேதியியல் அறிக்கைகளை மாத்திரம் கருத்தில்கொண்டு நோயை இனங்காணும் முறை மிக அவசரமானதும் நிச்சயமானதுமாக இருந்தாலும் அதற்காக நோயாளி செலவழிக்கவேண்டியதொகைமிக அதிகம். இது மட்டுமல்லாமல் தேவையான மருத்துவ அறிக்கைகளை மட்டுமன்றி தேவையற்ற மருத்துவ பரிசோதனைகளையும் பெற்றுக் கொள்ளும் படி வைத்தியர் கட்டாயப்படுத்துவதால் இலாபம் பெறுவது தனியார் வைத்தியசாலைகளே.

### ஓய்வூதிய திட்டம்

தான் ஒரு மகத்தான பணியில் இருப்பதால் ஒவ்வொரு 5 வருடத்துக்கும் தமக்கு கிடைக்கும் தீர்வையற்ற வாகனத்திற்கான அனுமதிப்பத்திரம் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று வைத்தியர்கள் எதிர்பார்க்கின்றனர். அரச நிர்வாக சேவையில் இருப்போர்களும் அரச பணியாளர்களும் இதே போன்று தான் எதிர்பார்க்கிறார்கள்.

இவர்கள் அனைவரினதும் அதிருப்திக்கான காரணம் முழு இதுவாக இருந்தாலும் இதனை தமது போராட்டத்தின் முதன்மை காரணமாக அடையாளப்படுத்த அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் தனது போலியான போராடத்தை நியாயப்படுத்த தாம் அரச சேவையை பாதுகாக்கவே போராடுவதாக பொய்யுரைக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் சொல்ல விரும்புவது ஓய்வுதியத்தை இல்லாமல் செய்து தற்போது நடைமுறையில் இருக்கும் ஓய்வுதியத் திட்டத்துக்கு பதிலாக அரச சேவைக்கு புதிதாக இணைந்து கொள்வோரின் பங்களிப்புடன் அரசின் பங்களிப்பையும் இணைத்து அரச பணியாளர்களுக்கு பாதகமான புதிய ஓய்வூதிய திட்டம் ஒன்றை அரசு அறிமுகப்படுத்த முயற்சிப்பதாக குற்றம் சாட்டுகிறது என்பதாகும்.

உலகில் எல்லா நாடுகளிலும் அரச பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவது நாட்டின் வரவு செலவு திட்டத்தால் அல்ல. ஓய்வூதியத்துக்கென்று சேகரிக்கப்பட்டிருக்கும் ஓய்வூதிய நிதியிலிருந்தே வழங்கப்படுகிறது. இதற்கு அரச பணியாளர்களைப் போன்றே இன்னொரு தரப்பாக அரசும் பணத்தின் மூலம் பங்களிப்பு செய்கிறது. ஆனால் இலங்கையில் அரச பணியாளர்களுக்கு ஓய்வுதியம் வழங்கப்படுவது இப்படியான ஓய்வுதிய நிதியால் அல்ல அரசின் வருடாந்த வரவு செலவு திட்டத்தாலேயே.

இது அரசின் வரவு செலவுத்திட்டத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் ஓய்வூதியம் பெறுபவர்களின் எதிர்காலத்தின் பாதுகாப்பை கணக்கில் கொள்ளாமல் நடைமுறைபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மிகத் தவறான ஒரு முறையாகும். இந்த முறையில் இருக்கும் பிழையை, பாதுகாப்பற்ற தன்மையை முதலில் அடையளாப்படுத்தியவர் பேராசிரியர் என்எம் பேரேரா அவர்கள்.

ஆரம்பத்திலேயே சேமநல நிதி (ணிறிதி) ஒன்றை ஏற்படுத்தாமல் பணியாளர்கள் ஓய்வு பெறும் போது பணியாளர்களின் சேமநல பணத்தை மொத்தமாக பணியாளருக்கு கொடுக்கும் பொறுப்பு முதலாளியிடம் வழங்கப்பட்டால் அதனால் உருவாகப் போகும் குழப்பம் மிக சிக்கலானதாகவே இருக்கும்.

சேமநலனுக்காக ஒரு நிதி உருவாக்கப்பட்டு அதற்கு பணியாளர் முதலாளி இருவரும் பங்களிப்பு செய்து உருவாக்கப்படும் நிதி மூலம் பணியாளர்களுக்கு பெறும் பாதுகாப்பு இருக்கிறது,கிடைக்கும் என்ற நிச்சயத் தன்மை இருக்கிறது

ஓய்வூதியத்துக்கான நிதி உருவாக்கப்படுவதிலும் இதே நன்மை தான் பணியாளர்களுக்கு கிட்டப் போகிறது. ஓய்வூதியம் வழங்கும் முறையை என்றாவது பாதுகாப்பான நிலையான ஒன்றாக மாற்ற வேண்டுமானால் இதே முறையை கையாள்வதே சிறந்தது.

ஓய்வுதியத்துக்காக அரசு செலவிடும் தொகை வருடா வருடம் பாரியளவில் அதிகரித்து வருகிறது. இவ்வருடம் ஓய்வுதியத்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை 170 பில்லியன். ஓய்வுதியத் தொகை பாரியளவு அதிகரித்து அதனை செலுத்த முடியாத நிலை உருவாகும் முன்னர் அதற்கான நிதி ஒன்றை ஏற்படுத்துவது அரசின் பொறுப்பாகும்.

### அரசாங்கத் தொழில்

நாட்டின் சனத்தொகையினுடன் ஒப்பிடுகையில் வீகிதசாரப்படி அதிகமான அரச உத்தியோகத்தர்ககள் இருக்கும் நாடாக இருந்தது இலங்கை. 20 மில்லியன் மக்களுக்கு 1.4 மில்லியன் அரச ஊழியர்கள்.

இவ்வருடம் அரச ஊழியர்களுக்கான சம்பளத்துக்காக அரசின் மொத்த செலவு 670 பில்லியனாக கணிப்பிடப்பட்டுள்ளது. அரச ஊழியர்களின் உற்பத்தி திறன் நல்ல நிலையில் இல்லை, மிகவும் மோசமாக வீழ்ச்சி கண்ட நிலையிலேயே உள்ளது.

அரச சேவைக்கு ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படுவ்து தேவைக்கேற்ப அல்ல மிகக் குறுகிய அரசியல் இலாபத்தை நோக்காக கொண்டே இணைத்துக்கொள்ளப்படுகிறார்கள். அரச சேவையின் உண்மையான தேவையை கருத்தில் கொள்ளாமல் வேலைவாய்ப்பற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் ஒரு வழிமுறையாக அரச சேவைக்கு ஆள் சேர்ப்பதனை பொதுவான ஒரு வழிமுறையாக கையாள்வது நாட்டை படுகுழியில் தான் தளளும்.

அரசு செய்ய வேண்டியது தேவையான எண்ணிக்கையில் அரச ஊழியர்களை இணைத்துக் கொண்டு அரச சேவையை வினைத்திறனுள்ளதாக மாற்றுவதாகும். அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்துக் கேற்ற வேலை அவர்களிடமிருந்து வாங்கவில்லையென்றால் அது நாட்டின் வரவு செலவுதிட்டத்திற்கு தேவையற்ற சுமையாக மாறி நாட்டின் பொருளாதாரத்தையும் பாரியளவு பாதிக்கும்.

தற்பொழுது அரச தொழில் புரிந்துகொண்டிருப்பவர்களை அப்புறப்படுத்துவது சிறந்த நியாயமான நடவடிக்கையாக அமையாது. ஆனாலும் அரச சேவையில் உள்ள அளவுக்கதிமான ஊழியப் படையை சிறந்த வழிமுறைகள் மூலம் அதனை நாட்டின்; சனத்தொகையின் அளவுக்கேற்ப நெறிப்படுத்த வேண்டும். வறுமைகோட்டின்கீழ்உள்ளஎமதுநாட்டை ஒரு முன்னேறிய நாடாக அப்போது

தொடர்ச்சி 21-ம் பக்கம்...



# பேலியோ டயட்: நல்லதும் கெட்டதும்

ஜெ.ஸ்ரீராம்
சித்தமருத்துவர்

கடந்த வாரத் தொடர்ச்சி

'பேலியோ டயட்' உணவு முறையில் அடிப்படையில் சில நல்ல அம்சங்கள் இருப்பதை மறுக்க முடியாது. அவை:

1. கோதுமை, மைதா, ரவை போன்றவற்றிலிருந்து தயாரிக்கப்படும் ரொட்டி, பிஸ்கெட், பரோட்டா வகைகளைத் தவிர்க்க 'பேலியோ டயட்' வலியுறுத்துகிறது. கோதுமையில் உள்ள குளூட்டன் என்ற புரதம் பலருக்கும் ஒவ்வாமையை ஏற்படுத்தும் என்பதால், அதைத் தவிர்ப்பது நலம். கோதுமையைப் பன்னெடுங்காலமாகச் சாப்பிட்டு வந்த அவை விளையும் பகுதி மக்களுக்கே, கோதுமைப் புரதம் ஒத்துக்கொள்ளாத நிலை இருப்பதைப் பார்க்கிறோம். இந்நிலையில் அரிசி சாப்பிட்டு வளர்ந்த நம்மிடையே அது ஏற்படுத்தும் பாதிப்பைப் பற்றி சொல்ல வேண்டியது இல்லை.

2. நெய், எண்ணெய், தேங்காய்ப் பால், தேங்காய் எண்ணெய் போன்றவற்றைப் பற்றிய தேவையற்ற அச்சத்தை நீக்கி, ஆரோக்கியமானது என்று 'பேலியோ டயட்' வலியுறுத்துவது.

3. காய்கறிகளை அதிகமாக உட்கொள்ளவும் அறிவுறுத்துகிறது.


மேற்கண்ட ஆரோக்கியமான வழிமுறைகளை 'பேலியோ டயட்'டைக் கடைப்பிடிக்கும்போது, தொற்றா நோய் பாதிப்பிலிருந்து விடுபடுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கிடைக்கிறது.

## பாதகங்கள் உண்டு

'பேலியோ டயட்' உணவு முறையில் சில நல்ல அம்சங்கள் இருக்கும் அதேநேரம், அதிலுள்ள பாதகங்களையும் பரிசீலிக்க வேண்டும். அவற்றில் முக்கியமானவை:

ஆதிமனித உணவு முறையில் அதிக அளவு இறைச்சியை உட்கொள்வதால் சிறுநீரில் கால்சியம், ஆக்சலேட், யூரிக் அமிலம் போன்றவற்றின் அளவு அதிகரிக்கும். இதனால் சிறுநீரின் அமில காரச் சமநிலை பாதிக்கப்படலாம். சிட்ரிக் அமிலம் அதிகமாக வெளியேறும். அதனால் கல்லடைப்பு (Hypocitraturia) வரும். (ஆதாரம்: American journal kidney disease, 2002 Aug, 265-274)

இதற்கான தீர்வு: இறைச்சி உணவு உட்கொண்டால் சித்த மருத்துவத்தில் எலுமிச்சைச் சாற்றையும் சேர்த்து எடுத்துக்கொள்வது அல்லது குடம்புளி (Hydroxy citrate) பயன்படுத்த வலியுறுத்தப் படுகிறது. இதன்மூலம் அதிகமான சிட்ரிக் அமிலம் வெளியேறுவது தடுக்கப்பட்டு, கல்லடைப்பு உருவாகாமலும் தடுக்கப் படுகிறது. இந்தப் பாதுகாப்பு வழிமுறை குறித்து ஆதிமனித உணவு முறை எதையும் குறிப்பிடவில்லை.




## அதிக இறைச்சி சாப்பிடலாமா?

'பேலியோ டயட்' பற்றி விளக்கும் நூல்களில் இறைச்சி சாப்பிட்டால் புற்று நோய் வரும் என்ற உலகச் சுகாதார நிறுவனத்தின் ஆராய்ச்சி, எச்சரிக்கை தொடர்பாக எந்தக் குறிப்பும் இடம் பெறவில்லை. எனவே, அதிக அளவில் இறைச்சி சாப்பிடுவது ஆபத்தானது என்பதைக் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

## இதற்கான தீர்வு

இறைச்சியை வேகவைத்தோ அல்லது குழம்பில் இட்டோ வாரத்தில் இரண்டு முறை 60 கிராம் அளவுக்கு மட்டும் உட்கொள்ளலாம். ஆஸ்திரேலியச் சுகாதாரத் துறை, ஆஸ்திரேலியா புற்று நோய்க் கழகங்கள் இதை வலியுறுத்துகின்றன. அளவுடன் இறைச்சியை உட்கொள்வதால் புற்றுநோயிலிருந்து தப்பிக்கலாம். உப்புக்கண்டம், சுக்கா வறுவல்போன்றமுறைகளில்இறைச்சியைச் சாப்பிடுவது நல்லதல்ல.

## அரிசி உணவு கெட்டதா?

ஆதிமனித உணவு முறை, அரிசி உணவை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அரிசி உணவைத் தவிர்த்தால் மட்டுமே உடல்பருமன் குறையும் என்று குறிப்பிடுகின்றனர்.

## தீர்வு

பன்னெடுங்காலமாகத் தமிழக மண்ணில் உட்கொள்ளப்பட்டுவரும் அரிசியை, பட்டை தீட்டிய அரிசியாக மாற்றிப் பயன்படுத்துவதுதான் உடற்பருமன் அதிகரிப்பதற்குக் காரணம். பட்டை தீட்டிய அரிசியை வேக வைக்கும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினால், உடல் பருமன் ஏற்படாது என்று ஆய்வுகள் சொல்கின்றன. (ஆதாரம்: https://www.acs.org.New low calorie rice could help cut rising obesity-American chemical society). அமெரிக்க வேதியியல் கழகத்தின் கருத்தரங்கில் இலங்கையைச் சேர்ந்த சுதாகர் ஏ. ஜேம்ஸ் முன்வைத்த அரிசியை வேக வைக்கும் முறை பெரும் வரவேற்பு பெற்றது (பெட்டிச் செய்தியில் காண்க).

ஒரு கோப்பை அரிசி 240 கலோரி சக்தியைத் தரும். அதேநேரம் சிறப்பு சூடுபடுத்துதல், வேக வைக்கும் முறையை மாற்றுவதன் மூலம் 50% முதல் 60% கலோரி குறையும்.

அரிசியில் இரண்டு வகையான ஸ்டார்ச் (மாவுச்சத்து) இருக்கிறது. 1. செரிக்கக்கூடிய மாவுச்சத்து 2. எளிதில் செரிக்க முடியாத மாவுச்சத்து. செரிக்க முடியாத மாவுச்சத்தை அரிசியில் அதிகப்படுத்து வதன் மூலம் உடலுக்குக் கிடைக்கும் கலோரி அளவு குறையும்.

## அதிகரிக்கும் மலக்கட்டு

ஆதிமனித உணவு முறையில் அதிகமான இறைச்சியை உட்கொள்வதால் வயிற்றில் நன்மை செய்யும் பாக்டீரியாவின் எண்ணிக்கைகுறைந்து,தீமைபயக்கும்பாக்டீரியா ஊக்கு விக்கப்படுகிறது (Dysbiosis). இதன் தொடக்கம்தான் மலக்கட்டு. இந்த உணவு முறையைச் சார்ந் திருப்பவர்கள், அன்றாடம் எதிர்நோக்கும் தொல்லைகளில் முக்கியமானது இது.

## தீர்வு

தினமும் தூங்குவதற்கு முன் 5 மி.லி.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஆமணக்கு எண்ணெய் அல்லது விளக்கெண்ணெயை இளஞ்சூடான பசும் பாலில் கலந்து சாப்பிடுவது நல்லது.

ஆதிமனித உணவு முறை என்பது மருத்துவரின் ஆலோசனைப்படி, உடலில் குறிப்பிட்ட அறிகுறிகள் குறையும்வரை எடுத்துக்கொள்ள வேண்டிய மருத்துவ உணவு முறை. அன்றாடம் சாப்பிடக்கூடிய உணவு முறை அல்ல என்ற தெளிவைப் பெற்றால், தேவையற்ற பிரச்சினைகள் குறையும்.

### சோற்றில் மாவுச் சத்தைக் குறைக்கும் முறை

தேவையான அளவு தண்ணீரில் ஒரு தேக்கரண்டி அளவு தேங்காய் எ்ண்ணெயைச் சேர்த்து நன்றாகக் கொதிக்க வைக்கவும். பிறகு அதில் ஒரு கோப்பை அளவு அரிசியை எடுத்து 40 நிமிடங்கள் சிறு தீயளவில் சூடாக்க வேண்டும். 20-25 நிமிடங்களுக்குக் கொதிப்பு அடங்கும்வரை காத்திருந்து, பின் 12 மணி நேரம் குளிரூட்டப்பட்ட இடத்தில் வைத்து, காலையில் லேசாகச் சூடுபடுத்திப் பரிமாறினால் சோற்றில் செரிக்க முடியாத மாவுச்சத்தின் அளவு 10 மடங்கு கூடுதலாக இருக்கும். ரத்தத்தில் சர்க்கரையை அதிகரிக்கும் மாவுச்சத்தின் அளவு குறைந்துவிடும்.

அரிசியை வேக வைக்கும்போது தண்ணீரில் எண்ணெயைச் சேர்த்து வேக வைப்பதால், செரிக்க முடியாத மாவுச் சத்தின் அளவு குறிப்பிடத்தக்க அளவு கூடுகிறது. 12 மணி நேரம் குளிரூட்டப்பட்ட நிலையில் இருக்கும்போது அரிசியில் உள்ள செரிக்கக்கூடிய மாவுச்சத்தின் அளவு, செரிக்க முடியாத மாவுச்சத்தாக மாறுகிறது. இம் முறையில் வேக வைத்த சோற்றைச் சாப்பிட்டால் உடல் பருமன் ஏற்படாது. இது உணவு முறை என்பதால் மருத்துவக் கண்காணிப்பு தேவையில்லை.

### காய்கறி, பழமே சிறந்தவை

தினசரி அதிக அளவில் காய்கறிகள் (அவியல், கூட்டு), பழங்கள் சாப்பிடும் தமிழர்களின் உணவுப் பழக்கத்தை அங்கீகரிக்கும் வகையில், தினசரி 400 கிராம் காய்கறி, பழத்தை உட்கொண்டுவந்தால் புற்றுநோய், மாரடைப்பு, ரத்தஅழுத்தம் போன்றவை ஏற்படாது என்பதை உறுதிப்படுத்தி உலகச் சுகாதார நிறுவனம் (கீபிளி) அறிக்கை வெளியிட்டுள்ளது (ஆதாரம்: Fruit and vegtables for health report of a joint FAO and WHO workshop, 1-3 Sep, 2004 Kobe Japan).

இந்த உணவு முறையை முன்னேறிய நாடுகள் பல்வேறு பெயர்களில் தற்போது நடைமுறைப்படுத்திவருகின்றன. ஆஸ்திரேலியாவில் 'Go for 2-5' என்ற திட்டத்தின் கீழ் 150 கிராம் பழங்கள், 75 கிராம் காய்கறிகளைத் தினசரி உண்ண வலியுறுத்தப்படுகிறது. ஜெர்மனியில் '5 am Tag' என்ற திட்டத்தின்படி தினசரி காய்கறிகள், பழங்கள் உட்கொள்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் '5 a day' என்ற திட்டத்தில் தினமும் வாழைப்பழம், வெண்டைக்காய் சாப்பிட வலியுறுத்தப்படுகிறது.


இப்படித் தினசரி அதிக அளவு இறைச்சி உண்ணக்கூடிய நாடுகள், தங்கள் நாட்டு மக்களுக்கு நம்ம ஊர் உணவு முறையான காய்கறி, பழங்கள் உட்கொள்வதைச் சிறப்பு என்றும், அறிவியல்பூர்வமானது என்றும் வலியுறுத்திவருகின்றன. ஆனால், அதை நாம் உணராமல் இருப்பதுதான் ஆச்சரியம்.

### சைவத்துக்குத் திரும்பும் அயல் நாடுகள்

தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் நிலப்பகுதிகளையும், அங்கே வாழும் மக்களின் உணவு முறையையும், பருவகாலங்களான பெரும்பொழுதை ஆறாக (கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்) என்று பகுத்து, அந்தக் காலத்தில் பூக்கும் தாவரப் பொருட்களை உணவாக உட்கொண்டால், குறிப்பிட்ட பருவகாலத்தில் தோன்றும் நோய்களை வெல்லலாம் என்றார். இப்படி இயற்கையே உருவாக்கிய சூத்திரத்தை வாழ்வியல் நெறிமுறையாகக் கடைபிடித்து உலகுக்கு வழிகாட்டியவர்கள் நம் முன்னோர்.

இளவேனிற் காலமான சித்திரை வைகாசியில் வேப்ப மரங்கள் பூக்கும். கசப்பு, துவர்ப்பு, காரச் சுவையுள்ள தாவரங்கள் பூத்துக் குலுங்கும். இதற்கு நாவலும் மருதமும் சாட்சியம் கூறுகின்றன. சித்திரை முதல் நாளில் வேப்பம்பூவை உணவாக உட்கொண்டு, கோடைகாலத்தில் ஏற்படும் தொற்றுநோய்களைத் தடுத்துக்கொள்ள முடியும். இவ்வாறு ஒவ்வொரு பருவக் காலத்துக்கும் ஏற்ற உணவு உண்பதைப் பண்டிகையாக மாற்றி, அடுத்து வரும் சந்ததி கடைபிடிப்பதற்கான உத்தியாகப் பயன்படுத்தப்பட்டது.

(முற்றும்)




# திரைப் பார்வை
# காதலுக்கு மரியாதை

தமிழ் சினிமாவைப் பொறுத்த வரைக்கும் 1990களில் ரசிகர்கள் மத்தியில் அதிகம் எடுபடக் கூடியவையாக இரண்டு கதையமைப்புக்களே காணப்பட்டன. ஒன்று காதல், இன்னொன்று சென்டிமென்ட். மாஸ் ஹீரோக்களின் ஆக்ஷன், மசாலாப் படங்கள் அவ்வப்போது வந்து போனாலும் காதலுக்கும், சென்டிமென்டுக்கும் மக்கள் மத்தியில் தனி இடம் இருந்து கொண்டுதான் இருந்தது. இந்த மாதிரியான சூழ்நிலையில் ஒரு காதல் படம் அதுவும் சரியான கதையமைப்பைக் கொண்ட காதல் படம் வெளியாகினால் கண்டிப்பாக அது வெற்றி பெறத்தானே செய்யும். விஜய், ஷாலினி நடிப்பில் 1997ஆம் ஆண்டு வெளிவந்த காதலுக்கு மரியாதை திரைப்படமும் அதே வகைப்பட்டதுதான். காதல் படங்களில் மறக்கப்பட முடியாத படமாக இது அமைந்ததில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

காதலுக்கு மரியாதை திரைப்படத்திற்கு முன்பு விஜய் நடித்த எந்தப் படமும் சரியான ஒரு வெற்றியைப் பதிவு செய்யவில்லை. (லவ்டுடே தவிர) விஜயின் முகத்தை மக்கள் மனதில் பதிய வைப்பதற்காக சந்திரசேகர் தொடர்ந்து படங்களை இயக்கினாலும் அவை எல்லாமே ஹீரோயின்களை கவர்ச்சியாக காட்டியதே ஒழிய விஜய்க்கான ஒரு அடையாளத்தைப் பெற்றுக் கொடுக்கத் தவறின. இந்த நிலையில் ஆபத்பாந்தவனாக விஜயை கை தூக்கி விட்டவர் இயக்குநர் பாசில். காதலுக்கு மரியாதை படத்தின் மூலம் மணிவண்ணன், ஸ்ரீவித்தியா, சிவகுமார், ராதாரவி, தலைவாசல் விஜய் போன்ற நட்சத்திரங்கள் நடித்திருந்தாலும் படத்தைத் தூக்கி நிறுத்தியது படத்தின் கதையமைப்புத்தான்.

உயிருக்கு உயிராகக் காதலிக்கும் ஒரு இந்து இளைஞனும், கிறிஸ்தவப் பெண்ணும் தமது பெற்றோருக்காகத் தமது காதலை தியாகம் செய்யத் துணிகின்றார்கள். இதுவே படத்தின் ஒருவரிக் கதை. இதைச் சுற்றியதாகத் தான் படத்தின் அத்தனை கதாபாத்திரங்களும் பின்னப்பட்டிருந்தன. விஜய் மேல் பாசத்தைக் கொட்டி வளர்க்கும் சிவகுமார், ஸ்ரீவித்தியா, ஷாலினி மேல் உயிராக இருக்கும் தாயும் மூன்று அண்ணாக்களும், விஜய், ஷாலினிக்கு உதவும் மணிவண்ணன் என்று எல்லாக் கதாப்பாத்திரங்களும் அருமையான தேர்வு. ஒரு கிறிஸ்தவக் குடும்பம் எப்படி இருக்கும் என்பதை ஷாலினியின் குடும்பம் விளக்கியது.

'கர்த்தர் மேலே சத்தியம், என் அண்ணாக்கள் மேலே சத்தியம், நான் எப்பவும் வழி தவறிப் போக மாட்டேன்' என்று பைபிள் மேல் ஷாலின் சத்தியம் செய்வது போன்ற காட்சிகள் மூலம் அது ஒரு கட்டுப்பாடுகள் நிறைந்த குடும்பம் என்பதைப் புரிய வைத்திருந்தார் பாசில். அதே நேரத்தில் விஜயின் குடும்பத்தில் அப்பாவுக்கும், மகனுக்கும் இடையில் காணப்படுகின்ற நட்புறவையும் அழகாகக் காட்சிப்படுத்தியிருந்தார். இது மக்கள் மத்தியில் பெரிதும் எடுபட்டது.

விஜயின் திரைப்படங்களில் அதிக நாள் ஓடிய திரைப்படங்களுள் காதலுக்கு மரியாதையும் ஒன்று. இந்தப் படத்தில் விஜய்க்கும் ஷாலினிக்குமான அறிமுகக் காட்சியைத் (ஒரே புத்தகத்தை ஒரே நேரத்தில் இருவரும் எடுப்பது) தழுவியதாக நிறைய திரைப்படங்களின் காட்சிகள் இப்போதும் எடுபட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இந்தப் படத்தில் விஜய் ஷாலினியின் ஜோடி இளைஞர்களைக் கவர்ந்தது. (ஆண்களுக்கு ஷாலினி போலவும், பெண்களுக்கு விஜய் போலவும் காதல் தேடியது உண்டு) அதற்கு ஏற்றாற் போலவே படத்தின் காதல் காட்சிகளும் அமைந்திருந்தன. விஜய் தனது காதலை வெளிப்படுத்தும் போது ஷாலினி அதை ஏற்பதா? வேண்டாமா? ஏன்று தவிப்பதும் குடும்பத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பெண்ணாக விஜயின் காதலை ஏற்றுக் கொள்ளத் தயங்கும் இடத்திலும் சரி பெற்றோருக்காக காதலை விட்டுக் கொடுக்க முடிவெடுக்கும் இடத்திலும் சரி ஷாலினியின் நடிப்பு அபாரமாக வெளிப்பட்டது.

இளைஞராஜாவின் இசையில் பாடல்கள் எல்லாமே சூப்பர் ஹிட் ஆகின. என்னைத் தாலாட்ட வருவாளா என்ற ஒரு பாடல் மூலமே படம் பட்டி தொட்டியெங்கும் பரவியது என்பது சொல்லித் தெரிய வேண்டிதில்லை. ஹரிஹரனின் குரலிலும், இளைஞராஜாவின் குரலிலும் கேட்டு ரசிக்காதவர்களே இல்லை. அந்தளவுக்கு பாடல்கள் மூலம் பட்டையைக் கிளப்பியிருந்தார். இளைஞராஜாவின் ஆனந்தக் குயிலின் பாட்டு, ஓ பேபி, ஒரு பட்டாம்பூச்சி, இது சங்கீதத் திருநாளோ போன்ற மற்ற பாடல்களும் எல்லோர் மனதிலும் இடம்பிடித்த பாடல்களாகவே இருந்தன. விஜயின் படம் என்றாலே பாடல்கள் ஹிட் ஆகும் என்ற எழுதப்படாத விதி இந்தப் படத்தில் இருந்துதான் தொடங்கியது. (படத்தில் விஜயும் ஒரு பாடல் பாடியிருந்தார்). பாடல்கள் எந்த அளவுக்கு இருந்ததோ அதே அளவுக்கு படத்தின் வசனங்களும், நகைச்சுவைகளும் சிறப்பாகவே காணப்பட்டன.

மொத்ததில் விஜய் என்றாலே விடலைப் பையன்கள்தான் ரசிகர்கள். எப்போதும் ஹீரோயின் பின்னால்தான் சுற்றுவார் என்ற இமேஜையே உடைத்து தமிழ் திரையையே ஒரு கலக்கு கலக்கியது காதலுக்கு மரியாதை படம். விஜய், ஷாலினி என்று இருவருமே ஒருவருக்கொருவர் போட்டி போட்டு நடித்திருந்தாலும் மொத்தத்தில் இது ஒரு இயக்குநருக்கான படமே. ஹீரோவை முதன்மைப்படுத்தும் மாஸ் ஆன மசாலா விடயங்கள் எதுவும் இல்லாமல் தனியே கதையை மட்டும் நம்பி படத்தை எடுத்திருந்தார் இயக்குநர். (இன்னொரு விடயம் விஜய்க்கு ரொம்ப பிடித்த படமும் இதுதானாம்). காதலுக்காக தியாகப் போராட்டம், சாகசங்கள் என்பது எல்லாம் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, காதலையே தியாகம் செய்யச் சொன்ன அந்த ஒற்றை விடயம்தான் காதலுக்கு மரியாதையை இன்று இந்த அளவுக்கு உயர்த்தி வைத்தது. ●

## பாலாவின் காதல் கதை!

சசிகுமாரின் தாரை தப்பட்டை படத்தையடுத்து குற்றப்பரம்பரை படத்தை இயக்க திட்டமிட்டார் பாலா. ஆனால் அது தனது கதையென பாரதிராஜா கொதிக்க, இருவரும் பகிரங்கமாக மோதிக்கொண்டனர். அந்த படத்தில் நடிக்க அரவிந்த்சாமி, விஷால், ஆர்யா, ராணா, அதர்வா என பலரிடம் பேசி வைத்திருந்தார். பாரதிராஜாவுடனான தகராறு தீர்ந்தாலும், ஆரம்பமே சர்ச்சையாக அமைந்ததால் அந்த படத்தை தள்ளிவைத்துவிட்டு புதிய படம் இயக்க ஆரம்பித்துள்ளார் பாலா. சாட்டை யுவன், சூப்பர்சிங்கர் பாடகி பிரகதி ஆகியோரை ஒப்பந்தம் செய்துள்ளார். இது காதல் கதையாம். பிராமண பெண்ணுக்கும், தேவர் பையனுக்கும் உருவாகிய காதலை மையமாக வைத்த படமாம்.

## மீசைக்கு வந்த சோதனை!

இந்தி நடிகர்கள் மீசை வைப்பதில்லை. தமிழ் சினிமாவிற்கு மீசை அவசியம். இதில் இன்னொரு சுவாரஸ்யம் உள்ளது. இந்தி சினிமாவில் லிப் டு லிப் முத்தக்காட்சி சாதாரணம். தமிழில் கிடையாது. ரங்கூன் இந்திப்படத்தில் சாயீப் அலிகான், சாஹிப் கபூர் நடித்தனர். இரண்டாம் உலகப்போர் கால கதை. இருவருடனும் கங்கனா ரணாவத் நெருக்கமாக நடித்தார். அத்துடன் லிப் டு லிப் காட்சிகளும் இருந்தன. இரண்டு ஹீரோக்களும் மீசையுடன் நடித்தனர். அதனால் கங்கனா தயக்கம் காட்டினார். இதுபற்றி கங்கனா கூறும்போது இரண்டு ஹீரோக்களுடனும் லிப் டு லிப் காட்சியில் நடித்தது இடைஞ் சலாக இருந்தது. இருவரும் மீசை வைத்திருந்தனர். ஆனால் கதாபாத்திரம் அப்படி அமைந்தால் தொல்லையாக இருந்தாலும் நடித்துதானே ஆகவேண்டும் என்றுள்ளார்.



# டூரிங் டாக்கீஸ்

## த்ரிஷா இல்லைன்னா பிந்து மாதவி!

நடிகை த்ரிஷாவுக்கும் படஅதிபர் வருண் மணியனுக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது, இருவரும் கருத்து வேறுபாட்டால் பிரிந்தனர். பின்னர் தீவிரமாக நடிக்க தொடங்கிவிட்டார் த்ரிஷா. அண்மையில் வருண் மணியனும் நடிகை பிந்துமாதவியும் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் வெளியாகின. இருவரும் டேற்றிங் சென்றுள்ளனர், விரைவில் திருமணம் செய்யவுள்ளதாக செய்திகள் வந்தன. இதை வருண் மறுத்துள்ளார். "நான் நண்பர்களுடன் விடுமுறையை கழிக்க மாலதீவு சென்றேன். அங்கு மாதவியும் வந்தார். அவர் என் நண்பர். அவ்வளவுதான். திருமண செய்தியெல்லாம் பொய். நான் தனியாகத்தான் இருக்கிறேன். ஆனால் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்றுள்ளார்.

## அஜித்தின் நள்ளிரவு பழக்கம்!

அஜித்திடம் ஒரு பழக்கம் இருக்கிறது. தனது பட அறிவிப்புக்களை வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணிக்குத்தான் வெளியிடுவார். அந்த வழக்கப்படி கடந்த வியாழன் 12 மணிக்கு அவரது விவேகம் படத்தின் முதல்பார்வை வெளியிடப்பட்டுள்ளது. வெளியானதிலிருந்து இணையத்தில் சக்கை போடு போடுகிறது. விவேகம் என்ற பெயர் ஸ்ரொப்வோட்ச் எழுத்துருவில் உள்ளதால் இது நேரத்துடன் தொடர்புடைய கதையாக இருக்கலாமென்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் ஏற்பட்டுள்ளது.

## பிரிந்த கணவனிற்காக உருகும் நடிகை!

இயக்குனர் விஜய் மீது கோபமெதுவும் கிடையாதென்றுள்ளார் அமலாபால். விஜயுடன் இணைவீர்களா என அவரிடம் கேட்டபோது அவர் அளித்த பதில் இது "அடுத்த 2 வருடங்களில் சினிமாவில் நடிப்பது மட்டும்தான் இலக்கு. விஜயும் நானும் மீண்டும் சேர்ந்து வாழ்வோமா என்பது தெரியவில்லை. வாழ்வில் எதுவும் நிலையானதில்லை. எதையும் கணிக்க முடியாது. நானும் விஜயும் வாழ்வின் வேறொரு விதத்தில் சந்தித்திருந்தால் மகிழ்ச்சியுடன் ஒன்றாக வாழ்ந்திருப்போம். இப்போது அவரும் நானும் வேறுவேறு நிலையில் இருக்கிறோம். இரண்டு அழகானவர்கள் தவறான கதையில் சந்தித்தைபோ எங்கள் வாழ்க்கை அமைந்துவிட்டது. விஜய் மீது எந்த கோபமும் கிடையாது. இன்றைக்கும் எனக்கு மிகப்பிடித்தவர் அவர்தான்" என்றுள்ளார்.

## கணவனுடன் சண்டையிட்ட சினேகா!

நடிக, நடிகையர்கள் திருமணம் செய்தால், சில மாதங்களிலோ வருடங்களிலோ விவாகரத்தாவதுதான் வழக்கம். அதில் விதிவிலக்கு சில தம்பதிகள் மட்டுமே. நடிகர் பிசன்னா, நடிகை சினேகா இருவரும் காதலித்து திருமணம் செய்தனர். இருவரும் மனமொத்த தம்பதியாக வாழ்கின்றனர். 2 வயதில் ஆண்குழந்தையும் உள்ளது. இந்த நிலையில் இவர்களிற்குள் கருத்து வேறுபாடு என்ற செய்தி பரவியது. உண்மையை அறிவதற்காக விசாரித்தால் அந்த செய்தி பொய் என்பது தெரிந்தது. புது நடிகர்களே தயாரிப்பாளர்களாகிக் கொண்டிருக்கும் நிலையில், தானும் படம் தயாரிக்க விரும்பியுள்ளார் பிரசன்னா. ஆனால் சினேகா இதற்கு அனுமதிக்கவில்லை. அந்த விவாதத்தையே கருத்து வேறுபாடு என வதந்தியாக்கியுள்ளனர்.



## சரத்குமாரை கொல்லும் ஜி.வி!


மூத்த நடிகர்கள் ஒரு கட்டத்தின் பின் தமக்கேற்ற பாத்திரங்களில்தான் நடிக்க வேண்டும். அந்தவகையில் சரத்குமாரும் வில்லனாக நடிக்க களமிறங்கிவிட்டார். ஜி.வி. பிரகாஸ்குமார் நடித்துவரும் புதிய படமான அடங்காதேயில் வில்லனாக நடிக்கிறார் சரத்குமார். இதுவரை காதலுக்காக படங்களில் மோதிக்கொண்டிருந்த ஜி.வி முதன்முறையாக அரசியல்வாதியுடன் மோத உள்ளராம். அவர் மோதவுள்ள அரசியல்வாதி சரத்குமார். இருவருக்குமிடையிலான மோதல்தான் கதையாம். ஒரு கட்டத்தில் சரத்குமாரை ஜி.வி கொலை செய்துவிடுவாராம். இதன்பின் எப்படி தப்பிக்கிறார் என்பதே கிளைமாக்ஸ்.

## சந்தானத்திற்கு பிடித்த கதை!

எம்.ராஜேஷ் இயக்கிய படங்களில் முக்கிய வேடத்தில் நடித்தவர் சந்தானம். முதன்முறையாக அவர் இயக்கும் படத்தில் ஹீரோவாக நடிக்கிறார். சர்வர் சுந்தரம், மன்னர் வந்தானடி, சக்க போடு போடு ராஜா, ஓடிஓடி உழைக்கணும் போன்ற படங்களில் நடிக்கிறார். இதையடுத்து ராஜேஷ் படத்தில் இணைக்கிறார். கடவுள் இருக்கான் குமாரு படத்திற்கு அடுத்ததாக ராஜேஷ் உருவாக்கிய கதை சந்தானத்திற்கு மிகப்பிடித்துள்ளது. இதையடுத்து இருவரும் இணைகிறார்கள்.

## மடோனா அல்ல மகிமா!

காதலும் கடந்து போகும் படத்தில் நடித்தவர் மடோனா. ஜி.வி.பிரகாஷ்குமார் நடிக்கும் புதிய படத்தில் இவர்தான் நாயகியென்ற தகவல் அண்மையில் பரவியது. ஈட்டி படத்தை இயக்கிய ரவி அரசு இந்தப்படத்தை இயக்குகிறார். ஆனால் மடோனாவின் வாய்ப்பு பறிபோயுள்ளது. அந்த வாய்ப்பை மகிமா பெற்றுள்ளார். குற்றம் 23 படத்தில் அருண் விஜய் ஜோடியாக நடித்தவர் மகிமா. அழகான மற்றும் நடிக்கும் திறனுள்ள நடிகையை தேடினோம். மகிமா எல்லா விதத்திலும் பொருத்தமாக இருந்தார் என்றுள்ளார் இயக்குனர். மெக்கானிக்கல் இன்ஜினியராக ஜி.வி நடிக்கிறாராம்.









# வர்த்தக நகரம் கொடிகாமம்

யாழ் குடாநாட்டில் தென்மராட்சிப் பிரிவில் அமைந்துள்ள ஆர்ப்பட்டமில்லாத நகரம் கொடிகாமம். தெற்கில் கச்சாயும், மேற்கில் மந்துவிலும், வடக்கில் வரணியும், கிழக்கில் மிருசுவில் மற்றும் உசனும் சூழ்ந்ததாக காணப்படுகின்றது கொடிகாமம். ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் பிரதேசங்கள் கோவிற்பற்று என்றவாறு பிரிக்கப்பட்ட போது கச்சாய் போவிற்பற்று என்ற பிரிவின் முக்கிய பகுதியாக கொடிகாமம் காணப்பட்டது.

### பெயர்க் காரணம்

கொடிகாமம் என்ற பெயர் இந் நகருக்கு வந்ததற்கு இரு வேறு காரணங்கள் சொல்லப் படுகின்றன. அதாவது கோடி+கமம் என்பதே பிற்பாடு மருவி கொடிகாமம் ஆனது என்பது முதன்மையான காரணம். இங்கே கமத் தொழில் அதிகளவில் காணப்பட்ட காரணத் தால் இப் பெயர் வந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. அதேபோல் "கொடிகமுவ" என்ற சிங்களப் பெயரினாலான செடி ஒன்று இங்கே அதிகளவில் காணப்பட்ட காரணத்தால் இவ் ஊருக்கு இப் பெயர் வந்தது என்று கூறுவோரும் உண்டு.

### கோவில்கள்

கொடிகாமத்தைப் பொறுத்த வரைக்கும் இந்த ஊரில் அதிகமாக இந்துக்களே. வாழ்ந்து வந்தமையால் இந்துக் கோவில்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. லாவண்ய காளி கோவில், பிள்ளையார் கோவில், சிவன் கோவில் என்று இங்கே கோவில்களைக் காணக்கூடியதாக உள்ளது. நகர்ப் புறத்தில் சந்தையினை அண்டியதாக ஒரு காளி கோவில் காணப்படுகின்றது. இக் கோவில் திருவிழா உட்பட எல்லா சடங்குகளையும் சந்தை மற்றும் நகர்ப்புற வர்த்தகர்களே முன்னின்று செய்யும் வழக்கம் காணப்படுகின்றது. இதை விட சிறு தெய்வ வழிபாடுகளும் முன்னைய காலங்களில் அதிகளவில் காணப்பட்டதாக அறிய முடிகின்றது. (இப்போதும் தான்). வைரவர், ஐயனார், கண்ணகி போன்ற சிறு தெய்வ வழிபாடுகள் இங்கே அதிகம். (இவ்வூர் மக்கள் தங்கள் மாடுகள் காணாமல் போனால் தத்தமது குல தெய்வத்தை வணங்கி கோவிலின் முன்னால் ஒரு கம்பை நட்டு விடுவார்கள். சில நாட்களின் பின் காணாமல் போன மாடு அந்தக் கம்பினை நோக்கி வரும்).

கொடிகாமம் தெற்கு கச்சாய் வீதியிலேயே கிறிஸ்தவர்கள் அதிகம் செறிந்து வாழ்கின்றனர். இப் பகுதியில் இவர்களுக்கு என்று புனித பேதுருவானவர் ஆலயம் காணப்படுகின்றது. அதே போல் இங்கே தற்போது முஸ்லிம்களும் வியாபார நோக்கில் தங்கியிருப்பதால் அவர்களுக்கென்று ஒரு சிறு பள்ளிவாசலும் காணப்படுகின்றது.

### நகர்ப்புறம்

யாழ்ப்பாணத்தையும் கிளிநொச்சியையும் இணைக்கும் ஏ9 வீதியில் அமைந்திருக்கும் பிரதான மூன்று நகரங்களுள் கொடிகாமமும் ஒன்றாகும். ஒரு நகரத்திற்கு வேண்டியதான அத்தனை வசதிகளையும் கொண்டதாக ஆர்ப்பாட்டம் இல்லாமல் இருக்கின்றது கொடிகாமம். கொடிகாமத்தின் மத்தியில் இருந்து ஆரம்பிக்கும் வீதிகள் முறையே கிழக்குப் புறத்தால் கிளிநொச்சிக்கும், தெற்குப் புறத்தால் கச்சாயிற்கும், வடக்குப் புறத்தால் பருத்தித்துறைக்கும், மேற்குப் புறத்தால் யாழ்ப்பாணத்திற்கும் செல்கின்றன. ஆரம்ப காலங்களில் கொடிகாமத்தில் வியாபாரத்தில் முஸ்லிம்களே ஆதிக்கம் செலுத்தினர். போருக்குப் பிற்பட்ட காலப் பகுதியிலேயே அவர்களின் வியாபார ஆதிக்கம் குறைய ஆரம்பித்தது.

நகரத்தின் மத்தியில் சந்தை காணப்படுகின்றது. முற்காலத்தில் இச் சந்தை திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களிலுமே கூடப்பட்டது. எனினும் தற்போது இச் சந்தையானது கிழமையின் எல்லா நாட்களிலும் கூடுவதைக் காண முடிகின்றது. அச்சுவேலி, மிருசுவில், கச்சாய் போன்ற இடங்களில் இருந்து வியாபாரிகள் இங்கு வந்து கூடுகின்றனர். முக்கியமாக இங்கே தேங்காய் விற்பனையே (அன்றும் இன்றும்) அமோகமாக நடைபெறுகின்றது. கொடிகாமத்திலும் அதனைச் சுற்றியுள்ள ஊர்களிலும் தென்னை மரங்களின் செழிப்பு அதிகமாகக் காணப்படுவதால் சந்தையிலும் தேங்காய்க் குவியல்களை அதிக அளவில் காணக்கூடியதாய் உள்ளது. இச் சந்தையில் இருந்து தேங்காய்கள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

### தொழில்

கொடிகாம மக்கள் ஆரம்பத்தில் பயிர்ச் செய்கையினையே தமது தொழிலாகச் செய்து வந்தனர். புகையிலை, கத்தரி, மிளகாய் மற்றும் ஊடு பயிர்களையே இவர்கள் அதிகம் செய்து வந்ததைக் காண முடிகின்றது. முக்கியமாக தென்னைச் செய்கையே இங்கு அதிகம் என்பது கொடிகாமம் சந்தையைப் பார்த்தே தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அதே போன்று தற்போது இங்கே அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பல படித்தவர்கள் பணியாற்றி வருவதுடன் சொந்தமாக நகர்ப் புறத்தில் வியாபாரம் செய்து வருவதும் ஒரு முன்னேற்றமான விடயமாகும்.

### கல்வி

ஆரம்ப காலத்தில் கொடிகாமத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயத்தில் தமது அதிக கவனத்தைச் செலுத்தியமையால் கல்வித் துறையில் முன்னேறுவது பற்றி அதிகம் சிந்திக்காமல் இருந்து வந்தனர். இதனால் அங்கு பெரிய பாடசாலைகள் எதுவும் உருவாகவில்லை. (கல்வியில் ஆர்வமுடையோர் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்குப் பயணம் செய்து கல்வி கற்றனர்). தற்போது கொடிகாமத்தில் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, கொடிகாமம் அரசினர் வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் சிறப்பான கல்விப் பணியை மேற்கொண்டு வருவதைக் காண முடிகின்றது. இருப்பினும் இவ் ஊர் மாணவர்கள் சாவகச்சேரி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களையே கல்விக்காக நாடுவதைக் காண முடிகின்றது.

### போக்குவரத்து

கொடிகாமம் ஆனது யாழ் நகரத்துக்கு அடுத்த நிலையில் வைத்து வளர்த்தெடுக்கப்பட வேண்டிய ஒரு இடமாகக் காணப்படுகின்றது. காரணம் கொடிகாமமானது வடமராட்சி, யாழ்ப்பாணம், பச்சிலைப் பள்ளி ஆகிய மூன்று பிரதேசங்களையும் இணைக்கும் முக்கியமான ஒரு சந்திக் குடியிருப்பாகக் காணப்படுகின்றது. இதனால் இப் பகுதியில் மக்கள் அதிகம் கூடுவதுடன் இப் பகுதியின் ஊடான போக்குவரத்துக்களும் அதிகமாகவே நிகழ்கின்றன. அரச பஸ்கள், தனியார் பஸ்கள் என்று அதிகமான பஸ்களை கொடிகாமம் ஊடான ஏ9 வீதியில் அடிக்கடி காணலாம். ஆரம்ப காலங்களில் கொடிகாமம் ரயில்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...












சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

# குழந்தைப் போராளி

விடிவதற்கு முன்னமே நிலவும் நட்சத்திரங்களும் எங்கள் பாதையினை ஒளியூட்டிக் கொண்டிருக்க பற்றைக் காடுகளை ஊடறுத்துக் கொண்டு இராணுவ முகாமை நோக்கி நடந்து நிலையெடுத்துக் கொண்டோம். தாக்குதலைத் தொடர்வதற்கான சமிக்ஞையை எதிர் நோக்கிக் காத்திருந்தோம். அடுத்த அரை மணி நேரம் வரை கொசுக்களின் கடியைத் தாங்கிக் கொண்டு அவைகளுக்கு இரத்த தானம் செய்ய வேண்டியிருந்தது. கொசுக்களின் கடியை சமாளிக்க மூடிய வாயினுள் எனது பற்களைத் தான் கடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அமைதி காக்க வேண்டிய கட்டாயம்.

மரங்கள் எங்களுக்குப் பாதுகாப்பாயிருந்தன. எங்களுக்கு மிக அருகாமையில் எங்களின் எதிரி. முகாமிற்குள் தூங்கும் எங்கள் எதிரியை எங்களால் பார்க்க முடிந்தது. இராணுவ முகாமும் எந்த வித சத்தமும் இன்றி அமைதியாகவே இருந்தது. நான் மூச்சைப் பிடித்துக் கொண்டே இரவின் அமைதியைக் கலைக்கப் போகும் அந்த ஒற்றைத் துப்பாக்கி வேட்டிற்காகக் காத்திருந்தேன். அது தான் எங்களுக்கான சமிக்ஞை முகாமினுள் புகுந்து இராணுவத்தினர் ஒவ்வொருவரையும் அழித்தொழிப்பதற்கான அறைகூவல்.

நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு ஒற்றை வேட்டுப் பறந்தது. ஆண்களும், பெண்களும் இராணுவ முகாமை விட்டு வெளியே நிர்வாணமாக ஓடி வந்தனர்.வந்த வேகத்திலேயே இரத்தக் கோளமாய் அவர்களின் உடல்கள் தரையில் குவிந்தன. இன்னும் அவர்களது உடைகளை அவர்களது கைகள் பிடித்திருந்தன. துப்பாக்கி வேட்டுக்கள் ஆடு, மாடுகளையும் எழுப்பி விட்டது. அவைகளின் கதறல், பறவைகளின் இரைச்சல், மனிதர்களின் வெறிக்நுச்சல், மரணஓலமென ஒரு விநோதமான ஒலிக் கலவை சில மணிநேரங்கள் எங்களைச் சூழ்ந்திருந்தது பின் மெல்ல மெல்ல அடங்கியது.

நாங்கள் முகாமைக் கைப்பற்றிய போது பரிதாபமான காட்சிகள் என் கண் முன்னே விரிந்து கிடந்தன. ஆடுகளும், கோழிகளும் இராணுவத்தினரது பிரதேசங்களும் அவர்களது மனைவிமாரது பிரேதங்களும் தரையெங்கும் பரவிக் கிடந்தன.வழமை போலவே ஆயுதங்களையும் உணவுப் பொருட்களையும் நாங்கள் துரிதமாக சேகரித்தோம். இவைகளை சிறுவர்கள் சிறுமியர்களான நாங்கள்தான் சுமந்து செல்ல வேண்டும். பிடிபட்டிருந்த கைதிகளும் வழமை போலவே முதுகுகளின் பின்னால் கைகளைச் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தனர்.எங்களது பாசறைக்குஓட்டிச் செல்லப்பட்ட இவர்கள் தங்களின் சவக் குழிகளை தாங்களே வெட்ட நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதுவும் வழமை தான் எங்கள் தளபதிகளின் சிலர் குழந்தைகளான எங்களிடம் சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் கண்களிற்குள் காறி உமிழச் சொன்னார்கள் நாங்களும் உடனடியாக கட்டளைகளை நிறைவேற்றினோம். அதுவும் மெல்ல மெல்ல வழமையாக மாறிற்று நாங்கள் துப்பாக்கிக் குண்டுகளை விரயம் செய்யப் போவதில்லை. என்ற செய்தி கைதிகளுக்குச் சொல்லப்பட்டது. கைதிகளின் சவக்குழிகளை கைதிகளே தோண்டிய பின்பு எங்களது படைப்பிரிவிலிருந்த பயில்வான்கள் அக்கும்பியால் கைதிகளின் மண்டைகளை பிளப்பார்கள்.

அக்கும்பி என்றால் குண்டாந்தடி எதிரியை அவனே தோண்டிய குழியின் விழிம்பில் நிற்க வைத்து எதிரி குழியினுள் சொத்து அல்லது குற்றுயிரலாக விழும் வரை பிடரியிலும், தலையிலும், மாறி மாறி அடித்துக் கொண்டே இருப்பார்கள்.

இந்த சடங்குகள் முடிந்ததும் நகர்வுக்கான நேரம் ஆகிவிடும். நாங்கள் தொடர்ந்து நகர்ந்து கொண்டே இருக்க வேண்டும் இல்லாவிட்டால் ஆயுதப் பலம் வாய்ந்த எதிரி எங்களை சுலபமாக அழித்துவிடுவான் சில சமயங்களில் தாக்குதல்களின் பின் ஒரு நாள் முழுவதும் நடந்து கொண்டே இருக்க வேண்டியிருக்கும்.

ஓய்விற்கே தூக்கத்திற்கே அங்கே இடமில்லை. அரச படையினரின் உலங்கு வானூர்தி எங்கள் தலைகளின் மேல் சதா உறுமிக் கொண்டே இருக்கும். உலங்கு வானூர்திகளின் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டிருக்கும். நாங்கள் உடனடியாக சரணடைய வேண்டும் என்றும் இல்லாவிட்டால் முற்றாக அழிக்கப்படுவோம் என்றும் எச்சரிக்கைகளை ஒலிபரப்புவார்கள். ஆனால் எங்களால் அப்படிச் சரணடைந்து விட முடியாது. ஏனெனில் நாங்கள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தைத் தாண்டி வந்தாயிற்று. இறுதி இலட்சியத்தை அடையும் வரை விடாமல் போர் புரிவது என சத்தியப்பிரமாணம் செய்திருந்தோம். யாருமே ஒரு குழந்தையைப் போல விசுவாசமாக இருக்கமுடியாது. அதிலும் ஒரு அநாதை குழந்தையைப் போல் விசுவாசமாக இருக்கவே முடியாது. யாருக்காக நாங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும்? நாங்கள் எங்கே தப்பி ஓட முடியும்? எங்களது ஒரே சிந்தனை வெய்யிலில் தகிக்கும் இந்த பற்றைக் காட்டில் பெரியவர்களுடைய வேகமான நடைக்கு ஈடுகொடுத்து வேகமாக நடந்து செல்வதிலேயே இருந்தது. வெயிலில் வதங்கிப் போன குழந்தைகள் தாகத்தால் தவித்தோம். என்னால் இனிமேல் தாகத்தை பொறுக்க முடியாது என்ற நிலை நல்ல வேளையாக எங்கள் தளபதி அடுத்துவரும் கிராமத்தில் தண்ணீர் எடுப்பதென்று முடிவெடுத்தார்.

### உரசிச் சென்ற மரணம்

நானும் இன்னும் சில தோழர்களும் தண்ணீர் எடுப்பதற்காக கிராமத்தை நோக்கி நடக்கையிலே நிலமை சுமுகமாக இல்லை. என எங்கள் உள்ளுணர்வு கூறிற்று. அந்தக் கிராம வாசிகளில் ஏறத்தாழ எல்லோருமே NRA இன் ஆதரவாளர்கள் தான். நாங்கள் சுற்றுப் புறத்தை கூர்ந்து கவனித்துக் கொண்டே போனோம். கிராமத்தை நெருங்க நெருங்க துர்நாற்றம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

கிராமத்துக்குள் நுழைந்த போது நாங்கள் கண்ட கோரக் காட்சி மனதை உலுக்கிப் போட்டது. எங்கள் தோழர்களின் ஆதரவாளர்களின் பிரதேசங்கள் அங்கே சிதறிக் கிடந்தன. அவர்களின் உடலில் குருதியும் நிணமும் உறைந்து கிடந்தன. என் கண்முன்கே விரிந்து கிடந்த உண்மையை ஜீரணிக்க முடியாமல் நான் திணறிப் போனோன் . இது ஒரு ஆரம்பம் மட்டுமே என எனது உள் உணர்வு சொல்லிக் கொண்டது. இனி எது வந்தாலும் போனாலும் எனது நிலமை மாறப் போவதில்லை. எனது வாழ்க்கையில் சில விடயங்கள் என்றுமே மாறப் போவதில்லை.

தப்பி ஓடுவதற்கு இடமே இல்லை. தப்பி ஓடிய சில வாலிப வயதுப் போராளிகளும் NRA ஆல் உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு எல்லோரது கண்முன்னேயும் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அந்த சாவெறுப்புக்கள் இயக்கக் கட்டுப்பாட்டை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளாம். இதனால் எந்தக் குழந்தையுமே தப்பி ஓட முயலவில்லை.

(தொடரும்)

---

நிலையமும் பரபரப்பாகவே விளங்கியது. அச்சுவேலி, பருத்தித்துறை போன்ற இடங்களில் இருந்து கொடிகாமம் ஊடாகவே ரயில் பயணங்களை மேற்கொண்டனர்.

### வைத்தியம்

கொடிகாமத்திற்கு என்று தனியான அரசினர் வைத்தியசாலை காணப்படாதது இங்கு உள்ள பெரும் குறையாகும். இங்குள்ள மக்கள் வைத்தியத்துக்காக சாவகச்சேரி, யாழ்ப்பாண வைத்தியசாலைகளையே நாடுகின்றனர். ஆரம்ப காலத்தில் செல்லையா பரியாரி என்ற ஆயள்வேத வைத்தியர் இங்கு பிரபலம் பெற்று விளங்கினார். துட்டுவன் கொட்டி வரைக்கும் இவரது வைத்தியம் புகழ் பெற்று விளங்கியதாகச் சொல்லப்படுகின்றது. தற்போது கொடிகாமத்தில் ஒரு ஆயள்வேத வைத்தியசாலை அமைந்திருப்பதைக் காணக் கூடியதாய் உள்ளது.

### பிரபலம்

கொடிகாமத்தின் பிரபலங்கள் வரிசையில் கச்சாய் புலவர் சின்னையா முக்கியமானவர். அந்தாதி, கதிரமலை அந்தாதி போன்ற நூல்களை இவர் எழுதியுள்ளார். அதே போன்று கச்சாய் இரத்தினம் என்ற எழுத்தாளரும் பிரபலமான ஒருவர். இவர் சிறுகதைகள் எழுதுவதில் வல்லவர். ஆரசியலைப் பொறுத்தவரைக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஐயா என்பவர் இங்கே பிரபலமானவராகத் திகழ்ந்தார்.

### இன்ன பிற

கோடிகாமத்தில் 1981இல் பொது நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டு 200க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களோடு இயங்கி வருகின்றது. வருடா வருடம் இந் நூலக சமூகத்தால் இவ்வூர் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் அடங்கிய கையெழுத்துப் பிரதி வெளியிடப்படுவது சிறப்பானதாகும்.

கொடிகாமத்தில் ஆரம்ப காலத்தில் சாதிய அடக்கு முறைகள் அதிகளவில் காணப்பட்டன. இவ்வாறான அடக்கு முறைகளை டானியல் எழுதிய "அடிமைகள்" நாவல் தெளிவாகச் சித்திரிப்பதாய் அமைந்துள்ளது.


'பரிசு' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆருடன் கைகுலுக்குகிறார் பிரபல இயக்குநர் எல்.வி.பிரசாத். இடது ஓரம் டி.யோகானந்த். வலது ஓரம் கே.பி.கொட்டாரக்கரா.


ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் அண்ணாவின் தம்பி.

எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 42

# ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** மீது மக்கள் அன்பை பொழிந்து தங்கள் குடும்பத்தில் ஒருவராக அவரை நினைத்ததற்கு வெறும் சினிமாக் கவர்ச்சி மட்டுமே காரணமல்ல; அதையும் தாண்டிய அவரது மனிதநேய செயல்பாடுகள்தான் காரணம். இதற்கு ஏராளமான ஆதாரங்கள்.

எம்.ஜி.ஆர் நடித்த 'பரிசு' படம் 1963 ம் ஆண்டு வெளியாகி 100 நாட்கள் ஓடிய வெற்றிப் படம். இந்தப் படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடிகை சாவித்திரி நடித்திருந்தார். படத்தின் கதையை எழுதிய கே.பி. கொட்டாரக்கரா, படத்தின் இயக்குநர் டி.யோகானந்த் ஆகியோர் இணைந்து தயாரித்தனர். 'பரிசு' படத்தின் சில காட்சிகள் தேக்கடியில் படமாக்கப்பட்டன.

தேக்கடியில் நடந்த படப்பிடிப்பின் போது ஒருநாள் 30 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் திடீரென வேகமாக வந்து எம்.ஜி.ஆரின் காலில் விழுந்தார். அவரது இரு பெண் குழந்தைகளும் பரிதாபமாக அருகே நின்றன. அவரை எழுந்திருக்கச் சொன்ன எம்.ஜி.ஆர், "என்ன விஷயம்?" என்று விசாரித்தார்.

அந்தப் பெண்ணின் பெயர் தேவகி. "என் கணவருக்கு குடிப்பழக்கம் உண்டு. வனத்துறையில் வேலை பார்த்து வந்தார். வேலைக்கு சரியாக போவதில்லை. ஒருநாள் குடித்துவிட்டு சென்ற என் கணவர் காட்டு யானை தாக்கி இறந்துவிட்டார். அரசு நிர்வாகம் நஷ்டஈடோ, கருணைத் தொகையோ தரவில்லை. எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று எம்.ஜி.ஆரிடம் அழுதவாறே முறையிட்டார் தேவகி.

அதோடு, "இரண்டு பெண் குழந்தைகளை வைத்துக்கொண்டு தனியாக இருக்கும் என் குடிசைக்கு இரவு நேரங்களில் சிலர் தவறான நோக்கத்தோடு வந்து வாசலில் நின்று கலாட்டா செய்கிறார்கள்" என்று சொல்லிக் கதறினார். எம்.ஜி.ஆரின் கண்கள் கலங்கிவிட்டன.

தேவகியிடம் எம்.ஜி.ஆர், "அழாதேம்மா. உன் கணவர் பணியாற்றிய வனத்துறையில் உனக்குத் தெரிந்த அதிகாரி யாராவது இருந்தால் நான் கூப்பிடுவதாக சொல்லி நாளை அழைத்து வா. உன் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் இருந்து உனக்குத் தெரிந்த டீச்சரையும் கூட்டிக் கொண்டு வா" என்று சொல்லி அனுப்பினார்.

அதேபோல, வனத்துறை அதிகாரி ஒருவரையும் தன் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் இருந்து டீச்சர் ஒருவரையும் மறுநாள் படப்பிடிப்பு நடக்கும் இடத்துக்கு தேவகி அழைத்து வந்தார். அவரது அதிர்ஷ்டமோ என்னவோ, அந்த வனத்துறை அதிகாரி எம்.ஜி.ஆரின் ரசிகர். எம்.ஜி.ஆரை நேரில் பார்த்த மகிழ்ச்சியில் இருந்து மீளவே அவருக்கு வெகுநேரம் பிடித்தது. அவரிடம் எம்.ஜி.ஆர் விசாரித்தார்.

**எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது ஆதரவற்ற பெண்களுக்கு திருமண நிதி உதவித் திட்டம், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தியதோடு, ஆதரவற்ற விதவை தாய்மார்களின் பெண்களுக்கு ரூ.1000 உதவித் தொகை வழங்கவும் உத்தரவிட்டார்.**

"பலமுறை எச்சரித்தும் குடிப்பழக்கத்தால் தேவகியின் கணவர் சரியாக பணிக்கு வருவதில்லை. அவரது சாவுக்குக் கூட குடிதான் காரணம். தெளிவாக இருந்திருந்தால் யானையிடம் இருந்து தப்பித்து இருக்கலாம்" என்று எம்.ஜி.ஆரிடம் வனத்துறை அதிகாரி கூறினார்.

அவரிடம் எம்.ஜி.ஆர், "அது இருக்கட்டும். இப்போது இவர்கள் நிலை ரொம்ப பரிதாபமாக உள்ளது. உங்கள் அலுவலக விதிமுறைகள்படி இவர்களுக்கு அதிகபட்சமாக என்ன உதவி செய்ய முடியுமோ அதை செய்ய நடவடிக்கை எடுங்கள். இது சம்பந்தமாக உயர் அதிகாரிகள் யாரிடமாவது பேச வேண்டும் என்றாலும் நானே பேசுகிறேன்" என்றார்.

அந்த அதிகாரியும், "நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும்போது நான் முடிந்தவரை உதவுகிறேன்" என்றார்.

மேலும், "இப்போது குடிசையில் இருக்கும் இவர்கள் கவுரவமாக தங்கும் வகையில் வாடகைக்கு சிறிய வீட்டை இவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க முடியுமா?" என்றும் வனத்துறை அதிகாரியிடம் கேட்ட எம்.ஜி.ஆர், அதோடு நிற்கவில்லை. "தேவகிக்கு ஏதாவது வேலை வாங்கித் தர முடியுமா?' என்றும் கேட்டார்.

எம்.ஜி.ஆரே கேட்கும்போது அதுவும் அவரது ரசிகரான அதிகாரி மறுப்பாரா? இரண்டுக்கும் ஒப்புக் கொண்டார். வீடு ஏற்பாடு செய்து தருவதுடன் தனக்குத் தெரிந்த ஒரு வீட்டில் தேவகியை வீட்டு வேலை செய்ய சேர்த்து விடுவதாகவும் கூறினார்.

தேவகியைப் பார்த்து, "என்னம்மா? வீட்டு வேலை செய்ய உனக்கு சம்மதமா?" என்று எம்.ஜி.ஆர் கேட்டார். தேவகியும் சம்மதித்தார்.

பின்னர், அவரது பிள்ளைகள் படிக்கும் பள்ளியின் டீச்சரை அழைத்து, எஸ்.எஸ்.எல்.சி. வரை இரண்டு பிள்ளைகளும் படிப்பதற்கான செலவுகளை எம்.ஜி.ஆர் விசாரித்தார். தயாரிப்பாளர் கொட்டாரக்கராவிடம் தனியாகப் பேசி கணிசமான ஒரு தொகையை வாங்கினார். அதை தனது சம்பளத்தில் கழித்துக் கொள்ளும்படி கூறிவிட்டு, அந்தத் தொகையை அப்படியே தேவகியிடம் எம்.ஜி.ஆர் கொடுத்தார்.

ஒருவாரம் கழித்து மீண்டும் படப்பிடிப்பு நடக்கும் இடத்துக்கு அந்த வனத்துறை அதிகாரி வந்தார். உயர் அதிகாரிகளிடம் பேசிவிட்டதாகவும் அரசு மூலம் தேவகிக்கு நஷ்ட ஈடாக ரூ.27 ஆயிரம் கிடைக்கும் என்றும் இன்னும் ஒரு மாதத்தில் அந்தப் பணம் கிடைத்துவிடும் எனவும் கூறினார். இதைக் கேட்டு எம்.ஜி.ஆர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். 1963ம் ஆண்டில் ரூ.27 ஆயிரம் என்பது பெரிய தொகை.

இப்போதும் எம்.ஜி.ஆரின் காலில் விழுந்து அழுதார் தேவகி. இந்தமுறை அவரது கண்களில் இருந்து வந்தது, நன்றிப் பெருக்கால் ஏற்பட்ட ஆனந்தக் கண்ணீர்!

தொடரும்...


எம்.ஜி.ஆருடன் சாவித்திரி.

# நம்மூர் சொப்பன சுந்தரிகள்



சினிமா என்றாலே தென்னிந்தியா என்றுதான் நம்மவர்கள் பழக்கப்பட்டிருந்தார்கள். தென்னிந்திய சினிமாவையே உயிர்மூச்சாக கொண்டது தான் நமது பரம்பரை. சிவாஜி, எம்.ஜி.ஆரில் தொடங்கி இன்றைய அஜித், விஜய் வரை தென்னிந்திய நாயகர்களை கனவு நாயகர்களாக கொண்டவர்கள் நம்மவர்கள்.

அந்தக்காலத்தில் கடல்மார்க்கமாக தென்னிந்தியா சென்று படம் ரிலீசாகும் நாளில் படம் பார்த்துவிட்டு வந்த பரம்பரையின் வாரிசுகள், இன்று கார்கில்ஸிலும், ராஜாவிலும் அபிமான நாயகர்களின் படம் வெளியாகும் சமயத்தில் முதல்நாள் இரவே வரிசை கட்டி காத்திருந்து ரிக்கெட் வாங்குகிறான்.

தென்னிந்திய சினிமாவையும் நம்மவர்களையும் பிரித்தே பார்க்க முடியாது. இந்த பரபரப்பிற்குள்ளும் ஆங்காங்கே சில போஸ்டர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள்... நம்மவர் சினிமா பற்றிய போஸ்டர்கள் அவை.

சுனாமி பேரலையாக அடித்துக் கொண்டிருக்கும் தென்னிந்திய சினிமா பேரலைக்கு மத்தியில் சிற்றலையாக அடித்துக் கொண்டிருக்கிறது நம்மவர் சினிமா. முன்னெப்பொழுதையும்விட இப்போது நம்மவர் சினிமா புதுவேகம் பெற்றுள்ளது. பெயர் சொல்லும் விதமான படங்கள் இன்னும் உருவாகவில்லை... தென்னிந்திய மசாலாக்களை கொப்பி, பேஸ்ற் செய்கிறார்கள் என்ற விமர்சனங்கள் இருந்தாலும்,





மாற்று முயற்சிகளும் இருக்கத்தான் செய்கின்றன.

இப்பொழுது யாழ்நகரத்தில் குறும்பட படப்பிடிப்புக்கள், குறும்பட போஸ்ரர்களை சர்வசாதாரணமாக பார்க்கலாம். யாழில் அடிக்கடி குறும்படங்கள், முழுநீள படங்கள் வெளியாகிக் கொண்டிருக்கிறது. குறும்பட உலகம் விரிவடைந்து செல்கிறது, தொழில்முறை கலைஞர்கள் உருவாகிறார்கள் என்பதே மகிழ்ச்சியான சங்கதிதான்.

கே.ஆர்.விஜயா தொடக்கம் நயன்தாரா, கீர்த்தி சுரேஷ் வரை தென்னிந்திய நடிகைகள்தான் நம்மவர்களின் கனவுக்கன்னிகளாக இருந்தனர். ஆனால், அந்தநிலையில் சிறுமாற்றத்தை நிகழ்த்தியிருக்கிறார்கள் நம் நடிகைகள். ஆம்... நமது சொப்பன சுந்தரிகள் இவர்கள்தான்.

வடக்கு, கிழக்கில் தயாரிக்கப்படும் திரைப்படங்களில் பிஸியாக இயங்கும் முன்னணி நடிகைகளின் அறிமுகம் இது.

தற்போதைய நிலையில் நம் நடிகைகளின் நாளாந்த சம்பளம் சுமார் 5000–8000 வரை பெறுகிறார்கள். ஒரு குறும் படத்திற்கு நான்கு அல்லது ஐந்து நாட்கள் கால்சீட் கொடுக்கிறார்கள். சமூக வலைத்தளங்களிலும் இவர்கள் மிகப்பிரபலம். ஏராளமான ரசிக



கண்மணிகள் இவர்களை தொடர்கிறார்கள்.

### லோஜினி

தொலைக்காட்சித் தொகுப்பாளராக கமராவிற்கு முன் தோன்றியவர், இப்பொழுது பிஸியான நடிகை. வசந்தம் தொலைக்காட்சியின் நம்ம ஹிட்ஸ் நிகழ்ச்சியின் மூலம் இளைஞர்களின் இதயங்களை கிட்னாப் பண்ணியவர் இந்த வவுனியா வனிதை.

தொலைக்காட்சி தொகுப்பாளினி, நடிகை என இரட்டை குதிரையில் பயணிக்கிறார். தொடர்ந்து நடித்துக் கொண்டிருப்பவர். வெறும் அழகுப் பொம்மையாக மட்டுமல்ல, நல்ல நடிகையென்பதை உம்மாண்டி குறும்படத்தில் நிரூபித்தவர்.

பாடல் அல்பங்களிலும் தோன்றுகிறார். அண்மையில் வெளியான ருக்குமணி பாடலில் ரசிகர்களை கொக்கி போட்டவர். தற்போது கிளிக்கோடு என்ற முழுநீள திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

### மிதுனா

தற்போதைய நடிகைகளில் சீனியர். அதிகம் அறியப்பட்டவர். மிகப் பிரபலமானவர். அழகான தோற்றம் ஆர்ப்பாட்ட நடிப்பென தொடர்ந்து பட்டையை கிளப்பி வருகிறார் இந்த யாழ்ப்பாண கிளியோபெட்ரா.

2011 இல் கீறல்கள் என்ற குறும்படத்துடன் நடிப்பு வாழ்க்கையை ஆரம்பித்தவர். இன்று நடிப்பு, இயக்கமென பரபரப்பாக இருக்கிறார். பாடல் அல்பங்களிலும் நடிக்கிறார். அண்மையில் கிளிநொச்சி பற்றிய பாடலொன்றில் அவர் போட்ட லுங்கி டான்ஸ் வைரல் ஹிட். மனசுக்குள் மழைச்சாரல், யாழ்தேவி போன்ற படங்களில் நடித்தவர். தற்போதைய இலங்கை தமிழ் சினிமா உலகில் தவிர்க்கப்பட முடியாத நடிகை.

### ப்ரன்னா

இளம் நடிகை ப்ரன்னாதான் உள்ளூரில் வளர்ந்துவரும் இளம் நடிகை. நடிக்கத் தெரிந்த நடிகையென நமது சினிமாவை அவதானித்து வருபவர்களிடம் இருந்து விரைவிலேயே சான்றிதழ் பெற்றுவிட்ட இளம் நடிகை. மற்றைய பிரபல நடிகைகளை போல நடிப்பில் பெரிய அனுபவம் இல்லாவிட்டாலும், விரைவில் ரசிகர்களிடம் இடம்பிடித்த திருகோணமலை அழகுப்புயல். நடிக்க வந்து ஒரு வருடம் முடிவதற்குள் திரையில் தோன்றிய சந்தரப்பங்கள் அதிகம். உன்னை நானறிவேன் குறும்படத்தில் துறுதுறுவென்ற அவரது பாத்திரத்திற்கு ஏராளம் இளைஞர்கள் அடிமைகள்.

ஒருவன், கண்கள் மயங்குதே போன்ற படங்களுடன் வானதி என்ற பாடல் காட்சியிலும் நடித்து வருகிறார். தற்போது வேகமாக வளர்ந்துவரும் வேட்டையன் படத்தில் பட்டையை கிளப்பியுள்ளாராம்.

### நவயுகா

நடிப்பு என் இலட்சியம். என் கனவு என நடிப்பு துறைக்குள் வந்த யாழ்ப்பாண ஆசிரியை நவயுகா. நம்மவர் சினிமாவில் நம்பிக்கை நட்சத்திரமாக வளர்ந்துவரும் அழகான ராட்சசி.

எழுத்து தாகம் மிக்க இவர் ஆரம்பத்தில் பாடல்கள் எழுதினார். தற்போது நடிப்பில் பின்னியெடுக்கிறார். தோட்டி குறும்படத்தில் அறிமுகமானவர். வினவு, இவன் தந்தை, முள்ளின் மேல் ஒரு பயணம் போன்ற பல படங்களில் நடித்துவிட்டார். வினவு படம் இவரை நல்ல நடிகையாக அடையாளப்படுத்தியது. மாசறு குறும்பட நடிப்பும் பேசப்பட்டது. இந்த படத்தில் நடித்ததற்கு சிறந்த நடிகை விருதையும் பெற்றுக்கொண்டார்.



# பிரிந்த தம்பதியரை ஒன்று சேர்க்கும் விரதம்

பிருங்கி என்றொரு முனிவர், தீவிரமான சிவபக்தர். ஒருமுறை, திருக்கயிலையில் அம்மையும் அப்பனும் அமர்ந்திருக்க, பிருங்கி முனிவரோ வண்டாகவடிவெடுத்து, ஸ்வாமியை மட்டும் வலம் வந்து வணங்கிச் சென்றார். இதனால் கோபம் கொண்ட அம்பிகை, பிருங்கி முனிவரின் தேக ஆற்றலை நீங்கச் செய்தாள். அவருக்கு சிவனார் ஊன்றுகோல் கொடுத்து திருவருள் புரிந்தார்.

இதையடுத்து, தான் வேறு சிவன் வேறு அல்ல என்பதை உலகத்தவருக்கு உணர்த்த விரும்பிய அம்பிகை, அதன் பொருட்டு பெரும் தவம் செய்ய முடிவெடுத்து பூமிக்கு வந்தாள். வனம் ஒன்றில் கௌதம மஹரிஷியைச் சந்தித்தாள். அவரிடம் நடந்தயாவற்றையும், தனது விருப்பத்தையும் விவரித்து, விருப்பம் நிறைவேற வழிகேட்டாள். அவளுக்கு கேதாரீஸ்வர விரத மகிமையை எடுத்துக் கூறிய கௌதமர், அந்த விரதத்தைக் கடைப்பிடித்து சிவனாரை வழிபடும்படி கூறினார். அம்பிகையும் அதன்படியே விரதம் இருந்து, சிவனாரின் தேகத்தில் இடபாகத்தை பெற்றாள்.

அவள் வழியில் நாமும் கேதாரீஸ்வர விரதம் கடைப்பிடித்து உமா மகேஸ்வரரை வழிபட தாம்பத்திய ஒற்றுமை மேலோங்கும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேர்வார்கள். குடும்பத்தில் சுபிட்சம் மேலோங்கும்.

சரி! இந்த விரதத்தை எப்போது கடைப்பிடிப்பது? இதுகுறித்து கௌதம முனிவர் உமையவளுக்குக் கூறிய விவரம்: "புரட்டாசி மாத வளர் பிறை தசமி திதியில் தொடங்கி, ஐப்பசி மாத தேய்பிறைச் சதுர்த்தசி அல்லது அமாவாசை வரை 21 நாட்கள் இந்த விரதத்தை நடத்த வேண்டும். சிவபெருமானைக் குறித்துச் செய்யப்படும் இந்த விரதத்தை பக்தியுடன் செய்தால், ரிஷப வாகனனான ஸ்வாமி காட்சி தருவார். உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவார்!" என்றார்.

**வழிமுறை:** பூஜை செய்ய வேண்டிய இடத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகிக் கோலமிட்டு, தலை வாழையிலையில் அட்சதையைக் கொட்டிப் பரப்பி, அதன் மேல் பூரண கும்பத்தை வைத்து அலங்கரிக்க வேண்டும். கும்பத்தில் கேதாரீஸ் வரரை ஆவாஹனம் செய்ய வேண்டும்.

21 இழைகள் 31 முடிச்சுகள் கொண்ட நோன்புக் கயிறை, அந்தக் கும்பத்தின் மேல் சார்த்தி 21 நாட்கள் பூஜை செய்ய வேண்டும். பூ, பழம் முதலான பூஜைப் பொருட்கள் 21 என்ற எண்ணிக்கையில் இருக்க வேண்டும். வேத வல்லுநர்கள் 21 பேரை வரவழைத்து, அவர்களைக் கொண்டு பூஜை செய்து வழிபட வேண்டும். மனதில் உள்ள விருப்பங்களை நிறைவேற்றி வைக்கும் விரதம் இது. ●



# சகுனம் பார்க்கலாமா?

**சகுனம் என்பது**

நன்மை, தீமைகளை முன்கூட்டிச் சொல்லும் அறிகுறிகள் தான் என்பது முன்னோர்களின் கருத்து. சகுனம் என்பது எதிர்பாராமல் நிகழ்வது தான். அவற்றில் முன்னோர்களின் வரையறைப்படி நல்ல சகுனங்களும், கெட்ட சகுனங்களும் உண்டு. அதை பற்றி தெரிந்து கொள்வோம்.

**நல்ல சகுனங்கள்**

- யானை, குதிரை, பசு, கன்றுடன் கூடிய பசு, காளை, கன்னி, பல் மருத்துவர்கள், இரத்தினம், எரியும் நெருப்பு, தானியம், தயிர்பானை, சந்தனம், பிணம், பூர்ணகும்பம், அட்சதை, வெள்ளை மாலை, குழந்தையுடன் பெண், எள், சலவைத்துணி, தாமரை, ஆடை ஏதும் அணியாத குழந்தை, சங்கு, நெய், பால், வாத்திய ஒலி, மாமிசம் போன்றவைகள் எதிரே வந்தால் நல்ல சகுணங்கள் ஆகும்.
- காலையில் சுமங்கலிப் பெண்கள் முகத்தில் விழிப்பது நல்லது.
- காகம் இடப்பக்கமிருந்து வலப்பக்கம் பறந்து செல்வதைப் பார்த்தால் நல்லது.
- காகம் கரைந்தால் விருந்தினர் வருவர்.
- பல்லி உடலில் விழுந்தால் ஆயுள் கூடும்.
- பல்லி மேற்குத் திசையிலிருந்து ஒலி எழுப்பினால் நல்லது நடக்கும்.

**கெட்ட சகுனங்கள்**


- எதிரில் வருபவர் எண்ணெய், மோர், உப்பு, வைக்கோல், எலும்பு, புல், சாம்பல், பஞ்சு, விறகு, வெற்று பாத்திரம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு வருதல்
- அலங்கோலமான ஆடைகளுடன் தலையை விரித்துப்போட்டுக் கொண்டும், அழுது கொண்டும் எதிரில் ஒருவர் வந்தாலோ, வேதம் கற்ற அந்தணர் தன்னந்தனியாக ஒருவராக எதிரில் வருதல்
- பூனை குறுக்கே போதலும் எதிர்ப்படுதலும்.
- நாய் குறுக்கே செல்லுதல்.
- போர் வீரனைக் காணுதல்.
- நாய் ஊளையிடுவதைக் கேட்டல்.
- விதவையைக் காண்பது.
- மண்வெட்டியுடன் எதிரே வருவது
- தும்மல் ஒலி கேட்டல்.
- முக்காடிட்டவரைக் காண்பது.
- கருடன் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கமாக செல்வது.
- காகம் வலமிருந்து இடமாகச் செல்வது.
- பாய் விற்பவரைக் காண்பது.
- அரப்பு விற்பவரைக் காண்பது. ●


# பூசணிக்காயை மட்டும் திருஷ்டிக்காகப் பயன்படுத்துவது ஏன்?

- பழங்களில் வாழைப்பழத்துக்கும், ஆடைகளில் நூலாடைகளுக்கும் தனிச்சிறப்பு உண்டு. இப்படி, சுகாதாரம் மற்றும் பொருளாதார நோக்கில் பல பொருட்களுக்குச் சிறப்பு உண்டு.
- திருஷ்டி மற்றும் தோஷம் விலக பூசணிக்காய் சிறந்தது. இதில் சதைப் பற்று அதிகம். இது, மஞ்சள் மற்றும் சுண்ணாம்பு கலந்த நீரை ஏற்று சிவப்பு நிறமாகிவிடும் (உடைக்கும்போது) இதன் சதைப்பற்று, பார்க்கும் கண்களுக்கு பிடிக்காமல் போய்விடும். இதனால் திருஷ்டி தோஷம் ஒட்டாது. அருவருப்பான காட்சியைப் பார்க்கும் மனம், 'இவனுக்கு இப்படியொரு பொருள் கிடைத்துவிட்டதே" என்ற பொறாமை எண்ணத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடும். தோஷம் தோன்றாது.
- காவல் தெய்வங்களுக்கு தோஷம் விலக உயிரினங்களை பலிகொடுக்கும் நடைமுறை இருந்தது. உயிரினங்களை அழிப்பது அறம் அல்ல என்று எண்ணியவர்கள் பூசணிக்காயை உயிரினமாக பாவித்து, அதை உடைத்து மஞ்சள் சுண்ணாம்பு சேர்த்து, தெய்வத்தின் முன்னே வைப்பது மரபு. ●



# இயங்காத உறுப்புக்களும் காரணமும்



நம் உடலில் குறிப்பிட்ட உறுப்புக்கள் சரியாக இயங்காமல் இருந்தால், அது நமக்கு ஒருசில அறிகுறிகளின் மூலம் உணர்த்தும் என்பது தெரியும். சீனாவின் பாரம்பரிய மருத்துவத்தில், உயிரியல் கடிகாரத்தைக் கொண்டு உடலுறுப்புக்களுள் எது சரியாக இயங்குவதில்லை என்பதை அறிந்து சரிசெய்யப்படுகிறது.

குறிப்பாக ஒருவர் இரவில் படுக்கும் போது, தினமும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் விழிப்பார்கள். அது ஏன் என்று தெரியாமலும் இருப்பார்கள். ஆனால் இப்படி ஒருவர் தூக்கத்தில் விழிப்பது, அவரது உடலுறுப்போடு தொடர்பு கொண்டுள்ளதாக சீனர்களின் உயிரியல் கடிகாரம் சொல்கிறது. இங்கு சீனர்களின் அந்த உயிரியல் கடிகாரம் குறித்து விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து உங்கள் உடலில் எந்த உறுப்பு சரியாக இயங்குவதில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**சீன உயிரியல் கடிகாரம்**

சீனர்களின் உயிரியல் கடிகாரத்தின் படி ஒவ்வொரு உறுப்பும், தன் அதிகப்படியான இயக்கத்திற்கு 2 மணிநேரத்தை எடுத்துக் கொள்கிறது. இந்த நேரத்தில் அந்த உறுப்பில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், அது நமக்கு ஒருசில அறிகுறிகளை சுட்டிக்காட்டும். அப்படி சுட்டிக்காட்டும் நேரத்தைக் கொண்டு எந்த உறுப்பு பாதிப்படைந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

**1 a.m - 3 a.m**

இது கல்லீரலுக்கான நேரம். இந்நேரத்தில் கல்லீரல் உணவுகளை செரிப்பதற்கு பித்த நீரை அதிகம் சுரக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதோடு, நச்சுக்களையும் வெளியேற்றிக் கொண்டிருக்கும். இந்நேரத்தில் ஒருவருக்கு தூக்கம் கலைந்தால், கல்லீரலில் ஏதோ பிரச்சனை உள்ளது என்று அர்த்தம்.

**3 a.m - 5 a.m**

இது நுரையீரலுக்கான நேரம். இந்நேரத்தில் நுரையீரல் உடலுக்கு தேவையான ஆக்ஸிஜனை சேகரித்து மற்ற உறுப்புகளுக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருக்கும். நுரையீரல் அல்லது சுவார பிரச்சனை உள்ளவர்களுக்கு தான் இந்நேரத்தில் தூக்கம் கலையும்.

**5 a.m - 7 a.m**

இது பெருங்குடலுக்கான நேரம். இந்நேரத்தில் பெருங்குடல் சுத்தம் செய்யும் பணியை ஆரம்பித்துவிடும். குடலியக்க பிரச்சனையான மலம் வெளியேற்றுவதில் பிரச்சனை இருப்பவர்கள், இந்நேரத்தில் வயிற்று பிரச்சனைகளை சந்திப்பார்கள். மேலும் இந்நேரத்தில் நீரை அதிகம் குடித்தால், இப்பிரச்சனையில் இருந்து விடுபடலாம்.

**7 a.m - 9 a.m**

இந்நேரத்தில் உடலுக்கு ஆற்றலை வழங்க காலை உணவை உட்கொள்ள வேண்டியது அவசியம்.

**9 a.m - 11 a.m**

இது கணையம் மற்றும் மண்ணீரலுக்கான நேரம். இந்நேரத்தில் தான் கணையம் மற்றும் மண்ணீரல் தன் பணியை செய்யும்.

**11 a.m - 1 p.m**

இது இதயத்திற்கான நேரம். இந்நேரத்தில் உடலில் இரத்த ஓட்டம் சீராக இருக்கும். மேலும் உடல் நன்கு சுறுசுறுப்புடன் இருக்கும். ஆனால் இந்த நேரத்தில் மிகுந்த சோர்வை உணர்ந்தால், அது இரத்த ஓட்டத்தில் பிரச்சனை உள்ளது என்று அர்த்தம். மேலும் இது தான் மதிய உணவுக்கான நேரமும் கூட.

**1 p.m - 3 p.m**

இது சிறுகுடலுக்கான நேரம். இந்நேரத்தில் உணவுகள் உடலால் உறிஞ்சப்படுவதால், இந்நேரத்தில் உடலில் ஆற்றல் சற்று குறைவாகவே இருக்கும்.

**3 p.m - 5 p.m**

இது சிறுநீர்ப்பைக்கான நேம். இந்நேரத்தில் உடலில் ஆற்றல் தக்க வைக்கப்படும். மேலும் உடலில் இருந்து கழிவுகள் வெளியேற்றப்படும்.

**5 p.m - 7 p.m**

இது சிறுநீரகங்களுக்கான நேரம். இந்நேரத்தில் சிறுநீரகங்கள் தங்களது பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கும். இந்நேரத்தில் இரவு உணவை உட்கொள்வது நல்லது.

**7 p.m - 9 p.m**

இது இதயத்தைச் சுற்றி இருக்கும் சவ்வுகளுக்கான நேரம். இந்நேரத்தில் அவை ஓய்வு எடுக்கும்.

**9 p.m - 11 p.m**

இந்நேரத்தில் இதயத்திற்கு செல்லும் இரத்த நாளங்கள் சுறுசுறுப்பாக இயங்கும். மேலும் நாளமில்லா சுரப்பிகளின் பணியை சீராக்கி, தூக்கத்தை வரவழைக்கும். இந்நேரத்தில் தூக்கம் வராமல் இருந்தால், இச்செயல்பாடுகளில் ஏதோ பிரச்சனை உள்ளது என்று அர்த்தம்.

**11 p.m - 1 a.m**

இது பித்தப்பைக்கான நேரம். இந்நேரத்தில் கல்லீரலில் இருந்து பித்தநீர் சுரக்கப்பட்டு, உணவை செரிப்பதற்கு பித்தப் பையை அடையும். இந்நேரத்தில் உடல் மறுஉருவாக்கம் அடையும். இந்த நேரத்திலும் தூக்கம் வராவிட்டால், பித்தப்பையில் ஏதோ பிரச்சனை உள்ளது என்று அர்த்தம்.

---

11ம் பக்க தொடர்ச்சி...

தான் எமது நாட்டை மாற்றலாம்.

உலகில் முன்னேற்றமடைந்த நாடுகளில் 5 பேரின் வேலையை செய்தவற்கு வேலைக்கு சேர்ப்பது 5 பேரைத்தான் அதற்கு மேலதிகமாக சேர்ப்பதில்லை. அங்கு ஊழியர்களின் வேலையின் பெறுமதிக்கு ஏற்ப சம்பளம் அவர்களுக்கு கிடைக்கிறது.


எமது நாடு இதற்கு நேர்மாற்றமானது. எமது நாட்டு அரச சேவையில் 5 பேரின் வேலையை செய்ய 10 பேர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் அந்த 10 பேருக்கும் 5 பேரின் சம்பளம் வழங்கப் படுகிறது. இந்நிலைமை நாடு பொருளாதார பின்னடைவை சந்திக்க காரணமாக அமைவதுடன் ஊழியர்களின் சம்பளம் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவவும் காரணமாகிறது. நாடு என்ற வகையில் இந்த மடத்தனமான வழிமுறையிலிருந்து நாங்கள் மீள வேண்டும்.

**தீர்வை அற்ற வாகனம்**

தீர்வை அற்ற வாகன அனுமதி பத்திரம் வழங்கும் முறை முதன் முதலில் ஆரம்பித்தது குறிப்பிட்ட ஒரு குழுவுக்கு கப்பம் கொடுக்கும் நோக்கிலேயே. இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் வாகனத்துக்கான தீர்வை வாகனத்தின் பெறுமதியை விட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகம்.

இதனால் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்களுக்கு சந்தையில் பெரியளவு கேள்வி நிலவுகிறது.

தீர்வையற்ற வாகன இறக்குமதிப் பத்திரம் உள்ளவர்கள் தினமும் செய்தது 5 வருடத்துக்கு ஒருமுறை கிடைக்கும் அனுமதிப்பத்திரத்தை விற்பனை செய்து அதன் மூலம் பாரிய இலாபம் உழைத்ததே.



இம்முறையால அரசுக்கு ஏற்படும் நட்டம் மிகப் பாரியது.

2012 ஆகஸ்ட் முதல் 2015 ஆகஸ்ட வரை தீர்வையற்ற அனுமதிப் பத்திரம் மூலம் 32,287 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் 147.4 பில்லியன்.

பெற்றார்கள் இல்லாத பிள்ளைகள் வாழும் அநாதை இல்லங்களை நடாத்த நாள் ஒன்றுக்கு 20 ரூபா கொடுக்கும் நாட்டில், அரச பாடசாலைகளில் உள்ள மலசல கூடத்தை துப்புரவு செய்வதற்கான செலவைக் கூட செலுத்த வசதியில்லாத பாடசாலைகள் இருக்கும் நாட்டில், அரச ஊழியர்களாக பணிபுரியும் ஒரு சிறு குழுவுக்காக இவ்வளவு பாரிய செலவை அரசு சுமப்பது எப்படி நீதியாக அமையும நியாயமானதாக அமையும்?

இறக்குமதி தீர்வையற்ற அனுமதிப் பத்திரம் மூலம் அளவில்லா இலாபமடையும் உயர் அதிகாரிகளுக்கு இம்முறையினூடாக ஒரு வாகனம் கிடைப்பதுடன் அவர்களின் உபயோகத்திற்கு இன்னொரு உத்தியோகபூர்வ வாகனம் ஒன்று வேறாக கிடைப்பதனையும் நாம் மறந்துவிடக் கூடாது. தாம் விசேட உன்னத பணியை செய்வதால் இச்சலுகை நமக்கு கிடைத்தே தீர வேண்டும் என கூறும் உரிமை அரச வைத்தியர்களுக்கும் இல்லை. ஏனெனில் அரச தொழில் புரியும் அதே நேரம் இவர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் பணிபுரிதல் என்ற சலுகையை ஏற்கனவே இவர்கள் அனுபவிப்பதால். அநேகமான நாடுகளில் இச்சலுகை வைத்தியர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

தற்சமயம் நடைமுறையிலிருக்கும் இந்த முறைகேடான முறையை ஒரு சிறந்த ஒழுங்குக்கு கொண்டுவருவதற்கு

உத்தியோகபூர்வ வாகனம் இருக்கும் அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனம் வழங்குவதனை நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக அவர்களுக்கு சொந்தமாக ஒரு வாகனத்தை வாங்குவதற்கான வசதியினை செய்து கொடுக்க வேண்டும்.

அவர்களின் அந்த வாகனத்தை உத்தியோகபூர்வ வேலைகளுக்கு பயன்படுத்துவதற்கான நியாயமான ஒரு கொடுப்பனவை வழங்குவதற்கான ஒழுங்கை ஏற்படுத்தலாம்.

தேவைப்படின் இதற்கு மேலதிகமாக இதே போன்று ஓய்வு பெறும் அரச ஊழியர்களுக்கு இலகுவாக ஒரு வாகனத்தை வாங்குவதற்கான ஒரு முறையை ஏற்படுத்தி கொடுக்கலாம். இவ்வாறான வேலைத்திட்டங்கள் ஊடாக உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் தீர்வையற்ற அனுமதிப்பத்திரம் காரணமாக அரசு சுமக்கும் பாரிய செலவிலிருந்து விடுபட்டு அரச ஊழியர்கள் அரச வாகனங்களை பயன்படுத்துவது தொடர்பில் ஒரு சிறந்த ஒழுங்குமுறையை நடைமுறைக்கு கொண்டுவரலாம்.

**இலவச சுகாதார சேவை**

இலவச சுகாதார சேவையை வினைத்திறனுள்ளதாக மாற்ற வேண்டுமானால் அரச வைத்தியர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரிவதனை அரசு உடனடியாக தடைசெய்ய வேண்டும்.

மக்களின் பணத்தில் மருத்துவ கல்வியை கற்று மருத்துவ சேவையில் இணைவோருக்கு 10 வருட அரச சேவை கட்டாயமாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வழங்கும் கொடுப்பனவை இப்பொழுது கொடுக்கும் கொடுப்பனவை விட இரு மடங்காக அதிகரித்து கொடுக்க வேண்டும். உத்தியோகபூர்வ வாகனம் வழங்கும் முறைக்கு பதிலாக அவர்களுக்கு வாகனம் ஒன்றை சொந்தமாக வாங்குவதற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். உத்தியோகபூர்வ பணிகளுக்கு அவ்வாகனத்தை பயன்படுத்தும் போது அதற்கு ஏற்ற ஒரு கொடுப்பனவை வழங்க வேண்டும்.

அரச சேவையில் இணைய விருப்பமில்லாத வைத்தியர்களுக்கு தனியார் வைத்திய சேவையில் இணைவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் மக்கள் பணத்தில் கற்றிருந்தால் அவரின் கல்விக்காக செலவழித்த பணத்தை மீளப் பெறும் வழிமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் படுகுழியில் வீழ்ந்து கொண்டிருக்கும் இலவச சுகாதார சேவையை சிறந்த சேவையாக மாற்ற முடியும். இப்படியான வழிமுறைகள் வைத்தியர்களுக்கு கௌரவத்தையும் திருப்தியையும் பெற்றுக் கொடுப்பதுடன் ஒழுக்கரீதியாக உயர்ந்த வைத்திய சேவையொன்றை உருவாக்க இது ஏதுவாக அமையும்.

**சிங்கள மூலம் ராவய**

ம.செந்தமிழன்

‘அனைத்தையும் உள்ளடக்குதல்’ என்றொரு குணம் உண்டு. ஆகாய மாகிய வான்வெளியைப் பாருங்கள். அது அனைத்தையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. ஆனாலும் ஐம்பூதங்களில் வெளி (ஆகாயம்) என்ற தனி ஒரு பூதமாகவும் அது உள்ளது. ‘யாவையும் எனதுள்ளே இருக்கின்றன. ஆயினும் எனக்கெனத் தனிக் குணம் உண்டு’. என்பது இறையியல்பு. மனம் தான் உடலை உள்ளடக்கி வைத்துள்ளது. ஆனாலும் மனதுக்கெனத் தனித்தன்மை உண்டு.

சுவைகளில் ‘உவர்ப்பு’ இவ்வாறான பெருங்குணம் கொண்டது. உப்பின் சுவையை செம்மொழியில் ‘உவர்ப்பு’ எனக் குறிப்பது மரபு. அறுசுவைகளில் மற்ற ஐந்து சுவைகளையும் உவர்ப்புச் சுவை உள்ளடக் கியுள்ளது. அதேவேளை தனக்கெனத் தனிச்சுவை அடையாளத்தையும் பல்வேறு பண்புகளையும் கொண்டிருக்கின்றது.

உணவின் வழியாக எல்லா சுவைகளும் உடலுக்குள் செல்கின்றன. ஒவ்வொரு சுவைக்கும் ஐம்பூத இயல்பு உள்ளது. இந்த அனைத்து பூதங்களையும் அல்லது சுவைகளையும் செரித்த பிறகே அவற்றின் மீதங்களை உடல் உவர்ப்புச் சுவைக்கு மாற்றுகின்றது. சிறுநீர், வியர்வை, கண்ணீர் ஆகியவை உவர்ப்பானவை. விந்து நீர் உவர்ப்புச் சுவை கலந்தது. உடலின் பெரும்பகுதி வெளியேற்றங்களில் உவர்ப்புச் சுவை இருப்பதைப் புரிந்து கொண்டால் பூமியின் குணத்தையும், இயல்புகளையும் ஒருசேர அறிந்து கொள்ளலாம்.

பூமியின் பெரும் பகுதி கடல் நீராக உள்ளது. பூமியின் உள்ளும் புறமும் சூழலும் ஐம்பூதங்கள் அனைத்தையும் உள்வாங்கிச் செரிப்பதில் கடலுக்குத்தான் முதல் இடம் வழங்கப்பட்டுள்ளது. கடல்நீர் யாவையுமாக இருக்கின்றது. தனக்கென்ற அடையாளங்களையும் வைத்துக் கொள் கின்றது. பூமியின் காற்றைச் சுத்திகரிப்பதில் கடல் முதல் இடம் வகிக்கின்றது. பூமியின் வெப்பத்தைத் தாங்குவதில் கடலுக்கு முதல் பொறுப்பு உள்ளது. பூமியின் நீரை அல்லது மழையைச் சீராக்கி வைப்பதில் கடல் முன்னிலை பெறுகின்றது. பூமியின் நிலத்தை வடிவமைப்பதிலும் கடலுக்குத்தான் முதல் அதிகாரம் உள்ளது. நிலப்பகுதிகளின் வரைபடத்தை அது மாற்றிக் கொண்டே இருக்கின்றது. கடல் தள்ளி நின்றால் ஒரு வரைபடம், உள்ளே வந்தால் வேறு வரைபடம். பூமியின் ஐம்பூதச் சமநிலையில் கூடுதல் வலிமையைக் கொண்டுள்ளது கடல். அதனால்தான் அது உவர்ப்புச் சுவையுடன் இருக்கின்றது.

உடல் என்னும் அண்டத்திலும் உப்பு நீர்தான் மிகுதியாக உள்ளது. உடலின் உள்ளே வரும் காற்று, உணவு, நீர் ஆகியவற்றைச் சீரான நிலையில் வைத்திருப்பதில் உவர்ப்பாகிய உப்புச் சுவைக்குத்தான் முக்கிய பங்கு உள்ளது. ஆகையால்தான் உணவில் உப்புச் சுவையை மட்டும் குறைந்தளவில் சேர்க்கின்றோம். உள்ளே வரும் எல்லா உணவில் இருந்தும் உப்பைப் பிரித்து எடுக்கும் வல்லமை நம் உடலுக்கு உண்டு. உப்பைப் பிரிக்கும் பணி உடலைப் பொறுத்தவரை பொறுப்பு வாய்ந்த பெரும் பணி.

உடல் உவர்ப்புச் சுவையைப் பிரித்து வெளியேற்றுவதும், கடல் நீர் நிலத்துக்குள் புகாமல் பாதுகாப்பதும் ஒன்று. உடலில் சேகரமாகும் உவர்ப்புச் சுவையைப் பிரிப்பதில் சுணக்கம் இருந்தால் உடலின் செல்களுக்குள் உள்ள நீரும் உவர்ப்பு மிகுந்ததாகி விடும். நாளடைவில் உவர்ப்புச் சுவை உடலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும். உவர்ப்பின் ஆதிக்கம் என்றால் நுண்ணுயிர்ப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி வைப்பது. அதாவது உவர்ப்புச் சுவையில் நுண்ணுயிரிகள் பெருக்கம் குறையும். ஊறுகாய், இறைச்சி, மீன் ஆகியவற்றில் உப்பு சேர்ப்பது அந்தப் பொருட்களில் நுண்ணுயிர் பெருகக் கூடாது என்பதற்காகத்தான். உவர்ப்புச் சுவையை அதிகமாகச் சேர்த்துக் கொண்ட உடலின் வளர்சிதை மாற்றம் பாதிக்கப்படும். இந்த நிலை நீடிக்கக் கூடாது. ஒருவேளை நீடித்தால் உடலில் உயிர் தங்காது.

எல்லா சுவைகளையும் தனக்குள் அடக்கி வைத்துள்ள உவர்ப்புச் சுவை நம் உடலுக்குள் நின்று நிலைப்பது நல்லது அல்ல. எது எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொண்டுள்ளதோ அதை ஓரிடத்தில் அடைக்க முடியுமா என்ன?. அப்படி அடக்க நினைத்தால் அடக்கி வைக்கப்படும் இடமே அழியும் அல்லவா. இதுதான் உவர்ப்பின் சிறப்பு.

கணக்கு இல்லாத அளவுகளிலும் உவர்ப்புச் சுவை உடலுக்குள் வருகின்றது. உவர்ப்புச் சுவையின் தாக்கம் இல்லாத ஒரே ஓர் உணவும் பூமியில் இருக்காது. உப்பு என்னும் குணத்தைப் பற்றிய நவீன மருத்துவப் பாடங்களுக்கும் என் கருத்துக்களுக்கும் வேறுபாடு உண்டு. நான் கூறுவது ஐம்பூதக் கொள்கையின் அடிப்படையிலான சுவைத்தன்மையை. அந்த வகையில் பொருளின் குணத்தை விட சுவை முக்கியம். விந்து நீரின் உட்பொருளில் சர்க்கரை அதிகமாக உள்ளது. ஆனால் அதன் சுவை உவர்ப்பாக உள்ளது. இதுதான் நீங்கள் கவனிக்க வேண்டிய பாடம். உட்பொருளைக் காட்டிலும் சுவைக்கு ஆற்றல் மிகுதி.

‘நீர் என்ன சுவையில் இருக்கும்?’ எனக் கேட்டால் பதில் கூறி விடலாம். அந்தப் பதில் கடல் நீருக்குப் பொருந்தாது. ஆகவேதான் உடலுக்குள் வரும் எல்லா உணவுகளிலும் உவர்ப்புச் சுவை உண்டு என்கின்றேன். இந்த அளவு மிகுதியாக உவர்ப்பு உள்ளே வருவதால் அதன் வெளியேற்றமும் கூடுதலாகத்தான் இருக்க வேண்டும். உவர்ப்புச் சுவை எந்த அளவுக்கு உடலில் வெளியேறுகின்றதோ இந்த இளவுக்கு உடலில் நீர் குறையும். நாம் நீர் அருந்த வேண்டும். நீர் அருந்தியதும் மீண்டும் உவர்ப்பு வெளியேறும். இப்போது பசி எடுக்கும். நாம் உணவு உண்ண வேண்டும்.

மிகையான காற்றும் வெப்பமும் இருந்தால் அல்லது நீர் இருந்தால் உடல் திணறும். பசிக்காது. காற்று, வெப்பம், நீர் ஆகிய இந்த மூன்று பூதங்களையும் வெளியேற்றும் வல்லமை உவர்ப்புக்கு உண்டு. வியர்வை, சிறுநீர் ஆகிய இரண்டின் வழியாகவும் மிகையாக இருந்தவை வெளியேற்றப்படும். நீர் வெளியேற்றமும் நடந்து விட்டதால் உடலில் நீர்ச்சத்து குறையும். இந்தத் தகவலை தாகம் என்னும் உணர்வு நம்மிடம் தெரிவிக்கும். நாம் நீர் பருக வேண்டும். இப்போது நீர்த்தன்மையில் சீரான நிலை உருவாகி விடுகின்றது. சிறிது நேரத்தில் உடலின் உள்வெப்பம் அதிகரிக்கின்றது. இதுதான் பசியை அழைத்து வரும் செயற்பாடு.

இந்த விளக்கத்தை இங்கே குறிப்பிடக் காரணம் ‘தாகம் எடுத்தால் எங்கள் குளிர்பானத்தைப் பருகுங்கள்’ என்ற மூடத்தனம் இப்போது பரப்பப்படுகின்றது. இது பல்வேறு சிக்கல்களை வரவழைக்கும் பழக்கம். தாகம் எடுத்தால் தண்ணீர்தான் அருந்த வேண்டும். தவித்த உடலுக்கு தண்ணீர்தான் அமுதம். நீருக்குப் பதிலாக பழச்சாறு, இளநீர், பதநீர் போன்றவையும் அருந்தக்கூடாது. இவை எல்லாம் சூழலுக் கும், உடலுக்கும் நன்மை தருபவைதான். ஆனால் தாகம் எனும் உணர்வுக்கான மரியாதையை இந்தப் பொருட்களால் தர முடியாது.

உடலில் சேர்ந்திருந்த உவர்ப்பு வடிவக் கழிவுகளை வெளியேற்றவும், அவ்வாறு வெளியேற்றிய பிறகு உருவாகும் வரட்சியைச் சமாளிக்கவும்தான் தாகம் எடுக்கின்றது. அந்த நேரத்திலும் ஏதேனும் நிறுவனத் தயாரிப்பு பானங்களைப் பருகினால் உடலில் மிகுதியாக நஞ்சுதான் சேரும். மரபு வழிப்பட்ட இளநீர் போன்ற பானங்களிலும் பலவகைச் சத்துக்கள் உள்ளன. அந்தச் சத்துக்கள் எல்லாம் செரிப்பதற்கான சூழல் உடலில் இருக்காது. தாகம் எடுக்கும்போது நம் உடல் பழைய கழிவுகளை வெளியேற்றும் பணியில் உள்ளது. ஆகவே புதிய உணவுகளை உள்ளே தள்ள வேண்டாம் என்ற தகவலைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இளநீர், பதநீர் போன்றவை எல்லாம் வெயிலில் சோர்வடைந்த சூழலுக்கான ஊட்டச் சத்துக்கள் நிறைந்தவை. இவற்றை உணவுக்குப் பதிலாகவும், நீருக்குப் பதிலாகவும் உட்கொள்ளக் கூடாது. மாறாக பசி, தாகம் இரண்டும் இல்லாத நிலையில் அருந்த வேண்டும். இளநீரில் உள்ள ஊட்டச் சத்துக்களை மட்டும் மனப்பாடம் செய்து விட்டு ‘இளநீர் நல்லது’ என்ற குறுக்குவழிப் புரிதலுக்கு ஆட்பட்டோர் இப்போது அதிகரித்துள்ளனர். உடலுக்குத் தேவை இல்லாத நேரங்களில் அல்லது உடல் ஒவ்வாமையை வெளிப்படுத்தும் சூழல்களில் இளநீர் அருந்தினால் மிக மோசமான விளைவுகள் உருவாகும். நிறுவனத் தயாரிப்பு பானங்களை எல்லாம் வாழ்க்கையில் இருந்தே வெளியேற்றி விட்டால் ஐம்பூதங்களும் உங்களைக் கையெடுத்து வணங்கும்.

இப்போதைய நவீன சமூகத்தின் அன்றா டத்தைக் கவனியுங்கள். வியர்வையே இல்லாத சூழலே உருவாக்கப்பட்டுள்ளது. வியர்வை வழியாக வெளியேற வேண்டிய உவர்ப்பு எனும் பெருங்கழிவுக்கு இந்த வாழ்வியலில் உள்ள மாற்று ஏற்பாடு என்ன?. எப்போதும் குளிரில் வாழும் வகையில் பனிக்கரடிகளும், பண்டா கரடிகளும் படைக்கப்பட்டுள்ளன. ஆகையால்தான் அவற்றின் உடல் உரோமங்களால் மூடப்பட்டுள்ளது. மனித குலத்தின் சிறுபான்மையினர்தான் குளிர் நாடுகளில் வாழ்கின்றார்கள். அவர்களது தோலில் உள்ள வெண்மைதான் அவர்களுக்கான வெப்பத்தைத் தரும் பாதுகாப்பு அரண்.


இலங்கையில் வாழும் உங்களுக்கு குளிரில் இருக்க வேண்டிய தேவை என்ன வெனச் சிந்தியுங்கள். வியர்வைக்கான வாய்ப்பு எப்போதாவது உருவானாலும் வியர்வையை இழிவாகக் கருதும் போக்கு வளர்ந்து விட்டது. வியர்வையையும் அதன் துர்நாற்றத்தையும் இழிவாக கற்பிக்கும் விளம்பரங்கள் வருகின்றன. வியர்க்காமல் இருப்பதற்கான சோப்புகள், கிறீம்கள் நவீன மனிதர்களின் அலமாரிகளில் கொலு வீற்றிருக்கின்றன. இந்தப் பொருட்களின் தயாரிப்பில் சேர்க்கப்படும் வேதிப் பொருட் களின் நஞ்சுகளைப் பற்றி எழுதினால் வேறு வேலையே பார்க்க முடியாத அளவு எழுத வேண்டியிருக்கும். ஆனால் இந்தப் பொருட்களின் துணையுடன் வியர்வையைத் தேக்கி வைத்தால் உடலின் உள்ளே தடுத்து வைக்கப்படும் உவர்ப்பின் தீமைகளைக் குறிப்பிட்டாக வேண்டும்.

உவர்ப்புச் சுவைமிக்க நீர்க்கழிவுகளை உடலில் தேக்கினால் அதிகமாகப் பாதிப்படையும் முதல் உறுப்பு மண்டலம் சிறுநீரகம். உவர்ப்பை வெளியேற்றுவதையே தன் வாழ்நாள் பணியாகச் செய்யும் உறுப்பு மண்டலம் இது. வியர்வையை அனுமதித்து விட்டால் சிறுநீரகங்களின் சுமை குறைகின்றது. சிறுநீராக அனுப்பத்தக்க உவர்ப்புப் பொருட்களை மட்டும் பிரிப்பதில் அவை கவனம் செலுத்தும். மனிதர்களின் வியர்வைத் தடுப்புச் செயல்களால் உடலின் உள்ளே உவர்ப்பு நீர்க்கழிவு அதிகரிக்கின்றது. இந்தக் கழிவுகளை சிறுநீரகங்கள் மிகுந்த சிரமத்துடன் வெளியேற்றுகின்றன.

குளிரூட்டப்பட்ட அறைகளில் இருக்கும்போது அடிக்கடி சிறுநீர் வருவது இதனால்தான். வெப்பம் மிகுந்த இடத்தில் இருந்தால் அதிக தாகம் எடுக்கும். அதிக நீர் பருகினால் அதிக சிறுநீர் கழியும். இது இயற்கையின் இயல்புப்படி நிகழும் செயல்முறை. குளிர்ச்சியான அறைகளில் இருக்கும்போது உடலின் உள்வெப்பம் தூண்டப்படும். புறத்தில் இருந்து எந்த பூதம் மோதுகின்றதோ அதற்கு எதிரான பூதத்தை உருவாக்குவது உடலின் இயல்பு. அந்த வகையில் உள்வெப்பம் அதிகமானால் உடலின் உள்ளே உள்ள நீர்மக் கழிவுகள் வெளியேறத் தொடங்குகின்றன. இந்தக் கழிவுகள் எல்லாம் மென்மையான திடப் படிமங்களாக உடலின் உட்சுவர்களில் இருப்பவை. திடீரென உருவாகும் உள்வெப் பத்தில் இவை உருகுகின்றன. புறத்தில் குளிர்ச்சி இருப்பதால் வியர்வையாக வெளியேற்ற முடியாது. ஆகவே இந்தக் கழிவுகள் சிறுநீரகத்தை அடைகின்றன. இப்போது சிறுநீரகம் தேவையே இல்லாமல் கூடுதல் பணிகளைச் செய்கின்றது.

தாகம் எடுத்தால் நீர் பருகுதல், சோர்வாக இருக்கையில் இயற்கை பானங்கள் பருகுதல் ஆகிய நடவடிக்கைகளின் போது உருவாகும் நீர்மத்தைச் சிறுநீரகமும் தோல் மண்டலமும் நீராகவும், வியர்வையாகவும் வெளியேற்றி விடுகின்றன. ஆனால் குளிரூட்டப்பட்ட அறைகளால் உருவாகும் நீர்க் கழிவுகள் இவ்வாறான இயற்கை நிகழ்வுகள் அல்ல. விபத்து போன்றவை. வாழ்க்கையில் விபத்து நேரலாம். விபத்தை மட்டுமே விதியாக மாற்றிக் கொள்ளக் கூடாதல்லவா?





# மாதவியாய் காலமும் பெண்களு

பெண்கள் பலரையும் பாடாய்ப் படுத்தும் ஒரு விஷயம் மாதவிலக்கு. சிலருக்கு எளிதாய் கடந்து போய்விடும் அந்த மூன்று நாட்கள். பலருக்கு ஒரு யுகமாக கடக்கிறது. இந்த மாதவிலக்கு இன்னும் சிலருக்கு கூடுதலாக மேலும் சில பிரச்சினைகளை தருகிறது. இதனை ஆங்கிலத்தில் 'ப்ரீ மென்ஸ்சுரல் சிண்ட்ரோம்' என்று அழைக்கிறார்கள். அதாவது மாதவிலக்கு வருவதற்கு முன் பெண்களுக்கு ஏற்படுகிற உடல்நல பிரச்சினைகள்.

பல பெண்களுக்கு மாதவிலக்கு வருவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் படபடப்பு, எரிச்சல், காரணமற்ற கோபம், உடல் எடை அதிகரித்து வயிறு உப்பியது போன்ற எண்ணம், மார்பகம் கனமாக இருப்பது போன்ற உணர்வு, எரிச்சல், உணவு பிடிக்காமல் இருப்பது, தூக்கமின்மை, அழுகை வருவது போன்ற பலவகையான உணர்வுகளுக்கு பெண்கள் ஆளாகிறார்கள். இந்த உணர்வுகள் எல்லாம் 'ப்ரீ மென்ஸ்சுரல் சிண்ட்ரோம்' பாதிப்பு என்கிறது மருத்துவம். சிலருக்கு இந்த அறிகுறிகள் எல்லாம் மாதவிலக்கு சமயத்திலும் தொடர்கின்றன.

இந்த பிரச்சினைகள் ஏற்படுவதற்கான காரணம் பற்றிய ஆராய்ச்சி இன்றுவரை தொடர்கிறது. இது ஹார்மோன் மாற்றங்களால் ஏற்படுகின்றதா அல்லது வேறு ஏதேனும் காரணங்கள் இருக்கிறதா என்று கண்டுபிடிக்க முடியாமல் விஞ்ஞானிகளும் திணறுகிறார்கள். இதில் என்னவொரு வேடிக்கை என்றால் இந்த பிரச்சினையைப்பற்றி அந்தப் பெண்ணின் தாய் மற்றும் சகோதரிகள் கூட புரிந்துகொள்வதில்லை என்பதுதான் ன் ஒவ்வொரு மாசமும் இப்படி பிரச்சினை பண்ற என்பதுதான் அவர்களின் பார்வையாக இருக்கிறது.

அந்தப் பெண்கள் 'பி.எம்.எஸ்.' என்று சுருக்கமாக அழைக்கப்படும் மாதவிலக்குக்கு முந்தைய பிரச்சினையில் இருக்கிறார்கள் என்று அர்த்தம். இது நோயல்ல மாதவிலக்குக்கு முந்தைய சமயத்திலும் சிலருக்கு மாதவிலக்கு சமயத்திலும் ஏற்படுகிற சிறிய அளவிலான மன அழுத்தம் என்பதை புரிந்து கொண்டாலே பாதி பிரச்சினை தீர்ந்துவிடும்.

பொதுவாக மாதவிலக்கு ஏற்படுவதற்கு சில நாட்கள் முன்பாக சாப்பாட்டில் உப்பின் அளவை குறைக்க வேண்டும் என்கிறார்கள் மருத்துவர்கள். டென்சன் காரணமாக ரத்த அழுத்தம் உயராமல் இருக்கத்தான் இந்த உப்புக் கட்டுப்பாடு. இதோடு கூட யோகா, தியானம் போன்றவற்றைச் செய்தால் மன அமைதி கிடைக்கும். அந்த சமயத்தில் மன இறுக்கத்தால் தூங்க முடியாமல் அவதிப்படுபவர்கள் மனநல மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெறலாம்.

வைட்டமின் குறைபாடு இருந்தால் மட்டும் மருத்துவரின் அறிவுரைப்படி மாதவிலக்கு நாட்களில் வைட்டமின் மாத்திரைகளை சாப்பிடலாம். நன்றாக சாப்பிடுவது, தூங்குவது என்று மனதை சந்தோஷமாக வைத்துக்கொண்டாலே மாதவிலக்குக்கு முந்தைய சங்கடங்களை தவிர்க்கலாம். மாதவிலக்கு முடியும் போது இந்தப் பிரச்சினையும் தானாக மறைந்துவிடும். ●

# சளி பிடிக்காமல் குழந்தைகளை பராமரிப்போம்

சில சமயங்களில் சாய்ச்சல் கூட வரும். அதனால் சிறு குழந்தைகள் சொல்ல தெரியாமல் அழுவார்கள். பொதுவாக குழந்தைகளை இந்த காலகட்டத்தில் கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு சளி கட்டி அவதிப்பட்டால் வீட்டில் இருக்கும் சுக்கு, மிளகு, திப்பிலி, சித்தரத்தை, இவற்றை சம அளவு எடுத்து இடித்து பொடியாக்கி வைத்துக் கொண்டு 1/2 ஸ்பூன் எடுத்து தேனில் குழைத்து கொடுத்தால் மார்பில் கட்டியிருக்கும் சளி நீங்கிவிடும். இவ்வாறு சளி பிரச்சனையால் அவதிபடுபவர்களுக்கு வயதுக்கு தகுந்தாற் போல மருந்தினை எடுத்துக்கொள்ளலாம்.

தூதுவளை, கண்டங்கத்திரி, ஆடாதோடா, துளசி இவற்றின் இலைகளை சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி பொடியாக்கி சூரணம் செய்து 1ஸ்பூன் அளவு எடுத்து தேனிலோ அல்லது வெந்நீரிலோ கலந்து கொடுத்து வந்தால் ஆஸ்துமா, நெஞ்சு சளிஇ கபக்கட்டு போன்றவை குணமாகும். துளசி இலைகளை பறித்து நசுக்கி அப்படியே சாறு எடுத்து மருந்துக்கு கொடுப்பார்கள். இப்படி செய்வது தவறு. ஏனெனில் துளசி இலையில் உள்ள மெல்லிய சுனைகள் குழந்தைகளுக்கு பல பாதிப்புகளை ஏற்படுத்தும்.

மழைக்காலத்திலும், பனிக்காலத்திலும் குழந்தைகளை வெளியே அழைத்து செல்வதை தவிர்க்க வேண்டும். அப்படியே அழைத்து செல்ல நேர்ந்தாலும் தகுந்த பாதுகாப்புடன் செல்ல வேண்டும். சிறு குழந்தைகள் படுக்கையில் சிறுநீர் கழித்து விட்டால் துணியை உடனே மாற்றிவிட வேண்டும். ஈரப்பதம் மிகுந்த இடத்தில் குழந்தைகளை தூங்கவைக்ககூடாது.

குளிர் காலங்களில் ஈரக்காற்று படாதவாறு குழந்தைகளை கம்பளியால் சுற்றி குழந்தைகளின் உடலையும், காதுகளையும் மூட வேண்டும். குளிர் காலத்தில் நன்குகொதிக்கவைத்து ஆறியதண்ணீரை குடிக்கவும். எளிதில் சீரணமாகும் உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். குளிரூட்டப்பட்ட மற்றும் பதப்படுத்தபட்ட உணவுகளை குழந்தைகளை தருவதை தவிர்க்க வேண்டும்.

பாலூட்டும் தாய்மார்கள் முதலில் தங்களுக்கு சளித்தொல்லை ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் தாய்க்கு சளி பிரச்சனை இருந்தால் பாலூட்டுவதால் குழந்தைகளுக்கும் சளி பிடித்துவிடும். தலைக்கு குளித்தால் நன்கு தலையை துவட்டிய பிறகே பால் கொடுக்க வேண்டும். ●





# கூந்தல் அழகு பெற ரோஜா இதழ்

ரோஜாவில் விட்டமின்கள் சி, டி மற்றும் பி3 அதிக அளவில் உள்ளது. இவை அனைத்தும் இரத்த ஓட்டத்தை தூண்டி புதிய முடி செல்கள் உருவாக ஊக்குவிக்கின்றது. எனவே ரோஜா இதழ்கள் உங்களுடைய தலைமுடிக்கு அளிக்கும் பலன்களை தவிர்க்க முடியாது.

தேங்காய் எண்ணெய் அரை கப் எடுத்து அதை சுமார் 2 நிமிடங்கள் வரை குறைந்த வெப்ப நிலையில் சூடாக்கவும். இரண்டு நிமிடங்கள் கழித்து அடுப்பை அணைத்த பின்னர் எண்ணெயை குளிர விடவும். அடுத்த படியாக தேங்காய் எண்ணெய் உடன் சுமார் 5 சொட்டு ரோஸ்மேரி எண்ணெயை சேருங்கள். இந்தக் கலவையை நன்கு கலக்கவும்.

ஒரு கை நிறைய ரோஜா இதழ்களை எடுத்து அதை சுமார் 24 மணி நேரம் சூரிய ஒளியில் காய விடுங்கள். ரோஜா இதழ்கள் அடர் பழுப்பு நிறத்திற்கு மாறிய பின்னர் அதை நன்றாக பொடித்து பொடியாக மாற்றி விடுங்கள். இந்தப் பொடியை ஒரு தேக்கரண்டி எடுத்து நீங்கள் ஏற்கனவே தயாரித்து வைத்துள்ள எண்ணெயுடன் நன்கு கலக்குங்கள்.

சீப்பு பயன்படுத்தி உங்கள் முடியில் உள்ள அனைத்து சிக்கல்களையும் நீக்கவும். மிகவும் கடினமாக சீப்பு உபயோகிப்பதை தவிர்க்கவும். அவ்வாறு செய்வதால் உங்களுடைய முடி உடைந்து விடலாம். முடிந்த வரை மிகவும் மெதுவாக அழுத்தம் கொடுக்கவும்.

வெதுவெதுப்பான எண்ணெய் கலவையை எடுத்து உங்களுடைய முடியின் வேர்கள் மற்றும் உச்சந்தலையில் மிகவும் கவனமாக தடவவும். உங்களுக்கு அதிக பலன் வேண்டுமெனில், உங்களுடைய முடியை பகுதியாகப் பிரித்து இந்த எண்ணெயை தடவவும். முதலில் உச்சந்தலையில் தடவி அதன் பின்னர் நுனி வரை முழுவதுமாக எண்ணெயை தடவவும்.

இந்தப் பூச்சை சுமார் 45 நிமிடங்கள் வரை உலர விடுங்கள். அதன் பின்னர் ஒரு லேசான ஷாம்பு கொண்டு சுத்தமாக தலைக்கு குளித்து விடுங்கள். தலைக்கு குளித்த பின்னர் தலைக்கு கண்டிஷனர் உபயோகியுங்கள்.

உங்கள் தலையில் உள்ள ஈரப்பதத்தை நீக்க ஒரு பருத்தி துண்டு வைத்து மிகவும் மெதுவாக தலை துவட்டுங்கள். உங்களுடைய தலைமுடி இயற்கையாகவே உலரட்டும். எந்த ஒரு முடி உலர்த்தியையும் பயன்படுத்த வேண்டாம்.

இதனை முதல் முறை உபயோகித்த பின்னர் உங்களுடைய தலைமுடி மிகவும் மென்மையாக மாறி விட்டதை நீங்கள் உணர்வீர்கள். எனவே நல்ல பலனிற்கு வாரத்திற்கு ஒரு முறை இந்த தலை முடிப் பூச்சை உபயோகியுங்கள். ●

## விடுகதை

1. இளமையில் பச்சை முதுமையில் சிகப்பு குணத்திலே எரிப்பு. விடை தெரியுமா?
2. எவ்வளவு ஓடினாலும் எனக்கு வியர்வை வராது. வீட்டில் அன்பாய் வளரும் என்னை திருடனுக்குப் பிடிக்காது. விடைதெரியுமா?
3. பதினாறு மணி நேரம் தூங்கி மகிழும் நான் அழுதால் சிறிய குழந்தை அழுகிறதோ என்று ஏமாறும் தாய்மார்கள் ஏராளம். விடை தெரியுமா?
4. மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து பிடித்திருப்பவர்களைக் காப்பாற்றும் என்னை இந்த இளம் பெண்கள் அழகுக்காகப் பிடித்துக் கொள்கிறார்கள். விடை தெரியுமா?
5. என் வீட்டை நானே தூக்கிச் சுமந்து செல்வதால்தான் என்னைக் காப்பாற்றிக் கொள்ள முடிகிறது. விடை தெரியுமா?
6. இறக்கை இருந்தும் என்னால் பறக்க முடியாது. இருந்தாலும் என் ஓட்டத்தைப் பிடிக்க எவராலும் முடியாது. விடைதெரியுமா?
7. நீரிலும் வாழ்வேன் நிலத்திலும் வாழ்வேன். நீண்ட ஆயுள் உடைய எனக்கு இறைவன் கொடுத்த கவசமும் இருக்கு. விடைதெரியுமா?
8. உயிரைக் காக்கும் தானம். புண்ணியம் தரும் தானம். ஆபத்தில் இருப்பவருக்குத்தான் தெரியும் இதன் மதிப்பு. விடை தெரியுமா?
9. சுவையை உணர வைக்கும் என்னுடைய பேச்சால் பயனடைந்தவர்களும் உண்டு பாதிப்படைந்தவர்களும் உண்டு. விடை தெரியுமா?
10. முடிவிற்கு முன்பே முந்திக் கொள்ளும் மனிதர்களை என் பெயரைச் சொல்லித்தான் அழைக்கிறார்கள். விடை தெரியுமா?

*விடைகள்:*

*1. மிளகாய். 2. நாய். 3. பூனை. 4. குடை. 5. நத்தை. 6. நெருப்புக்கோழி. 7. ஆமை. 8. இரத்த தானம். 9. நாக்கு. 10. முந்திரிக் கொட்டை*

# செல்லம் கொடுத்த மகன்


வீடு இரண்டு பட்டுக்கொண்டிருந்தது சுந்தரம்தான் 'லூட்டி' அடித்துக் கொண்ருந்தான். சாமிநாதன் வீட்டுக்குள் நுழைந்தார் சுந்தரம்.

அவர் அழைப்பில் என்னதான் மந்திர சக்தி இருந்ததோ தெரியவில்லை சுந்தரம் விளையாட்டை நிறுத்தி விட்டு அப்பாவிடம் ஓடி வந்தான். அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினான்.

அப்பாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது வாரி அணைத்து முத்தம் கொடுத்தார்.

இப்போது அப்பா எனக்கு இனிப்பு வாங்கி வந்திருப்பாரே!

சுந்தரம் நினைத்தது வீண் போகவில்லை மேசை மேல் வைத்த பைக்குள் ராமநாதனின் கைகள் ஜாங்கிரி, பெப்பர்மின்ட் சாக்லேட் ஏன்று ஒவ்வொன்றாக வெளியே எடுத்து சுந்தரம் உனக்குத்தான் எல்லாமும்' என்றார் சாமிநாதன்.



மனதில் ஆசைமேலிட இனிப்பு பண்டங்களை ஆசையுடன் வாங்கிக் கொண்டான் சுந்தரம்.

'நன்றி அப்பா'

சுந்தரம் சாமிநாதனின் செல்ல பையன் என்பதில் சந்தேகம் இல்லை. அப்படிச்செல்லம் பாராட்டுகிற அப்பாவுக்கு மகனாகப் பிறந்ததை தன் பாக்கியமாக நினைத்து மகிழ்ச்சியில் திகைத்தான் அவன்.

சுந்தரம் ஒரு நாள் 'அப்பா எனக்கு உல்லன் பாண்ட் வேணும்' என்பான்.

அடுத்த அரைமணி நேரத்தில் உயர்ந்த விலையில் கண்ணைப் பறிக்கிற நிறத்தில் ரெடிமேட் உல்லன் பாண்ட் அவன் உடம்பை அலங்கரிக்கும்.

இன்னொரு நாள்

எனக்கு சைக்கிள் வேணும் என் நண்பர்கள் அனைவரும் வைத்து இருக்கிறார்கள் என்பான்

அன்று மாலையே புதிய சைக்கிளுடன் வருவார் சாமிநாதன்.

சுந்தரம் சைக்கிளை ஜாக்கிரதையாக மெதுவாக ஓட்ட வேண்டும். தெருவில் ஓரமாக போக வேண்டும் என்று கூறினார் சாமிநாதன்.

'என்னத்துக்கு அப்பா இவ்வளவு அவசரம் சைக்கிள் வாங்க! மெதுவாகவே வாங்கியிருக்கலாம்.

'அதென்னவோ உன் ஆசையை உடனே நிறைவேற்றி விடவேண்டும் என்று நினைத்தேன் அதுதான். நாட்கள் மெதுவாக நகர்ந்தன சாமிநாதனுக்குமகன் மீதிருந்த பாசம் அதிகமாயிற்று. வயது ஏற ஏற சுந்தரத்தின் ஆசைகளும் அளவு கடந்தன. நினைத்ததை சாதித்துக் கொண்டே ஆகவேண்டும் என்ற பிடிவாதமும் அவனிடம் வளர்ந்தது.

சாதாரணமாக ஒரு தந்தை மகனிடம் செலுத்துகிற பாசத்தை விட எத்தனையோ மடங்கு உயர்ந்தது அல்லவா சாமிநாதன் மகனிடம் கொண்டிருந்த பாசம். ஆனால் 'கண் மூடித்தனமாக செல்லம் கொடுத்தார் அவனுக்கு 'ஆனாலும் ஆண் குழந்தைக்கு நீங்க இவ்வளவு இடம் கொடுக்கக் கூடாது என்று அவர் மனைவியும் சுட்டிக் காட்டினாள் ஆனால் அவர் அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை.




அன்று மாலை சற்று சோகத்துடன் வீடு திரும்பினார் சாமிநாதன். வழக்கமாக கலகலப்பு அவர் முகத்தில் குடிகொண்டு இருக்கவில்லை. அவர் வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக 'குட் ஈவினிங் டாடி' என்றான் சுந்தரம்.

ஒரு தலையசைப்புடன் மகனின் வரவேற்பை ஏற்றுக் கொண்ட தந்தை அலுப்புடன் சோபாவில் சாய்ந்தார். தொழிலில் ஏதேதோ சிக்கல்கள் அவருக்கு மனமே சரியில்லை அதனால் ஆசை மகனின் நேசக்குரல் கூட அவருக்கு எட்டிக் காயாய்க் கசந்தது.

அப்பாவின் முகத்திலிருந்து அவர் வருத்தமாயிருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டான் சுந்தரம் வாயால் எதுவும் பேசாமல் செய்கை மூலம் அவரைச் சிரிக்க வைக்க திட்டமிட்டான் அதை உடனேயே நிறைவேற்றினான்.

சுந்தரம் கையில் கொடுத்த காகிதத்தை பிரித்துப்பார்த்தார் சாமிநாதன். அதில் கண்டிருந்த விஷயம் அவன் எதிர்பார்த்த மாதிரி அவருக்கு சிரிப்பு மூட்டவில்லை மாறாக கோபத்தைத்தான் தூண்டிவிட்டது.

'அப்பா காலையில் குலாப்ஜாமுன் வாங்கி வரும்படி நான் கண்டித்துச் சொல்லியிருந்தும் நீங்கள் வாங்கி வரவில்லை என்று தெரிகிறது. நீங்கள் வாங்கி வராததை மறைக்க என்னிடம் பேசவும் பிடிக்காத மாதிரி சிடு மூஞ்சித்தனமாக இருக்கிறீர்கள்! என்பதே காகிதத்தில் எழுதப் பட்டிருந்த விஷயம்.

கோபத்தில் தேகம் படபடவென்று துடிக்க முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கக் காகிதத்தை சுக்கு நூறாக கிழித்தெறிந்தார் சாமிநாதன். எறிந்து விட்டு 'விறு விறு' வென்று எழுந்து தம் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டார்.

சுந்தரத்துக்கு உடம்பே ஆடியது அப்பாவின் செய்கையைக் கண்டு. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை அவன் இதுவரை அனுபவித்ததில்லை என்றைக்கும் இல்லாதபடி அப்பாவுக்கு இன்று என்ன வந்தது? கோபமே கண்டறியாத அவர் முகம் அனலாய்க் காய்கிறதே!

'அப்பா' என்று அறைக் கதவைக் தட்டினான் சுந்தரம்.

'என் கஷ்டத்தை நஷ்டத்தை உணராமல்மன நிலையைக்கொஞ் சம்கூடப் புரிஞ்சிக்காமல் உன் ஆசையை பெரிசாய் நினைக்கிற நீ என்னை இனிமேல் அப்பா என்றே கூப்பிட வேண்டாம்! உன் முகத்தில் விழிக்கவும் எனக்கு இஷ்டமில்லை. ●


# யாரிடமும் பகைமை கொள்ளாதே

ஒரு நாள் வகுப்பறையில் பாடம் நடத்திகொண்டிருந்த ஆசிரியர் மாணவர்களிடம் 'உங்களுக்கு யார் மீதாவது மன்னிக்க முடியாத கோபம் இருக்கிறதா? நீங்கள் யாராவது வாய்ப்பு வந்தால் யாரையேனும் பழி வாங்க வேண்டுமெனத் துடிக்கிறீர்களா?' என்று கேட்டார்.

வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் 'ஆமாம்... அய்யா' என்றார்கள். ஆசிரியருக்கு மிகுந்த வியப்பு.

ஒவ்வொருவராக அழைத்து 'மன்னிக்கவும் உங்களுக்கு மறக்கவும் முடியாத அளவுக்கு எத்தனை கோபங்கள் இருக்கின்றன?' என்று கேட்டார்.

ஒவ்வொருவரும் ஐந்து பத்து என்று அடுக்கி கொண்டே சென்றார்கள். எனவே அவர் மாணவர்களுக்குப் பழிவாங்கும் எண்ணம் தவறு என்று புரிய வைக்க நினைத்தார்.



அவர் ஒவ்வொரிடமும் ஒரு பையைக் கொடுத்தார், வகுப்பறைக்கு ஒரு கூடையில் தக்காளி கொண்டு வரப்பட்டது. யார்மீது எத்தனை பழிவாங்கும் எண்ணம் உள்ளதோ, அத்தனை தக்காளிகளைத் தங்கள் பையில் எடுத்துக் கொள்ளுங்கள். இந்தத் தக்காளிப் பையை எப்போதும் உங்களுடன் வைத்துக் கொண்டிருக்கவேண்டும்இ தூங்கும் போதும் அருகிலேயே வைத்திருக்க வேண்டும்' என்று சொன்னார்.

மாணவர்களும் அவர் சொல்வது அறியாமல் தலையை ஆட்டியபடி தங்கள் பழிவாங்கும் எண்ணத்திற்குத் தகுந்தபடி தக்காளியை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டார்கள்.

ஓரிரு நாட்கள் ஒரு குறையும் இல்லை. ஆனால், அடுத்தடுத்த நாட்களில் பையில் போட்டிருந்த தக்காளிகள் அழுகி நாற்றமெடுக்கத் தொடங்கின. நாற்றம் அடிக்கும் பையுடன் வெளியே செல்ல மாணவர்கள் கூச்சப்பட்டனர்.

அதன் பிறகு பொறுக்க முடியாமல் அவர்கள் ஆசிரியரிடம் சென்று, தாங்கள் வைத்திருக்கும் தக்காளிப் பைகளைத் தூக்கி எறிய அனுமதி கேட்டனர்.

இதைக் கேட்டுச் சிரித்த ஆசிரியர், 'நாற்றம் வீசுபவை தக்காளி மட்டுமல்ல, அந்த நாற்றத்தைப் போலவே, உங்கள் பகைமை உணர்வும் பழி வாங்கும் குணமும் மனதுக்குள் அழுகி நாறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பகையையும், பழியையும் மறந்து மன்னித்து விடுவதாக இருந்தால், தக்காளிப்பையைத் தூக்கி எறியுங்கள்...' என்றார். அப்போது தான் மாணவர்களுக்கு மனத் தெளிவு பிறந்தது.

அப்போதே தக்காளிப் பைகளைக் கொண்டு போய்க் குப்பைத் தொட்டியில் வீசினர். மாணவர்கள் ஒருவருக்கொருவர் பகை மறந்து நட்புடன் வகுப்பறைக்கு திரும்பினர். எவரிடமும் பகைமை இல்லாமல், அனைவருடனும் நட்புடன் பழலாமே. ●


பொட்டம்மான், சூசை, பால்ராஜ்

# பிரபாகரனின் குடிநீரில் நஞ்சு கலந்தது யார்?



**இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 16**

பீஷ்மர்

சொர்ணத்தின் முதலாவது வீழ்ச்சி சாவகச்சேரியில் நிகழ்ந்ததை கடந்த வாரம் பார்த்தோம். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் இரண்டாவது வீழ்ச்சியும் சாவகச்சேரியில்தான் சொர்ணத்திற்கு நிகழ்ந்தது. அதை தொடரும் பகுதிகளில் பார்க்கலாம்.

சொர்ணத்திற்கும் பிரபாகரனிற்குமிடையில் இருந்த பிணைப்பை கடந்த இதழ்களில் பார்த்தோம். இதன் தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும், சொர்ணத்தின் வாழ்வுடன் ஏதோவொரு விதத்தில் தொடர்புபட்டிருந்த ஒரு சுவாரஸ்ய சம்பவத்தை குறிப்பிட வேண்டும்.

சொர்ணம் இம்ரான் பாண்டியன் படையணியின் தளபதியாகசெயற்பட்டார். பின்னாளில் அந்த பொறுப்பை வகித்த கடாபி (ஆதவன்) பிரபாகரனின் பாதுகாப்பு விவகாரங்களை கவனித்தார். அவருக்கு அடுத்த நிலையில் செல்லக்கிளி என்பவர் இருந்தார். இவர் மட்டக்களப்பை சேர்ந்தவர். தற்போது பிரித்தானியாவில் குடியுரிமை பெற்று வசித்து வருகிறார்.

சொர்ணம் இம்ரான் பாண்டியன்



படையணியிலிருந்து மாற்றப்பட இருந்தார். அடுத்தநிலை தளபதிகளை வளர்க்க புதிய தளபதி அவசியம். அடுத்தது, மாத்தையா விவகாரம். மாத்தையா விவகாரத்தின் பின் புலிகள் முழுமையாக தங்களை மறுசீரமைத்தனர். சொர்ணத்தின் மாற்றம் சந்தேகத்தின் பாற்பட்டதல்ல. அந்த பொறுப்பிலிருப்பவரும் மாற்றப்பட வேண்டுமென்ற விதியை அப்போதுதான் உருவாக்கினார்கள்.

மாத்தையா விவகாரத்தின் போது பிரபாகரனின் பாதுகாப்பு பொறுப்பாளராக இருந்தவர் சொர்ணம். பிரபாகரனின் தொலைத்தொடர்பாளர் செங்கமலம் போன்றவர்கள் மாத்தையாவுடன் தொடர்பில் இருந்த தகவல் வந்ததும் சொர்ணம் ஆடிப்போய் விட்டார். பிரபாகரனின் பாதுகாப்பு உறுப்பினர்கள் வரை மாத்தையா ஊடுருவி விட்டார் என்றதை அறிந்ததும் சொர்ணம் ஆடிப் போய் விட்டார். பிரபாகரனை பாதுகாக்க முடியுமா என்றசந்தேகமும்,பயமும் அவரை ஆட்டுவித்தது. நேராக பொட்டம்மானின் முகாமிற்கு சென்றார். கதிரையில் உட்கார்ந்திருந்த பொட்டம்மானின் காலைப் பிடித்து அழத் தொடங்கிவிட்டார். பொட்டம்மான் ஆறுதல் சொல்லி அவரை தேற்றியது தனிக்கதை. இது சொர்ணத்தின் விசுவாசத்தின் சாட்சி.

சொர்ணம் இடமாற்றம் செய்யப்பட்டால் அடுத்தது யார் என்ற கேள்வியிருந்தது. கடாபிதான் அடுத்த தெரிவு. கடாபிக்காகத்தான் சொர்ணத்தை மாற்றும் முடிவை பிரபாகரன் எடுத்தார். ஆனால் கடாபியுடன் போட்டியிட இன்னொருவர் விரும்பினார். அது செல்லக்கிளி. பிரபாகரனின் நன்மதிப்பை பெற்றால், இலகுவாக அந்தப்பொறுப்பை எடுக்கலாமென நம்பினார்.

செல்லக்கிளி 1986 இல் மட்டக்களப்பில் பயிற்சி பெற்றவர். இந்திய இராணுவ காலம் முதல் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர் அணியில் இருந்தவர். பிரபாகரனின் தனிப்பட்ட மெய்பாதுகாவலராகவும் செயற்பட்டவர். போட்டியில் கடாபி தன்னை விட முன்னிலையில் இருப்பது செல்லக்கிளிக்கும் தெரியும். அதனால் குறுக்குவழியில் அதனை அடைய முயன்றார்.

பிரபாகரனின் அன்றாட வழக்கங்களில் ஒன்று காலை உடற்பயிற்சி, நடைப்பயிற்சி. அப்போது கொக்குவிலில் பிரபாகரனின் முகாம் இருந்தது. இது 1994 இல் நிகழ்ந்தது.

காலை உடற்பயிற்சியின் பின்னர் நன்றாக நீரருந்துவார். அப்படித்தான் ஒருநாள் நடைப்பயிற்சியின் பின் நீரருந்த விரும்பினார். அவரது வீட்டில் நின்ற போராளியொருவரிடம் பிரபாகரன் நீர் கேட்டார்.

அப்போது, பிரபாகரனின் உணவுகள் கிரமமாக சோதனை செய்யப்படுவதில்லை. பாதுகாப்பு பொறுப்பாளர் இடையிடையே சோதனை செய்வார். அது பாதுகாப்பு பொறுப்பாளரின் முடிவு. பின்னாளில்தான் அது வழக்கமாக்கப்பட்டது. மருத்துவ போராளியொருவர் பாதுகாப்பு குழுவில் அங்கம் வகித்தார். பிரபாகரனிற்கு வழங்கப்படும் உணவுகளை அவர்தான் முதலில் உண்பார். அவர் உண்ட பன்னிரண்டு நிமிடங்களின் பின்னர்தான் பிரபாகரன் உணவருந்துவார். போராளிகள் சந்திப்பில், அனைவரும் உணவருந்துவார்கள். அந்த சமயத்தில் அனைவருக்கும் ஒரே உணவுதான். ஆனால், பிரபாகரனின் சமையல்கூடத்திலிருந்து தனியாக தயார் செய்யப்பட்டு அந்த மருத்துவ போராளியிடம் கையளிக்கப்படும். அவர் உணவு மேசைக்கு அனைவரும் செல்லும்வரை டிபன் கரியருடன் இருப்பார்.

உடற்பயிற்சியின் பின் பிரபாகரன் நீர் கேட்டதும், அங்கு காவல்கடமையிலிருந்த போராளி உள்ளே சென்று நீர் எடுத்து வந்தார். அப்போது செல்லக்கிளி திடீரென வந்து நீரை வாங்கி சோதனை செய்தார். அந்த நீரை அருந்திய செல்லக்கிளி, அது ஒரு மாதிரி இருப்பதாக எச்சரித்தார். அடுத்த சில நிமிடங்களிலேயே வயிற்றைப் பொத்திக்கொண்டு உட்கார்ந்தார். வாந்தி எடுத்தார். வாயிலிருந்து நுரை தள்ளினார்.

ஏதோ விபரீதம் என முகாம் எச்சரிக்கப்பட்டது. உடனடியாக பிரபாகரன் அரியாலையிலிருந்து இன்னொரு முகாமிற்கு மாற்றப்பட்டார். அங்கு கடும் பாதுகாப்பு எற்பாடுகள் செய்யப்பட்டன.

கொக்குவில் முகாம் உயர்மட்ட விசாரணையாளர்களின் கட்டுப்பாட்டில் வந்தது. பிரபாகரன் அருந்தும் நீரில் யாரோ நஞ்சு கலந்திருக்க வேண்டுமென்பது முதல்கட்ட தகவல். அதை அருந்திய செல்லக்கிளி உயிராபத்தான நிலையில் யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்த விவகாரம் பல்வேறு கோணங்களில் விசாரணைக்குட்படுத்தப்பட்டது. பொட்டம்மானிற்கு ஆரம்பத்திலிருந்தே ஒரு சந்தேகம் இருந்தது. அது செல்லக்கிளி மீதே! பிரபாகரனிடமும் அது பற்றி சொல்லியுள்ளார். எனினும், பிரபாகரன் அதை ஏற்கவில்லை. தனது உயிரை காப்பாற்றியவராகவே பிரபாகரன் நினைத்தார்.

ஆனால் புலன் விசாரணையை துரிதப்படுத்திய பொட்டம்மான், பிரபாகரனின் அதிருப்தியின் மத்தியிலும் செலலக்கிளியை கைது செய்தார். கடுமையான விசாரணையின் பின் செல்லக்கிளி உண்மையை ஒத்துக்கொண்டார். பிரபாகரனிற்கு தன்னில் அபிமானமும், பிடிப்பும் ஏற்படுவதற்காக அவர் அருந்தும் தண்ணீரில் சிறிதளவு சயனைட் நஞ்சை தானே கலந்ததாக ஒத்துக்கொண்டார். அந்த தண்ணீரை பிரபாகரன் குடித்துவிடக் கூடாதென்பதிலும் மிக கவனமாக இருந்ததாகவும் கூறினார். அதன் பின்னர் செல்லக்கிளி சிறையில் அடைக்கப்பட்டார். சுமார் ஆறு மாதங்கள் தண்டனையின் பின் விடுவிக்கப்பட்டு, தென்மராட்சியின் அல்லாரையில் 1995 இல் ஆரம்பித்த பயிற்சி முகாமான கெனடி 1 இன் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். எனினும், அங்கும் நிதி மோசடி குற்றம் சுமத்தப்பட்டு அமைப்பிலிருந்து விலக்கப்பட்டார். அமைப்பிலிருந்து விலகிய பின்னர் வன்னியில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் வாகன சாரதியாக தொழில்புரிந்துவிட்டு, முகவர் ஊடாக பிரித்தானியாவிற்கு சென்று அகதி அந்தஸ்து பெற்றுக்கொண்டார்.

சொர்ணம், பிரபாகரன் உறவை புரிய வைக்க இன்னொரு சம்பவத்தை குறிப்பிட வேண்டும். இதனை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்க வேண்டும். தவறிவிட்டது. சொர்ணத்தின் திருமணமே அது.

1990 இல் இந்திய இராணுவத்துடனான யுத்தத்தின் பின் புலிகள் அமைப்பிற்குள் திருமணங்கள் நடந்தன. அப்போது புலிகளின் திருமண வயது ஆண்களிற்கு 29.

பிரபாகரன் குடும்பத்தின் மீதே பிரபாகரன் அதிவிசுவாசத்தைவெளிப்படுத்தியவர். பிரபாகரனை போலவே மதிவதனியும் சொர்ணத்தில் அன்பாக இருந்தவர். 1993 இல் சொர்ணம் திருமண வயதை எட்டியபோது, அவரை திருமணம் செய்யுமாறு பிரபாகரன் தம்பதியினர் வற்புறுத்தினர். திருமண பேச்சை எடுத்தாலே சொர்ணம் வெட்கப்பட்டு, அசூசைப்பட்டார். தனக்கு திருமணம் செய்யும்எண்ணமில்லையென்றும்,இலட்சியத்தை அடைந்த பின்னரே எதுவென்றாலும் என சொன்னார். எனினும், பிரபாகரன் தம்பதி அதை ஏற்கவில்லை. குறிப்பாக மதிவதனி அதை ஏற்கவில்லை. சொர்ணத்திற்கு யாரிலும் விருப்பமிருந்தால் தானே நேரில் சென்று பேசுவதாகவும் கூறியிருந்தார். சொர்ணத்திற்கு அப்படியொன்றும் இருக்கவில்லையென்றார்.

அந்த காலப்பகுதியில் சொர்ணம் என்றால் போராளிகளே நடுநடுங்குவார்கள் என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தேன். பெண் போராளிகளும் அப்படித்தான். சொர்ணத்துடன் முரண்பட்ட அப்போதைய மகளிர் படையணி தளபதியாக இருந்த ஜெனா அமைப்பிலிருந்தே நீக்கப்பட்டார். (தொடரும்)

# பன்னீர்செல்வம் 'கெத்து' பேட்டியும் ஓர் உளவியல் பார்வையும்!

முத்துக்குமார்



கடந்த 5ம் திகதி நடந்த அதிமுக எம்எல்ஏக்கள் கூட்டத்தில் சட்டப் பேரவை கட்சித் தலைவராக சசிகலா தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து, முதல்வர் பதவியை ஓ.பன்னீர்செல்வம் ராஜினாமா செய்தார். முதல்வராக சசிகலா பதவியேற்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வந்தன.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை இரவு 8.50 மணிக்கு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், பாதுகாப்பு போலீஸாருடன் திடீரென மெரினாவில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்துக்கு வந்தார். நினைவிடத்தின் முன்பு அமர்ந்த அவர், மவுனமாக கண்ணை மூடி தியானத்தில் ஆழ்ந்தார். 40 நிமிடங்கள் தியானத்தில் இருந்த அவர், பின்னர் கண்கலங்கியபடி எழுந்தார். ஜெயலலிதா நினைவிடத்தை சுற்றி வந்து விழுந்து வணங்கினார்.


அதைத் தொடர்ந்து அங்கு திரண்டிருந்த செய்தியாளர்களிடம் அவர் பேசும்போது, என்னை கட்டாயப்படுத்தியதால்தான் முதல்வர் பதவியை ராஜினாமா செய்தேன் என்று ஓ.பன்னீர்செல்வம் கண்ணீர் மல்க கூறினார். மக்களும் தொண்டர்களும் விரும்பினால் ராஜினாமாவை வாபஸ் பெறுவேன் என்றும் அறிவித்தார். ஆட்சிப் பொறுப்புக்கு நல்லவர் ஒருவர்தான் வரவேண்டும் என்றும், கட்சியைக் காப்பாற்ற தன்னந்தனியாக போராடுவேன் என்றும் பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

ஓ.பன்னீர்செல்வம் அளித்த பேட்டியின் பின்னணியில் மிகவும் நிதானமான ஒரு மனிதரின் உளவியலே வெளிப்படையாக தெரிகிறது. அரசியல்வாதிகளுக்குரிய எந்த வித பரபரப்பு மனோபாவமும் அற்ற, சுய ஆதாயம் அற்றவர் போன்ற ஒரு மனிதரின் தன்மைதான் ஓபிஎஸ்ஸின் பேட்டி அறிவுறுத்துகிறது.

முதலில் பன்னீர்செல்வம், ஜெயலலிதா சமாதியின் முன் அமர்ந்து தியானம் செய்த அந்த 40 நிமிடங்கள், தன்னுடைய எதிர்காலத்தை குறித்து அல்ல, கட்சியின் எதிர்காலம், தமிழகத்தின் எதிர்காலம் என்பதைப் பற்றிய அக்கறையாகப் பார்க்க வேண்டிய ஒரு தருணமாக அமைந்துள்ளது.

ஒரு முதல்வராக செய்தியாளர்கள் சந்திப்பை முன் கூட்டியே அறிவித்து ஒரு சலசலப்பையும் பரபரப்பையும் உருவாக்கியிருக்கலாம். ஆனால், பன்னீர் செல்வம் அதனை விரும்பவில்லை.தியானம் முடிந்த பிறகும் கூட செய்தியாளர்கள் சலசலப்பை ஏற்படுத்தி சப்தம் எழுப்பிய போதும் அமைதியடைய வலியுறுத்தி 'சில உண்மைகளை சொல்ல வந்திருக்கிறேன்' என்று நிதானமாக அவர் தெரிவித்து பேசத் தொடங்கினார்.

அவர் தியானம் செய்தது, தான் பேசப்போவதற்கான 'அம்மா'விடம் பெற்ற ஆசிதான் என்று அவர் கருதி இருக்கலாம். மேலும் தான் நிதானம் தவறாமல் என்ன பேச வேண்டுமென்பதை பரபரப்பு அரசியலாக்காமல் பேச வேண்டும் என்ற உறுதியும், அரசியலுக்கப்பாற்பட்ட ஒரு மனிதனின் அக்கறையுமே காரணமாக இருக்க முடியும்.



அவரது பேச்சின் பின்னணியில் யார் என்ற விவாதங்களெல்லாம் கிளம்பியுள் ளன. ஆனால் இம்மாதிரியான எதிர்வினை களை அவரது பேட்டி ஏற்கெனவே முறியடித்து விட்டது, காரணம் அவர் தன் பதவியைத் தக்க வைத்துக்கொள்ளும் எந்த ஒரு நியாயமான, தனிப்பட்ட ஆசையைக் கூட வெளிப்படுத்தவில்லை, தனிமனிதனாக நின்று போராடுவேன், 'தகுதியுள்ளவர் தமிழகத்தை ஆள வேண்டும்' என்றே கூறினார்.

பேட்டியில் எந்த இடத்திலும் அவர் தன் பதவி பறிக்கப்பட்டதற்காக தான் மீண்டும் போராடுவேன் என்று கூறவில்லை. செய்தியாளர் கேட்ட போதுதான் 'மக்கள், தொண்டர்கள் விரும்பினால் ராஜினாமாவை திரும்பப் பெறுவேன்" என்று கூறினார், ஆனாலும் இதிலும் எந்தவித ஆவேசமும் இல்லை.

'நான் வேண்டாம் என்ற போது எனக்குப் பதவியைக் கொடுத்துவிட்டு இப்போது அசிங்கப்படுத்தி அவமானப்படுத்துவது நியாயமா என்று கேட்டேன்" என்று கூறிய அந்த நிலையிலும் தன்னை பரிதாபத்துக்குரியவராகக் காண்பித்துக் கொள்ளாமல், அதேவேளையில் தான் பேச வேண்டியதை ஒளிவு மறைவில்லாமல் பேசியுள்ளார் பன்னீர்செல்வம்.

தமிழகக் கட்சி வரலாற்றில் உட்கட்சி ஜனநாயகம் மேலோங்கி இருப்பதாகக் கூறிக்கொள்ளும் கட்சியில் கூட, ஜனநாயகம் இருப்பதான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ள, ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கட்சியிலும் கூட, இத்தகைய நெருக்கடியில் ஒருவர் வெளியில் வந்து கூட கட்சித் தலைமையை எதிர்த்தோ அல்லது கட்சிக்குள் நிலவி வரும் ஆதிக்கவாத சக்திகளை எதிர்த்தோ இப்படி பேசுவது நடவாத காரியமாகும்.

இந்த வகையில் பன்னீர்செல்வத்தின் பேச்சு ஏதோ அதிமுகவை கைப்பற்றும் சக்திகளுக்கு எதிரானதாக மட்டுமல்லாது, பொதுவாக எந்த ஒரு அமைப்பிலும் தனிமனிதன் தீமைக்கு எதிராக செயல் படுவதன் உத்வேகத்தையும் கடமை யுணர்ச்சியையும் அரசியலுக்கப்பாற்பட்டு, அற ரீதியாக நிலைநாட்டுவதாக அமைந் துள்ளது என்ற கோணத்திலும் பார்க்க வாய்ப்புண்டு.

இந்த வெளிப்படையான நிதானத்திற்குப் பிறகான உண்மை வெளிப்பாட்டிற்கு புறக்காரணங்களைக் காரணம் காட்டி, 'இவரால் தூண்டப்பட்டார்', 'ஏன் இதனை அவர் முன்னமேயே கூறவில்லை' என்று பல்வேறு விதமாக சந்தேகங்களைக் கிளப்புவது என்றும் எடுபடப்போவதில்லை. ஏனெனில் பன்னீர்செல்வத்தின் உண்மை வெளிப்பாடு இந்த ஹேஷ்யங்களையும் அரசியலுக்கே உரித்தான யூக சொல்லாடல் களையும் உடைத்து நொறுக்கியுள்ளது.

பன்னீர்செல்வத்தின் இந்த பாதைத் திறப்பு பேட்டிக்குப் பிறகே, 'நாங்கள் அவரை ராஜினாமா செய்ய நிர்பந்திக்கவில்லை' ரக போலி நியாயப்பாடுகள் ஒருபோதும் பொதுவெளியில் எடுபடப்போவதில்லை.

இதற்கு முன்பு பலரும் 'காலில் விழும் கட்சி', 'அடிமைகள்' 'உட்கட்சி ஜனநாயகம்' இல்லாத கட்சி என்றும் வர்ணிக்கப்பட்ட ஒரு கட்சியிலிருந்து, கேலி பேசப்பட்ட கட்சியிலிருந்து இத்தகைய போர்க் குரல் வெளிவந்திருப்பது தமிழகத்தில் செயல்படும் 'உட்கட்சி" ஜனநாயகம்' இருப்பதான மாயத்தோற்றத்தை உருவாக் கியுள்ள கட்சிகளுக்குமே பெரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள பேட்டி என்பதில் இருவேறு கருத்துகள் இல்லை.

எப்போதுமே ஜனநாயகம் என்பது உட்கட்சி ஜனநாயகமாக இருந்தாலும் பொதுப்படையான ஜனநாயகமாக இருந்தாலும் 'ரகசியம்' பாதுகாக்கப்படாமல் சாத்தியமில்லை. அதே வேளையில் முரண் இயங்கியல் ரீதியாகப் பார்த்தோமானால் முழு அடக்குமுறையும் சாத்தியமில்லை உண்மை பீறிட்டுக் கொண்டு வரும் என்பதை பன்னீர்செல்வத்தின் பேச்சு உறுதி செய்துள்ளது.

அரசியல் வரலாற்றில், அரசியலில் கட்சிகளின் வரலாற்றில் அடக்குமுறை செய்து குரல்வளையை நெறிக்கும் காலக்கட்டம், பிற்பாடு பெரிய அளவில் வெடித்துச் சிதறி உண்மைகள் வெளிவருவதும் ஜனநாயகம்தான் எங்கள் அடிநாதம் என்று கூறும் ஒன்றிலிருந்து உண்மைகள் வெளிவராமலேயே போய்விடுவதும்தான் வாடிக்கை.

இந்நிலையில் புன்னீர்செல்வத்தின் இந்தப் பேட்டி தமிழக வரலாற்றில் மட்டுமல்ல இந்திய அரசியலிலேயே 'பாதை திறப்பு' ஏற்படுத்திய ஒரு வெளிப்பாடு என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க வாய்ப்பில்லை.

இந்த நீண்ட பேட்டியில், முன்பு நடந்த வற்றை விவரிக்கும்போது உணர்ச்சிவசப் படக் கூடிய சூழலை எட்டியபோதும், தன்னிலை மறக்காமல் எந்த ஓர் இடத்தில் தாம் குற்றம்சாட்டியவர்களை கண்ணியம் குறைவாக பேசவில்லை என்பது ஓபிஎஸ் அரசியல் நாகரிகத்தின் வெளிப்பாடாகவும் பார்க்கலாம்.

ஓ.பன்னீர்செல்வத்தின் நீண்ட பேட்டி யையும் அவரது உடல் பாவனைகள் பேசிய விதத்தை அடிப்படையில் உளவியல் ரீதியிலான பார்வை அணுக முற்பட்டு இக்கட்டுரை எழுதிக் கொண்டி ருந்த வேளையில், அவரது இன்னொரு சிறு பேட்டி நேரலையில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அதில், ஸ்டாலினைப் பார்த்து நேரில் சிரித்தது குறித்து சசிகலா குற்றச்சாட்டு எழுப்பியதற்கு பதில ளிக்கும் வகையில் அவர் பேசும்போது, "மிருகங்களால் சிரிக்க முடியாது. மனிதர் களால் மட்டுமே சிரிக்க முடியும். ஸ்டாலி னைப் பார்த்து சிரிப்பது குற்றமாகாது" என்று சற்றே நிதானம் குன்றாமல் சிரித்தபடி கூறியதும் அவரது தெளிவான உளவியல் அணுகுமுறையைக் காட்டியது. அப்போது, அவர் வசம் இருந்த அதிமுக பொருளாளர் பதவி பறிக்கப்பட்டிருந்ததும் கவனிக்கத்தக்கது.

**நீண்ட பேட்டியில், முன்பு நடந்தவற்றை விவரிக்கும்போது உணர்ச்சிவசப்படக் கூடிய சூழலை எட்டியபோதும், தன்னிலை மறக்காமல் எந்த ஓர் இடத்தில் தாம் குற்றம்சாட்டியவர்களை கண்ணியம் குறைவாக பேசவில்லை**

## விளம்பரத் தொடர்புகளுக்கு
# 076 825 5567, 021 492 7561

# IECE
INSTITUTE of ENGLISH & COMPUTER EDUCATION
IELTS™ Now Prepare for Your IELTS Exams
Academic Level and General Training
IELTS™ Life Skills
Level A1 & B1
E.mail: info.iecejaffna@gmail.com
121/1(219/A) Arasady Road, Kantharmadam, Jaffna. Sri Lanka
012 221 9140/ 021 567 4133/ 077 378 0390

Green Grass valampuri hotel
# THE VALAMPURI
A Small Luxurious Hotel in Jaffna
148/10, Station Road, Jaffna
Tel : 021 222 0111 / 3444
Web : www.valampurihotel.com
E-mail : info@valampurihotel.com



10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்

Bright Inn
# BRIGHT INN
பிறையிட் இன் ஹோட்டல்




அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம். பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | இவை அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் BRIGHT INN | |

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு
**0112 329664, 0117 242233, 0117 242244**
E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com
HOT LINE 0777 983933




We are Specialist in
Wedding Suits | Wedding Sarees | Party Sarees | Wedding Frocks | Party Frocks
and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No. 72, Grand Bazaar, Jaffna. | No. 80/24, Kasthuriyar Road, Jaffna. | No. 195, Power House Road, Jaffna. |
| Tel : 021 222 4743 | Tel : 021 222 4643 | Tel : 021 222 4933 |
| Fax : 021 222 7645 | E-mail : topazagn@gmail.com | 021 221 9933 |
















இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 12.02.2017 அன்று வெளியிடப்பட்டது.